விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 04 வெள்ளிக்கிழமை (19.06.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 182

குருவாரம்
25வது ஆண்டு பீடாரோகணம்
தவத்திரு கணேசானந்த
மகாதேவசுவாமிகள்



ஆச்சிரம மண்டபம்
21.06.2015
ஞாயிறு
கிளிநொச்சி
மகாதேவ ஆச்சிரமம்
(C-1279)

# பிரதமர் வேட்பாளராக மகிந்த போட்டியிட முடியாது

## இறுதி முடிவு அறிவிப்பு

(கொழும்பு)

**பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராக போட்டியிட இடமளிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்**

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம் பெற்ற போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதம வேட்பாளராகவோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் வேட்பு மனுவோ அல்லது தேசியப் பட்டியலோ வழங்கப்பட மாட்டாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

எனவே மகிந்த ராஜபக்ஷ தற்போது வீட்டில் இருப்பதே நல்லது. அவர் பாராளு

24ஆம் பக்கம் பார்க்க....

## போதைப் பாக்குடன் இந்திய பிரஜை கைது

(கரணவாய்)

தடைசெய்யப்பட்ட நிஜாம் பாக்கினை உடன் வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு சுற்றுலா விசாவில் இலங்கை வந்த இந்திய பிரஜை ஒருவரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருப்பூரினைச் சேர்ந்த சுப்பிரமணியம் செந்தில்குமார் (32) என்ற குறித்த நபரை மந்திகையில் வைத்து நேற்றுக் காலை அவர் தங்கியிருந்த வாடகை வீட்டில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபரிடமிருந்து போதையை ஏற்படுத்தக் கூடிய 232 நிஜாம பாக்கு பைக்கற் கைப்பற்றப்பட்டுள்ளன. நேற்றையதினம் குறித்த நபரை

24ஆம் பக்கம் பார்க்க....

## மோ.சைக்கிள் விபத்து இளைஞன் உயிரிழப்பு

(கரணவாய்)

கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேலும் இரண்டு இளைஞர்கள படுகாயமடைந்தனர். இவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா

24ஆம் பக்கம் பார்க்க....

## வன்செயல்களைத் தடுக்கும் பொலிஸ் சைக்கிள் ரோந்து




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும வன்செயல்களை கண்டித்தும் அதனை தடுக்கும் வகையிலும் பொலிஸ் சைக்கிள் ரோந்து சேவை நேற்றைய

24ஆம் பக்கம் பார்க்க....

## வலம்புரி ஆசிரியர் தலையங்கத்துக்கு மாவை சேனாதிராசா எம்.பி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வலம்புரியில் நேற்று வெளியான ஆசிரியர் தலையங்கத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா விளக்கமளித்துள்ளார். அது அப்படியே இங்கு பிரசுரமாகிறது.

தங்கள் வலம்புரி ஏடு 18.06.2015 ஆம் நாள் வெளியீட்டில் ஆசிரியர் தலையங்கத்தைப் படித்தேன். "முதல்வர் விக்னேஸ்வரனிடம் விளக்கம் கேட்கக் கூடாது" என்று தலைப்பிட்டு தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது.

16.06.2015-ல் இலங்கைத் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. நண்

24ஆம் பக்கம் பார்க்க....

## பாடசாலை இடைவேளையின் போது இரு மாணவரிடையே கத்தி வெட்டு

### பிரபல பாடசாலை ஒன்றில் சம்பவம் பொலிஸார் தீவிர விசாரணை

(யாழ்ப்பாணம்)

மாணவன் ஒருவனை பாடசாலையில் வைத்து மற்றொரு மாணவன் வெட்டிக் காயப்படுத்தியமை தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற கொண்டுள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல

24ஆம் பக்கம் பார்க்க....

## மேலும் 30 பேருக்கு நேற்று பிணை அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரத்தில் குழப்பம் விளைவித்தமை. பொலிஸ் கண்காணிப்பகம் மீது தாக்கியமை. மற்றும் சமிக்ஞை விளக்கை சேதப படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்டவர்களில் 30 பேருக்கு தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் செல்ல யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் அனுமதியளித்துள்ளார்.

இவர்கள் மாதாந்தோறும் வரும் இறுதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திடவேண்டும் என்பதுடன். பிணையில் உள்ள காலத்தில் குற்றச் செயல்களில் ஈடுபட்டு மீண்டும் கைது செய்யப்பட்டால் பிணை ரத்துச் செய்யப்படும் என்ற நிபந்தனையுடன், விடுவிக்கப்பட்டனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

## போதைப்பாக்குடன் மாணவர்கள்; அதிகாரிகள் அதிரடி நடவடிக்கை

### விற்பனை செய்த இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பாக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது.

யாழ்ப்பாண நகருக்கு அண்மையில் உள்ள பாடசாலையில் கல்வி பயிலும் தரம்-07 மாணவர்கள நால்வருக்கு இவர்கள் போதைப் பாக்கினை விற்பனை செய்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக கிடைத்த தகவலையடுத்து குறித்த பாடசாலைக்குச் சென்ற மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் மாணவர்களிடமிருந்து பாக்குகளைக் கைப்பற்றியதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

இந்நிலையில் மாணவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் பாக்கு விற்பனையில் ஈடுபட்ட இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு மாணவர்களிடம் கைப்பற்றப்பட்டவை மாவா. பாபுல் எனப்

24ஆம் பக்கம் பார்க்க....

**நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் புதுரக வைரஸ் காய்ச்சலுக்கு 9 கர்ப்பிணிகள் பலி

(கொழும்பு)

இலங்கையின் பல பகுதிகளில் பரவி வரும் புதுவகையான வைரஸ் காய்ச்சல் காரணமாக கடந்த சில வாரங்களில் ஒன்பது கர்ப்பிணிப் பெண்கள் உட்பட பலர் மரணமடைந்திருப்பதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இன்புளுயென்சா "ஏ"யில் எச்1 என்1 எனப்படும் வைரஸ் காய்ச்சல் என இது அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது.

வடக்கில் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இந்தக் காய்ச்சல் பரவியிருப்பதாக வவுனியா அரச பொது மருத்துவமனையின் பதில் மருத்துவ பணிப்பாளர் சுதர்சினி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள், மற்றும் 65 வயதுக்கும் மேற்பட்ட முதியவர்களையே இந்தக் காய்ச்சல் அதிகம் தாக்குவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முதியவர்களில் இரத்த அழுத்தம், சிறுநீரகக் கோளாறு போன்றவற்றினால் பாதிக்கப்பட்டவர்களே இந்த காய்ச்சலினால் கூடுதலாக பாதிக்கப்படுவதாக மருத்துவர் சுதர்சினி கூறினார். (எ-11)

# சுதந்திரமாக இருங்கள் கோத்தபாயவுக்கு ஆலோசனை

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தனது கடமையை எந்த குறைவும் இன்றி முழுமையாக நிறைவேற்றியதாகவும், தற்போது அவர் சுதந்திரமாக இருக்க முடியும் எனவும் அஸ்கிரிய மாநாயக்கர் கலகம ஸ்ரீ அத்ததஸ்சி தேரர் தெரிவித்துள்ளார்.

பொப்பிலியான சுனேத்ராதேவி விகாரையில் நடைபெறவுள்ள பிரித் உபதேச நிகழ்வுக்கு மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்களுக்கு அழைப்பு விடுப்பதற்காக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கண்டிக்கு சென்றிருந்ததுடன் மாநாயக்க தேரர்களையும் சந்தித்தார்.

அப்போது அஸ்கிரிய மாநாயக்கர், முன்னாள் பாதுகாப்புச் செயலாளருக்கு ஆசி வழங்கினார்.

நீங்கள் உங்கள் கடமையை எந்த குறைவுமின்றி நிறைவேற்றியுள்ளீர்கள். அதில் எந்த குறைவுமில்லை.

பிள்ளைகள் இருந்தால், அவர்களை கவனித்து கொண்டு தற்போது சுதந்திரமாக இருங்கள். நீங்கள் ஒரு பெரிய கடமையை நிறைவேற்றியுள்ளீர்கள்.

அது போதுமானது என அஸ்கிரிய மாநாயக்கர் கோத்தபாயவிடம் கூறியுள்ளார். (எ-11)

# கல்விமாணி கற்கை நாளை ஆரம்பம்

தேசிய கல்வி நிறுவக கல்விமாணி கற்கைநெறி 2013/2015 அணியைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்களுக்கான இரண்டாம் வருட பயிற்சிநெறி நாளை 20ந் திகதி சனிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி கற்கை நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளதாக அதன் இணைப்பாளர் செ.சேதுராஜா அறிவித்துள்ளார். (ந)

# ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

தி.பினான்ஸ் கம்பனியில் 75ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள நிறுவனத்தின் காரியாலயத்தில் கொண்டாடப்படவுள்ளது. (எ-11)


## தேவை

**Airport**

கல்வித் தகைமையுள்ள/ அற்ற, பயிற்சியுடைய/ அற்ற 18-50 வயதிற்கிடைப்பட்ட ஆண்/ பெண் இருபாலாருக்கும் துறைமுகம்/ விமான நிலையங்களில் வேலை.

தொடர்பு கொள்ள அழையுங்கள்:-0777726925 (790)

## தேவை

**Driving**

இலங்கையில் பிரசித்தி பெற்ற வியாபார ஸ்தாபனங்களுக்கும் மற்றும் துறைமுக/விமான நிலையங்களுக்கும் மென்ரக/கனரக சாரதிகள். சாரதி உதவியாட்கள் உடனடியாகத் தேவை.

18-55 (45,000/--50,000) தங்குமிடம், உணவு செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள அழையுங்கள்:-

0771638637 (790)

## தேவை

**Production**

பிரபல்யமான தொழிற்சாலைக்கு மேற்பார்வையாளர்கள் மற்றும் உதவியாட்கள் 18-55 வயதிற்கிடைப்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தேவை. 35,000/- -45,000/- உயர்ந்த சம்பளத்துடன் தங்குமிடம், உணவு செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள இப்போதே அழையுங்கள்:-

0776445245 (790)

# SPEED
PURIFIED DRINKING WATER

## சுத்தமான குடி தண்ணீர்

**விசேட விலைக் குறைப்பு:** மொத்த விநியோகஸ்தர்கள் திருமண மண்டபங்கள் விடுதிகள், ஹொட்டல்கள், மங்கல நிகழ்வுகள். மொத்தமாக கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு

**ஸ்ரீமுருகன்**
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392




(C-8284)


# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
12 - 06 - 1947



மறைவு
20 - 05 - 2015

திதி:-திருதியை

அமரர்

## செல்வி கந்தையா தனபாக்கியவதி (தனம் ரீச்சர்)

அன்புக்கு ஓர் எடுத்துக் காட்டாய் அகிலமதில் வாழ்ந்தீர்-அம்மா
எம்மை அந்தரிக்க விட்டுவிட்டு எங்கே சென்றீர்?
எண்ணும் எண்ணமதில் நீர் எந்த திசையிலும் உம் விம்பம்
விம்முகின்றோம் வருக எம் முகம் காண

குறிப்பு:-இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம். இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

மீளாத்துயருடன்..
குடும்பத்தினர்.

(792)

# 31 நாளில் துயர் பகிர்கின்றோம்

மண்ணில்
1946 - 10 - 20



விண்ணில்
2015 - 05 - 20

## அமரர் முருகுப்பிள்ளை சிவபாக்கியம்

4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு

மாதம் ஒன்று கடந்தாலும்
மனங்களில் நிறைந்திருக்கும்
மாண்புடன் மனையாண்ட
மாணிக்கமே மறைந்தீரோ எமைவிட்டு

அன்னாரின் பிரிவுத் துயருறும் எங்கள் நண்பன் தீபன் (பிள்ளையார் காட்வெயர் புதுக்குடியிருப்பு) அவர்களின் துயரில் நாமும் பங்கெடுப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திடைய எல்லாம் வல்ல உலகளந்த விநாயகனை வேண்டி நிற்கின்றோம்.

நண்பர்கள்
புதுக்குடியிருப்பு
லண்டன்

(சி-1324)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு – செங்கலடி – ரமேஸ்புரம்

# ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி தேவஸ்தானம்

புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேகம்

**கர்மாரம்பம்**
மன்மத வருடம் ஆவணி 27-ம் நாள்
13.09.2015 ஞாயிற்றுக்கிழமை
நண்பகல் 12.00 மணி

**மஹா யாகாரம்பம்**
மன்மத வருடம் ஆவணி 28-ம் நாள்
14.09.2015 திங்கட்கிழமை
மாலை 6.00 மணிமுதல்

**திருவிளக்குப்பூஜை**
மன்மத வருடம் ஆவணி 28-ம் நாள்
14.09.2015 திங்கட்கிழமை
மாலை 7.00 மணிமுதல்

**பக்தர்கள் எண்ணெய்க்காப்பு**
மன்மத வருடம் ஆவணி 29-ம் நாள்
15.09.2015 செவ்வாய்க்கிழமை
காலை 7 மணி - பி.ப. 5 மணிவரை

**மங்கள மன்மத வருடம் ஆவணி 30-ம் நாள் (16.09.2015) புதன்கிழமை**
**காலை 10.00 மணி மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்**

இலங்கையின் முதலாவது இந்துமத குருபீடாதிபதி சிவாகமஞானி
அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்

சங்கானை ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தான ஆதீன குருமுதல்வர் சிவாகமஞானி
சிவப்பிரம்மஸ்ரீ சிவ.நித்தியானந்த சிவாச்சாரியார்

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சபரிமலைக் குரு முதல்வர் பிரதிஷ்டா சிரோமணி - சிவாகம கலாநிதி ஆன்மீக அருள்ஜோதி

## ஸ்ரீ ஜயபதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார்

அவர்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெறும்



சாதகாசிரியர்கள் : சிவப்பிரம்மஸ்ரீ - நித்திய - சிவானந்த சிவாச்சார்யார்
பிரம்மஸ்ரீ நித்ய - சுதானந்த சர்மா (IDM சங்கானை)
ஆலய பரிபாலன சபை செங்கலடி, ரமேஸ்புரம், மட்டக்களப்பு

ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ த.ஜெயக்குமார சர்மா (மட்டக்களப்பு)
மேற்படி ஆலய கும்பாபிஷேகத்திற்கு நன்கொடை வழங்க விரும்புவோர் கீழ்க்காணும்
வங்கிக்கணக்கு இலக்கத்துக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.
ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் - A/C No 2272001 40023430
மக்கள் வங்கி, செங்கலடிக் கிளை.

(782)

அனைவரும் வருக!

ஸ்ரீ சித்திரவேலன் அருள் பெறுக!!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 221

# பொறாமையிலிருந்து விடுதலை!

... நமக்கு ஏதாவது வேண்டியிருக்கும் வரையில் நாம் அதற்காக கடவுளுக்கு லஞ்சம் கொடுப்போம். நமக்கு அது கிடைத்தவுடன், அடுத்த ஆசை எழும் வரையில் அவரை கை கழுவி விடுவோம். நமக்கு இவ்வாறு செயற்படத்தான் சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சொல்லுங்கள்.... ஏதேனும் கேட்க விரும்புகிறீர்களா?

ஸ்வாமிஜி நம் சடங்குகளைப்பற்றி பேசும் பொழுது, தயவுசெய்து சடங்குகளின் மார்க்கத்தைப் பற்றியும், தியானமார்க்கத்தைப் பற்றியும் கொஞ்சம் சொல்ல முடியுமா?

சொல்லுகிறேன்...

பாருங்கள், சடங்குகளை பொறுத்தவரை, ஏதோ ஒரு நிச்சயமான தன்மை இருக்கின்றது. அது ஒழுங்காக வடிவமைக்கப்பட்டிருகிறது. நீங்கள் சரியாக எப்பொழுது ஆரம்பிக்கப் போகி றீர்கள், எப்பொழுது முடிக்கப் போகிறீர்கள், எங்கு செய்யப் போகிறீர்கள், எதற்காக செய்யப் போகிறீர்கள் என்பதெல்லாம் உங்களுக்குத் தொரியும். சடங்குகளை பொறுத்தவரை நீங்கள் உள்ளே சென்றுவிட்டு மீண்டும் அதே மனிதனாக வெளியே வந்துவிடுகிறீர்கள். மொத்த செயல்முறையிலுமே மிகுந்த பாதுகாப்பு இருக்கின்றது. அதனால் தான் அது இவ்வளவு தூரம் பரவியிருக்கின்றது. நிச்சயமான தன்மை கொண்ட எதுவுமே சுலபமாக பரவிவிடுகின்றது.

ஆனால் தியானத்தில் என்ன நிகழ்கின்றது? முதலில் சடங்குகளுடன் ஒப்பிடும் பொழு து, பலனளிப்பதில் தியானம் மிகவும் எளிமையானதாக தோன்றுகின்றது. நான் ஏன் ஆச்சிரமத்தில் சடங்குகளைச் செய்கின்றேன் என்று மக்கள் என்னிடம் எப்பொழுதும் கேட்பதுண்டு. நான் அவர்களிடம் சொல்லுவேன், மக்களை வெறுமனவே ஆச்சிரமத்திற்கு வந்து ஆலமரத்தடியில் அமர்ந்து தியானம் செய்யுங்கள்- உண்மையில் இதுவே போதுமானது - என்றால் அவர்கள் கேட்பார்களா?

இப்பொழுது இங்கு தட்சணாமூர்த்தி சிலையும், நடராஜர் விக்கிரகமும் இல்லையென்றால், அவர்கள் இங்கே அவற்றை பார்க்வில்லையென்றால், வெறு மனே வெறும் திறந்த வெளியை யும் ஆல மரத்தையும் பார்ப்பதற்கு வருவார்களா? அனேகமாக நான் மட்டுமே ஆலமரத்தடியில் அமர்ந்து தியானம் செய்துகொண்டிருப்பேன்.

(பலத்த சிரிப்பலைகள்)



மக்களை, அவர்களது உள்நோக்கிய பயணத்தில் முதலடியை எடுத்து வைக்க வைப்பதற்கு, அவர்கள் மனதிலிருக்கும் சில சிக்கலான விசயங்களை நான் காண்பிக்கவேண்டியதாக இருக்கின்றது. இல்லர்விட்டால் அவர்களைக் கவர முடியாது. நான் அவர்களது மொழியிலேயே பேசவேண்டியதிருக்கின்றது. தட்சணாமூர்த்தி சிலை அங்கு இல்லாவிடினும் உண்மையிலேயே ஆலமரத்தைச் சுற்றியுள்ள சக்திக்களம் இருக்கும் என்பதை அறியாமல், அவர்கள் ஆலமரத்தடியிலிருக்கும் தட்சணாமூர்த்தியைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றார்கள். இந்த ஆலமரமானது உயிருள்ள சக்தியாகும். அதன் அமைதி அதிர்விலேயே இருக்கும் அமைதி.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

**உள்ளத்தை வெட்ட வெளிச்சமாக்கும் கண்ணாடி!**

கணனி மென்பொருள் தயாரிப்பில் முன்னணியில் உள்ள மைக்ரோசாஃப்ட் நிறுவனம், ஒருவர் நினைப்பதை தெளிவாக காட்டும் மூக்கு கண்ணாடியை உருவாக்கியுள்ளது.



இந்த கண்ணாடியில் பல நுண்ணுனர்வுக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதனால் கண்ணாடி மூலம் காணப்படுபவரின் உடல் வெப்பத்தைக் கூட எளிதாக அறிய முடியும்.

மேலும், எதிரில் உள்ள ஒரு நபரின் செய்கைகள், குரல் ஆகியவற்றை மைக்ரோசாஃப்டின் இணையத் தகவல் சேமிப்பகத்துக்கு அனுப்பி உடனுக்குடன் ஆய்வு செய்து, அவரது எண்ணங்கள் குறித்த தகவல்கள் மூக்குக் கண்ணாடி அணிந்தவருக்கு அளிக்கப்படுகிறது.

இதில் உருவாக்கப்பட்டுள்ள மென்பொருள், வெவ்வேறு வகையான எண்ணங்களையும் சரியாக வேறுபடுத்தி, தகவல் அளிக்கக் கூடியதாக உள்ளது.

இந்த கண்ணாடிக்கு காப்புரிமை பெற, கடந்த 2012ஆம் ஆண்டு அமெரிக்க காப்புரிமை அலுவலகத்தில் மைக்ரோசாஃப்ட் விண்ணப்பித்தது.

இருப்பினும் இந்த மூக்குக் கண்ணாடி விற்பனைக்கு வருமா என்பது குறித்த தகவல்களை அந்த நிறுவனம் வெளியிடவில்லை.

# சமைப்போம் சுவைப்போம்

## வெஜ் சலாட்



தே.பொருட்கள்:

வெள்ளரிக்காய் - 200 கிராம்
வெங்காயம் -200 கிராம்
கரட் - 100 கிராம்
தாக்காளிப்பழம் - 2
வெங்காயத்தாள் - 10
கறிவேப்பிலை - 1 பிடி
பச்சைமிளகாய் - 2
குடைமிளகாய் - 1

செய்முறை

வெள்ளரிக்காய், பெரிய வெங்காயம், கரட், தக்காளிப்பழம், வெங்காயத்தாள், கறிவேப்பிலை, பச்சைமிளகாய், விதை நீக்கிய குடைமிளகாய், எல்லாவற்றையும் பொடிப்பொடியாக நறுக்கி வைக்கவும்.

நறுக்கிய காய்களுடன் ஒரு ஸ்பூன் சீரகத்தூள், ஒரு ஸ்பூன் மிளகுத்தூள் ,1/4 ஸ்பூன் மிளகாய்த்தூள், 2 ஸ்பூன் எலுமிச்சை சாறு, துருவிய இஞ்சி சிறிது, தேவையான அளவு தூள் உப்பு, கெட்டியான தயிர் 1/4 தம்ளர் ஆகியவற்றைக் கலந்து நன்றாக சேர்த்து பாத்திரங்களில் வைத்து பரிமாறவும்.

## ரிப்ஸ்:

இரவில் படுக்கும் போது பாலில் சுக்கு மிளகு, ஓமம், பனங்கற்கண்டு, மஞ்சள்தூள் இவற்றைப் போட்டு காய்ச்சி வடிகட்டிப் பருகினால் பனிக்காலத்தில் ஏற்படும் தொண்டைச்சிரமங்கள் வராது.

எல்லாத் தாயாரிப்புக்களிலும் தேங்காய் பூஅல்லது அரைத்த தேங்காயை இறக்குவதற்கு 2 நிமிடங்களுக்கு முன் போடவும். ஏனேனில் தேங்காய் அதிக நேரம் வேக வைக்கக் கூடாது.

சில்வர் பாத்திரங்களைக் கழுவும் போது நீரில் சிறிதளவு வினாகிரியையும் சேர்த்துக் கழுவ பாத்திரங்கள் எப்போதும் பளபளக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய காலிமுகத்திடல் சுற்றுவட்டம் ஜனாதிபதியால் அங்குரார்ப்பணம்



புதிதாக அமைக்கப்பட்ட காலிமுகத்திடல் சுற்றுவட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

ஜனாதிபதி அலுவலகத்தின் அருகில் அமைந்துள்ளசுற்றுவட்டம்அலங்கார நீர்த்தூவி முறைமையையும் மின்னொளி முறைமையையும் கொண்டுள்ளது.

இச்சுற்றுவட்டம் அமைந்துள்ள இடத்தைச் சுற்றி இலங்கையில் முன்னணி நட்சத்திர ஹோட்டல்கள் சில அமைந்துள்ளன. அத்துடன் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் தினசரி உலாவுகின்ற வலயமாக இது இருப்பது சிறப்பம்சமாகும்.

இதை நிர்மாணிக்கின்றபோது இலங்கையின் அடையாளத்தை எடுத்துக்காட்டுகின்ற சிங்க உருவங்களும் ஏனைய சிற்பங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

காலிமுகத்திடல் சுற்றுவட்டத்தை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான சஜித் பிரேமதாச, ஏ.எச்.எம்.பௌசி, அகிலவிராஜ் காரியவசம், அர்ஜுன ரணதுங்க, கொழும்பு நகர பிதா ஏ.ஜே.எம்.முஸம்மில் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (இ-5)

# பொதுநூலகம் இன்று திறப்பு

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட செம்பியன்பற்று மருதங்கேணி பகுதியில் பொது நூலகம் ஒன்று இன்று பிற்பகல் 2 மணியளவில்திறந்துவைக்கப்படவுள்ளதாகபருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் பூ.சஞ்சீவன் தெரி வித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு மாதத்துக்கு ஒரு மில்லியன் வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு மில்லியன்ரூபா செலவில் இப் பொதுநூலகம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்விற்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# ஆய்வுகூடம் திறப்புவிழா

யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் தொழில்நுட்ப ஆய்வு கூடத் திறப்பு விழா இன்று 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணியளவில்அதிபர்சண்முகநாதன்வேலழகன் தலைமையில் இடம்பெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்து கொள்ளவுள்ளார்.(இ-3-7)

# நேர்மையாகச் சேவையாற்றியிருந்தால் யாரும் அஞ்சவேண்டிய அவசியமில்லை

## கரு ஜயசூரிய தெரிவிப்பு



(கொழும்பு)

**நேர்மையாகச் சேவையாற்றியிருந்தால் யாரும் அஞ்ச வேண்டிய அவசியமில்லை என அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

மக்கள் பல்வேறு அழுத்தங்கள், கொலை மிரட்டல்களுக்கு மத்தியிலும் தைரியமாக தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளனர்.

மக்கள் புதிய அரசியல் கலாசாரமொன்றை உருவாக்கியுள்ளனர்.

மிகவும் சொற்ப அளவிலானவர்கள் நல்லாட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நல்லாட்சியைக் கண்டு அஞ்சுகின்றனர்.

எனினும், நாம் ஒரு போதும் குரோத அரசியலில் ஈடுபடப் போவதில்லை. குற்றவாளிகளை பாதுகாக்கப் போவதுமில்லை.

மக்களுக்காகவும் நாட்டுக்காகவும் மெய்யான நோக்கில் சேவையாற்றியிருந்தால் எந்தவொருவரும் உண்மையைக் கண்டு அச்சம் கொள்ள வேண்டியதில்லை என அமைச்சர் கரு ஜயசூரிய மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சம்பள அதிகரிப்பின் மிகுதி 2000 இம்மாதம் கிடைக்கும்

அரசாங்க ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள 10 ஆயிரம் ரூபா சம்பளத் தொகையின் இறுதி 2 ஆயிரம் ரூபா இந்த மாத சம்பளத்துடன் வழங்கப்படவுள்ளதாக பொது நிர்வாக மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அனைத்து அரச திணைக்கள மற்றும் அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இதற்கான உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கிணங்க ஏற்கனவே 8ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் மீதமான 2ஆயிரம் ரூபா ஜ"ன் மாத சம்பளத்துடன் வழங்கப்படவுள்ளது.

அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி அமைச்சின் செயலாளர் ஜே.தடல்லகேயினால் 05/2015 இலக்க அரசாங்க நிர் வாக சுற்றறிக்கை ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்தது. இச்சுற்ற றிக்கையின் பிரகாரம் ரூபா 2 ஆயிரம் கொடுப்பனவு ஜ"ன் மாதம் வழங்கப்படவுள்ளது.

2015 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான இடைக்கால கொடுப்பனவுகளை வழங்குதல் எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட 2014.11.12 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அரசாங்கத் துறையில் சேவையாற்றுகின்ற அலுவலகர்களுக்கு ஏற்கனவே 2014 இல் அதிகரித்து வழங்கப்பட்ட ரூபா 3 ஆயிரம் மாதாந்த இடைக்கால கொடுப்பனவுக்கு மேலதிகமாக 2015 பெப்ரவரி மாதத்திலிருந்து ரூபா 5 ஆயிரம் இடைக்கால கொடுப்பனவு வழங்கப்பட்டது.

அரசாங்கத்துறை அலுவலர்களுக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட மாதாந்த கொடுப்பனவு ரூபா 10ஆயிரத்தில் செலுத்த வேண்டிய எஞ்சிய தொகையான 2ஆயிரம் ரூபா 2015 ஜ"ன் மாதத்திலிருந்து வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்படல் வேண்டும் எனவும் குறித்த சுற்றுநிருபத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் ரூபா 2ஆயிரம் இடைக்கால கொடுப்பனவு இம்மாத சம்பளத்துடன் வழங்கப்படவுள்ளது. (இ-5)






# இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு மூன்றாம் திருவிழா



## அன்னபூரணி!

அன்னபூரணி எங்கள் அழகு பூரணி
அடியவரைக் காக்கும் நல்ல நாகபூஷணி
அகில மெல்லாம் ஆளும் அவள் மந்தாகினி– அந்த
ஆடற்கலை நாயகனின் ஆதிசக்தி நீ– அன்ன
சொல்லும் சக்திபோல் வரும் வேதநாயகி– வானில்
சுடராக ஒளியைத் தரும் லோகநாயகி

கல்லும் இங்கு கதைகள் சொல்லும்
பார்க்க வாரும் நீர்– நல்ல
அம்மன் அடி தொட்டு அருள்
கேட்க வாரும் நீர்– அன்ன
தூய லிங்கம் அருகிருக்கும் தூயநாயகி
நெஞ்சம் அலை மோதும் வேளை
வந்து அணைக்கும் நாயகி

மந்தாகினி அவள் சூலாயினி
மறைகள் எல்லாம் போற்றும் தேவ வடிவாகினி

*குலனையூர் பாவரன்,*
*குட்டிநகர், வவுனியா.*

## வாழ வழி செய்யும் வடிவழகி...

ஆழி சூழழகிய நயினையிலமர்ந்து
ஆதி சக்தியாய் அருமருந்தாய்க் கொடும்
பாழும் பிறவிப் பழவினையறுத்துவரும்
பகையொறுத்து பலவரமருளிப் பக்தர்
வாழ வழி செய்யும் வடிவழகிவண்டமிழ்
வாழ்த்தழகிவன் பாளிப்பங்கம் விலக்கி
மேமி சிறக்க மிகு சைவம் விளங்க
வாழிய நீ வாழ்க வளமுடன்!

*காரைக்கவி*

## சீர்தூக்கிப் பார் தாயே!

ஆழ்கடல் சூழ் அவனியிலே
அகிலம் போற்றும் நாயகியே–நின்
தாழ்பணிந்து நிதம்துதிப்போர் குறைகளை நீ தீருமம்மா!
நீ இருந்து கோலோச்சி நின்பார்வை விழும் பதியில்
ஆர் எவனோ வந்து செய்த பாதகர்கள் செய் கொடுமை
சீர் தூக்கிப்பார் தாயே! பல்லவத்தாயவளே!
பாரிடம் வாழ் பாதகர்க்கு என்ன நீதி தருவாயோ?
நீ இருக்கும் இடம்தேடி வருகின்ற
பக்தரெல்லாம்– நல்
வாழ்வுதனைத் தருவாயே! நாயகியே என்று போற்றி– நின்
சேயாக நாம் வந்து மணிபல்லவத்தை வணங்குகின்றோம்
தாயாக அரவணைத்து தரணியை நீ காத்திடம்மா!

*ப.அருமைநாதன் (இணுவில்)*

## நாகபூஷணித்தாயே...

நயினை தனில் வீற்றிருந்து– நலம்
தரும் நாகபூஷணித்தாயே
கடல் கடந்து கவலைகள் நீங்க– உன்னை
நாடிவரும் பக்தர்களுக்கு அருள்புரிபவளே
சுற்றும் கடல்சூழ தீபமாய்
வீற்றிருந்து காட்சியளிப்பவளே
நாக குடையின் கீழ் வீற்றிருந்து
நாடு சிறக்க வழியமைப்பவளே
நாகபூஷணித்தாயே
உன் பாதம் பணிந்தோம்.

*ம.மதுசாளினி, தரம் 11B,*
*உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோல் குண்டுடன் கைதானவர்களுடன் பல்கலைக்கழக மாணவன் ஏன் இருந்தார்?

## நீதிபதி கேள்வி; பிணையும் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம 26 ஆம் திகதி பெற்றோல் குண்டுகள். கோடரி பிடிகள், பொல்லுகள் சகிதம் கைது செய்யப்பட்ட இளைஞர்களுடன்யாழ் பல்கலைக் கழக மாணவன் ஒருவர், இருந்தது ஏனென, யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

சுன்னாகம் பகுதியில் 10 இளைஞர்களை பொலிஸார் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததையடுத்து, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் சதீஸ்கரன் உத்தரவிட்டிருந்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்த 10 பேரில் ஒருவர் யாழ். பல்கலைக்கழக மாணவன்என தெரிவித்து, அவர் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியிருப்பதனால், அவரை பிணையில் விடு தலை செய்ய வேண்டும் எனக்கோரி, யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவை நேற்று முன்தினம் பரிசீலனை செய்தபோதே, நீதிபதி இளஞ்செழி யன் வீதியில் ஆயுதமேந்தியிருந்த குழுவினருடன் பல்கலைக்கழக மாணவனுக்கு என்ன வேலை என வினவியிருந்தார்.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள 10 பேரும், பெற்றோல் குண்டுகள் மற்றும் கோடரி பிடிகள், பொல்லுகள் சகிதம் அபாயகரமான ஆயுதங்கள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளதால், அந்த மாணவனின் பிணை மனுவை உடனடியாகப் பரிசீலனை செய்து பிணை வழங்க முடியாது என தெரிவித்து, நீதிபதி விசாரணையை பிற்போட்டுள்ளார்.

இந்த மாணவன் பரீட்சை எழுதுவதற்கான ஏற் பாடுகள் குறித்து, மல்லாகம் நீதிமன்றத்தில உரிய கட்டளையைப்பெற்றுச் செயற்படுமாறு அறிவுறுத்தியுள்ள நீதிபதி இளஞ்செழியன், பிணைமனு மீதான விசாரணையை, ஜூலைமாதம் 30 ஆம்திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார். (இ-4)

ஓய்வுபெற்ற அதிபரின் வீட்டில்

# அதிகாலைவேளை ஆயுதமுனையில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

**சுன்னாகத்தில் ஓய்வு பெற்ற அதிபர் ஒருவரின் வீட்டில் ஆயுதமுனையில் கொள்ளை இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.**

குறித்த வீட்டின் பின்புறமாக வீட்டுக்கூரையை பிரித்து உள்ளே இறங்கிய கொள்ளையர்கள் வீட்டிலுள்ள அறைகளை திறந்து தம்முடைய வேலையை ஆரம்பித்துள்ளனர்.

இதன்போது வீட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையினை அதிகாலைவேளை உணர்ந்த வீட்டார் கொள்ளையர்கள் வீட்டினுள் நிற்பதை கண்டு அதிர்ச்சியடைந்து கூக்குரல் இட்டுள்ளனர்.

வீட்டார்கூக்குரல்இட்டதனை கண்டு திகைப்படைந்த கொள்ளையர்கள் வீட்டாரை கத்தியையும் கொட்டன்களையும் காட்டி அச்சுறுத்தியுள்ளனர்.

வீட்டில் உள்ள நகைகள் பணங்களை எடுத்து தம்மிடம் தருமாறும் கூக்குரல் இட்டால்கொன்று விடுவோம் எனவும் மிரட்டியுள்ளனர்.

இதனால் அச்சமடைந்த வீட்டார்தம்மிடம் இருந்த நகைகள்பணம் என்பவற்றை கொள்ளையர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

நகைகள்பணத்தைக்கொள்ளையடித்தவர்கள் வீட்டின் வாசற்பகுதியூடாக தப்பிச் சென்றுள்ளனர். இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

20 ஆயிரம் ரூபா பணம் மற்றும் ஒருதாலிக்கொடி உட்பட 18 பவுண் நகை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மேலும் கொள்ளையர்கள் தமது முகங்களை கறுப்புத் துணியால் கட்டியபடி கொள்ளையில் ஈடுபட்டமையால் அவர்களை அடையாளம் காணமுடியவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களில் இருவர் வீட்டினுள் நுழைந்து கொள்ளையில் ஈடுபட்டிருந்தமையினால் இதில் எத்தனைபேர் ஈடுபட்டனர் என்பது உடனடியாக தெரிய வரவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் புலனாய்வு விசாரணையையும் தடய விசாரணைகளையும் தாம் மேற்கொண்டு வருவதாகவும் சுன்னாம் பொலிஸார் தெரிவித்தனர். (இ-4)

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)


நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காம சுவாமி தேவஸ்தானத்திற்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட திராவிட மரபுச் சிற்பச் சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. வெள்ளோட்ட நிகழ்வைத் தொடர்ந்து தேரை வடிவமைத்த சிற்பி கலாபூஷணம் விஸ்வலிங்கம் ஸ்தபதி குழுவினர் கௌரவிக்கப்படவுள்ளனர். நிகழ்வில் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. கு. தியாகராஜக்குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், கோப்பாய் ஆசிரியகலாசாலை பிரதி முதல்வர் சிவத்தமிழ்ச் சொல்லழகர் ச.லலீசன் ஆகியோரது ஆசியுரைகளும் வாழ்த்துரைகளும் இடம்பெறவுள்ளன. (இ-5)

## பரிசளிப்பு விழா

யாழ்.காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 1.30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் அதிபர் பொ.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருமான இ. இரவீந்திரன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி உ.யசோதா, தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.ஈஸ்வரநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-7)



DMI Computer Education இன் வருடாந்த விருது வழங்கல் நிகழ்வில் 820 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்,நெல்லியடி,சாவகச்சேரி,சுன்னாகம் ஆகிய பயிற்சி மையங்கள் ஊடாக கணனி மற்றும் ஆங்கில கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கடந்த 2ஆம் திகதி நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா,சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் ஆர்னல்ட்,தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விளக்கமறியல்

(கரணவாய்)

ஆலயத்திற்குச் சென்று திரும்பிய போது கத்திவெட்டுக்கு இலக்கான சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டநபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறு பருத்தித்துறை நீதிபதி மா. கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பான வழக்கு கடந்ததிங்கட்கிழமைபருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (இ-3-60)

## யாழ்.செய்திகள்

### சிவில் பாதுகாப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக்குழு கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை 2.30 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி நடைபெறவிருந்த இக்கூட்டம் பிற்போடப்பட்டு இன்று நடைபெறவுள் ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## ஆசிரிய கலாசாலையில் கல்விக்கண்காட்சி இன்று

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியகலாசாலை ஆசிரிய பயிலுநர்களின் கல்விக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை இடம் பெறவுள்ளது.

கலாசாலை அதிபர்வீ.கருணலிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் கோப்பாய் மகா வித்தியாலய அதிபர் த. ஞானப்பிரகாசம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைபபார். கற்றல் வளங்களை ஆசிரிய பயிலுநர்களுக்கு அடையாளப்படுத்தும் நோக்குடன் இடம் பெறவுள்ள இக் கண்காட்சியில் ஆரம்பக் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி மாணவர்களுக்கான கற்பித்தல் உபகரணங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. ஆர்வமுள்ள எவரும் இக் கண்காட்சியை இலவசமாகப் பார்வையிட்டுப் பயன் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## செயற்பட்டு மகிழ்வோம் செயலமர்வு

யாழ்.கல்வி வலயத்தில் நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளில் தரம் ஒன்றில் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்குமான செயற்பட்டு மகிழ்வோம் செயற்றிட்ட செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8.30-4.30 வரை யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே மேற்படி செயலமர்வில் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஆரம்பப்பிரிவு விளையாட்டு செயற்றிட்ட இணைப்பாளர் சி. சிவகாந்தி அறிவித்துள்ளார். (இ-3)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிசரசாலைநுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆலய மண்டபத்தில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் சிவசங்கரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேலும் இக் கூட்டத்தில் வெளியிடங்களில் வாழும் ஆலய உபயகாரர்களையும் ஏனைய உபயகாரர்களையும் அடியார்களையும் சமுகமளிக்[illegible] (இ-3-7)

## தேடல் நாடக அரங்கியலுக்கான பகிர்வுக்களம் நாளை நடைபெறும்

செயற்றிறன் அரங்க இயக்கத்தின் தேடல் நாடக அரங்கியலுக்கான பகிர்வுக்களம் முதலாவது நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தே.தேவானந்த் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் உணர்ச்சி–காட்சி–இசை எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக இசைத் [illegible] விரிவுரையாளர் [illegible] உரையாற்றவுள்ளார்.

இதில் நாடக படைப்பாக்கத்தில் இசையின் பங்கு நாடகத்தில் இசையை எவ்வாறு பயன்படுத்துவது, ஆற்றுகைக் கலைக்கும் இசைக்குமான தொடர்பு என்பன பற்றி விரிவாக கலந்துரையாடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் நாடக அரங்கியல் துறை சார்ந்த மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் பங்குபற்றமுடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-3)

## ஆன்மசங்கமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய் இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஆன்மசங்கமம் நிகழ்வு நாளை 20ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10.30 மணியளவில் நல்லூர் வடக்கு கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

கருவி அமைப்பின் தலைவர் க.தர்மசேகரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ரித மயானந்தஜி மகராஜ் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி**

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=
(336)

தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088
**108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்


# வளவாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மும்மொழிக்கற்கை நிலையத்தில் ஆங்கில மற்றும் சிங்களம் கற்பிப்பதற்கு வளவாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. இக் கற்கை நெறிகளில்வளவாளர்களாக சேர விரும்புவோர் விண்ணப்பப் படிவத்தினை சுயமாகத் தயாரித்து கீழ்க்காணும் முகவரிக்கு எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் கிடை க்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு வடமாகாண கல்வி யமைச் சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். மேலதிக தொடர்புகளுக்கு 021 2231344, 021 2231343 என்ற தொலைபேசி இலக்க ங்களுடன் தொடர்பு கொள்ள முடியும்.(இ-3)


# தேவை



தொழிலில்லா பிரச்சினையா? இதோ ஒரு அரிய சந்தர்ப்பம். யோகட், ஜேம், ஐஸ்கிறீம், கோடியல், உற்பத்திப் பால்மா போன்ற தொழி ல்கள் வயது (18-50) வரையிலான ஆண், பெண், இருபாலாரும் உடனடி வேலை வாய்ப்புக்கள் நீங்கள் வரும் நாளிலே வேலை உண்டு.

தங்குமிடம், உணவு முற்றிலும் இலவசம். (மாதாந்த கொடுப்பனவு, எலைவன்ஸ், முற்பணம், மருத்துவ வசதி, வருடாந்த சுற்றுலா, EPF,ETF போன்ற அனைத்து வசதிகளும் மாதாந்த சம்பளம் (25000- 45000) நாள் சம்பளம் (1500) மணமுடித்த தம்பதிகளுக்கு தனிப்பட்ட ரீதியில் ஒழுங்குகள் செய்து தரப்படும். குழுக்களாகவோ, நண்பர்களாகவோ, வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். உடனே அழைக்கவும்.

**075 841 9284, 077 015 3922, 077 673 3588**

# வேலையாட்கள் தேவை

சீமெந்து மூடை பறிப்பதற்கு வேலையாட்கள் தேவை.
மாதாந்த வேதனமாக - 30,000/= வழங்கப்படும்.

தொடர்பு:-
சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
இல.55.57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C-1311)

# யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

**இன்று பத்தாம் நாள்**



விநாயகனே வினை தீர்ப்பவனே கலட்டிக் கணபதியே
வேதனைகள் மாற்றிடும் வேழ முகத்தவனே கணேசா!
ஞானமுதல்வனே வேத முதற்பொருளே ஆனைமுகனே
மோனப் பொருளே மூத்தவனே மூக்ஷிகவாகனனே!
கானமுடன் வந்துன்னைக் கைதொழுதோம் கரிமுகனே
ஞானமது தந்தே ஆதரிக்கவேண்டும் ஐயா!
ஈனப்பிறவிப் பிணி களைந்தே இன்னருள் புரியவேண்டும்
ஈசன் திருமகனே விக்னேஸ்வரனே சரணம்!சரணம்!!

நாச்சிமார் கோவிலடி
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

சுஜீவா வைத்தியசாலை
(தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுர்வேத வைத்தியசாலை)
(C-1281)

# விற்பனைக்கு

எம்மிடம் கோயில் தேவைக்கேற்ப பித்தளை சில்வர் பொருட்கள், வட்டு விசேஷங்களுக்கான பரிசுப்பொருட்கள், பாத்திரங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

சிறிசக்தி மாடம்
கச்சாய் வீதி,
கொடிகாமம்.
(பொலிஸ் நிலையத்திற்கு அருகில்)
021 491 1830
(C-1231)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீடம்

**புதிய கல்வியாண்டு கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம் 2013/2014**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கு கல்வியாண்டு 2013/2014 இல் கலைமாணிப்பட்டக் கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டு பதிவை மேற்கொண்ட புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் (Orientation Programme) 29/06/2015ம் திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும்.

அன்றையதினம் காலை 8.30மணிக்கு மாணவர்கள் கைலாசபதி கலையரங்கத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

விடுதி வசதி தேவைப்படும் வெளிமாவட்ட மாணவர்கள் 28/06/2015ஆம் திகதி முதல் விடுதிக்கு சமூகம் தருமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

மாணவர்கள் நிகழ்ச்சி நிரலை கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையிலோ www.jfn.ac.lk/arts எனும் இணையத்தளத்திலோ பார்வையிடலாம்.

பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம்.
(C-1320)

# கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 24சூரிசெவ் 11 இல்
தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்
தொ.இ: B/4623

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 36 செவ் 7 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: ACCA/ லண்டன் NOTPR
தொ.இ: B/4626

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 26 3/4 செவ் 1 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: CIVIL/ விரிவுரையாளர்
தொ.இ: B/4627

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 17 1/2
உயரம்: 152cm
தகைமை/தொழில்: பொறியியலாளர் லண்டன் PR
தொ.இ: B/4629

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 63 1/2 செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA
தொ.இ: G/4655

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 28 1/4 செவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/4657

பிறப்பு: 1983 RC
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: HNDA/ அரச தொழில்
தொ.இ: G/4659

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 38
தகைமை/தொழில்: பிரான்ஸ் PR
தொ.இ: G/4663

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# ராசி பலன்

19.06.2015
(ஆனி 04, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு
திருதியை முன்னிரவு 8.44 மணிவரை
புனர்பூசம் முற்பகல் 8.16 மணிவரை
இராகுகாலம் 10.25-11.54 மணிவரை
சுபநேரம் 5.54-7.24 மணிவரை
வளவன்

**இன்றைய கிரக நிலை**

| | | | |
|---|---|---|---|
| கேது | | புதன் | சூரி செவ் |
| | இன்றைய கிரக நிலை | | குரு சந் சுக் |
| | | | |
| | | சனி | ராகு |

**மேடம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், தாய் வழி உறவினர்களால் அனுகூலமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள்.

**இடபம்:** வெற்றிகரமான தகவல்கள் வந்து சேரலாம், தைரியத்தோடு செயற்பட்டு சாதனைகள் படைக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

**மிதுனம்:** சேமிப்பை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும், தொழிலில் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், கணபதி வழிபாடு காரிய வெற்றிதரும், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை.

**கடகம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபடவேண்டிய நாள், மனக்கிலேசல்கள் கூடும் நாள், வெளியூர் பயணமொன்றால் கையிருப்புக்கள் கரையலாம்.

**சிம்மம்:** திடீர் பயணமொன்று உருவாகலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றிதரும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், சயன சுகக் குறைவான நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கன்னி:** யோகமான நாள், இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், பொருளாதார நிலை உயரும், விரதங்களில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்:** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், புதிய பொருட்சேர்க்கைக்கு அடித்தளமிடுவீர்கள், எதிர்பாராத பயணங்கள் இடம்பெறலாம், பொதுவாழ்வில் புகழ் கூடும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**தனுசு:** தொழில்போட்டிகள் அதிகரிக்கலாம், கவலைகள் தீர கற்பக மூர்த்தியை வழிபடவேண்டிய நாள், பிரயாண பயமுண்டு, மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம்.

**மகரம்:** செய்தொழில் மேன்மையுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், நண்பர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கும்பம்:** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், தெய்வீகச்சிந்தனை மேலோங்கும் நாள், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், கௌரவமான நாள்.

**மீனம்:** தொலைபேசித்தகவல்கள் மகிழ்ச்சி தரும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வியாபார விருத்தியுண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### இன்புளுவென்சா வைரஸ் தொற்று

# 25 நோயாளர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதி

(குருமன்காடு)

**இன்புளுவென்சா என்ற பன்றிக்காய்ச்சல் வைரஸ் தொற்றுக்கு இலக்காகி 25 நோயாளர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்திய சாலையின் வைத்திய அதிகாரி சுதர்ஷினி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்.

25 வயதான கர்ப்பிணி தாய் ஒருவர் உயிரிழந்ததாகவும் அவருக்கு இந்த காய்ச்சல் ஏற்பட்டிருந்தது எனவும் அவர் கூறியுள்ளார்.

கர்ப்பிணி தாய்மார். இரண்டு வயதுக்கும் குறைந்த குழந்தைகள். நீரிழிவு மற்றும் சிறுநீரக நோயாளிகள் மற்றும் 65 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு இந்த காய்ச்சல் மரணத்தை ஏற்படுத்த வல்லது என வைத்திய அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இதனால், நீண்டநாட்களாக நீடிக்கும் இருமல். தடிமன். தலைவலி மற்றும் கடும் காய்ச்சல் அறிகுறிகள் இருக்குமாயின் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெறுமாறும் சரியான சிகிச்சை எடுத்துக் கொண்டால். நோயை குணமாக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது. குறித்த வைரஸ் கர்ப்பிணிப் பெண்களுக்கும் நீரிழிவு நோயாளிகளுக்கும் தாக்கும் ஆபத்து அதிகமுள்ளது.

தொண்டை கரகரப்பு.முகம் சிவத்தல்.நீர் போன்ற திரவம் மூக்கால் வடிதல். சுவாசிப்பதற்குச் சிரமப்படுதல் போன்றன இந்த நோயின் அறிகுறிகள்.

அறிகுறிகள் காணப்படும்பட்சத்திலும் ஏதேனும் சுகயீனம் ஏற்பட்டாலும் உடனடியாக அரச வைத்தியசாலையை நாடிச் சிகிச்சை பெறுவதே சிறந்தது.

சிகிச்சைப் பெறத்தவறும் பட்சத்தில் 24 மணிநேரத்தில் இதன் தாக்கம் அதிகரித்து சுவாசப்பகுதி சேதமடைவதுடன் 48 மணிநேரத்தின் பின்னர் ஆபத்தான நிலை ஏற்பட்டு விடும்.

வவுனியாவிலும் இந்த வைரஸ் தாக்கத்துக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதனால் மக்கள் இந்த நோய்த் தாக்கம் தொடர்பில் மிக அவதானத்துடன் இருப்பது அவசியமானதாகும்.(2-250)

## தொழில்நுட்ப ஆய்வுகூடம் திறப்பு விழா

(விசுவமடு)

மு/விசுவமடு மகாவித்தியாலயத்தின் தொழில்நுட்ப ஆய்வுகூடம் திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் ச.மகேந்திரராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பி.கே.சிவனேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உ.முனீஸ்வரன், கௌரவ விருந்தினராக குறித்த பாடசாலையின் ஓய்வுபெற்ற பதில் அதிபர் திருமதி நி.இராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)

## இலங்கைத்தீவானது மது அற்ற நாடாக சர்வதேசத்தின் முன் பரிணமிக்க வேண்டும்

### வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் தெரிவிப்பு



வடக்கு பிரதேச செயலகப் பிரிவில்சட்டவிரோதமதுப்பாவனை தடுக்கப்பட்டுள்ள போதிலும் மதுப் பாவனையாளர்கள் கணிசமாக உள்ளனர்.

எமது பிரதேசத்தை வறுமையில் இருந்து மீட்பதற்கு மதுவை ஒழிப்பது முக்கிய சாவலாகவுள்ளது.

மக்கள் சக்தி ஒன்றிணைவதன் மூலமாகவே மதுவை நாம் ஒழிக்க முடியும் என வடக்கு பிரதேசசெயலாளர்க. பரந்தாமன். தெரிவித்துள்ளார்.

மதுவற்ற வவுனியா வடக்கு விசேட நிகழ்ச்சி திட்டத்தினை வவுனியாவில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சித்திட்டம். வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சின் திவிநெகும அபவிருத்தி திணைக்களத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலகப்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர்.

இன்றைய வறுமைக்கு மது என்பது முக்கிய காரணியாக காணப்படுகின்றது. வவுனியா

அரச அதிகாரிகள் மட்டும் செயற்படுவதன் மூலம் அதனை சாதிக்க முடியாது. மக்கள் சக்தி ஒன்றிணைவதன் மூலமாகவே மதுவை நாம் ஒழிக்க முடியும்.

எனவே மனச்சாட்சியுள்ளவர்களாக மானசீகமாக மக்கள் மதுவை ஒழிக்க ஒன்றுபடவேண்டும்.

அதன்மூலம். வவுனியா வடக்கு பிரதேசத்தில் இருந்து நாம் முதன் முதலாக மது அற்ற பிரதேசத்தை உருவாக்குவோம். அதனூடாக ஏனைய பிரதேசங்களை மது அற்ற பிரதேசங்களாக்கி அழகிய இலங்கைத்தீவு மது அற்ற நாடாக சர்வதேசத்தின் முன் பரிணமிக்க வேண்டும்.

இன்று மதுவினால் குடும்பங்களின் பாசத்தை பலர் இழக்கின்றனர். பிள்ளைகளின் கல்வியை புல பெற்றோர் தொலைக்கின்றனர்.

எவ்வாறு எமது பிரதேச செயலகம்ஏனைய திணைக்களங்களுடன் இணைந்து செயற்படுவதில் இலங்கையில் முன்னணியில் திகழ்கின்றதோ அதேபோல் மது அற்ற பிரதேச செயலகமாகவும் இன்னும் சில காலத்தில் மிளிரும் என்ற நம்பிக்கை என்னிடம் உள்ளது என தெரிவித்தார்.

இதன்போது. மது மற்றும் புகையிலை பயன்படுத்துவோர். பயன்படுத்தாதோர் மற்றும் பயன்படுத்தி அதில் இருந்து விடுதலை பெற்றோரை ஒன்றிணைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெயந்தரூபன் தலைமையில் பிரதேச மட்ட மது ஒழிப்புக்காக குழு நியமிக்கப்பட்டது.

அத்துடன் கிராம மட்டங்களிலும் மது ஒழிப்புக்கான பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர். இதே வேளை. வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் இருந்து ஊர்வலமாக சென்ற மேற்படி குழுவினர் நெடுங்கேணி மகாவித்தியாலய மாணவர்கள் முன்னிலையில் மதுவை ஒழிப்பதற்கான சத்தியப்பிரமாணத்தையும் செய்திருந்தனர்.

இந் நிகழ்வுகளில். வவுனியா தொற்றா நோய் தடுப்பு பிரிவு வைத்திய அதிகாரி உட்பட உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2)

## ஆனி உத்தர பொங்கல் விழா

(திருவையாறு)

ஏ-9 வீதி கனகாம்பிகைகுளம் கிளிநொச்சியில் அமைந்துள்ள உதிரவேங்கை வைரவ ஆலயத்தில் ஆனி உத்தர பொங்கல் விழா எதிர்




வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும்.

அன்றையதினம் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து காவடிகள் புறப்பட்டு மேற்படி ஆலயத்தை வந்தடையவுள்ளது.

மாலை 5 மணிக்கு தீ மிதிப்பு நிகழ்வு நடைபெற்று பொங்கல் விழா இடம்பெறும். (2-273)



வன்னிகுறோஸ் சுகாதார நிறுவனத்தின் தொடரும் வாழ்வாதார நலத்திட்டத்தில் கோழிவளர்ப்பை மேம்படுத்துவதற்காக அண்மையில் முள்ளியவளை கரைதுறைப்பற்று கிராமத்தில் 40 பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள், அதற்குரிய உபகரணங்கள் என்பனவற்றை வன்னிகுறோஸ் சுகாதார நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் வழங்கி வைத்தார்.

# பேருந்துகளுக்கு சீசீரிவி கமராக்கள்

(மல்லாவி)

இலங்கைபோக்குவரத்து சபையின் கீழ் இயங்குகின்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உள்ள இ.போ.ச. சாலைகளில் இருந்து பொதுமக்களுக்கான போக்குவரத்துச்சேவைகளில் ஈடுபடுகின்ற 57 பேருந்துகளுக்கு சீசீரிவி (CCTV) கமரா பொருத்தப்பட்டுள்ளதாக இ.போ.ச.பேருந்து சாலையின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கமராக்கள் பொருத்தப்பட்டு சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகளுக்கு இ.போ.சபையின் தலைமைக் காரியாலயமான நாரஹேன்பிட்டியில் இருந்து இதன் கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பேருந்துகளில் இடம்பெறுகின்ற திருட்டு,பாலியல் துன்புறுத்தல், நடத்துநர்கள் மற்றும் சாரதிகள் ஆகியோரினது நடவடிக்கைகளை கண்காணிப்பதன் ஊடாக தேவையற்ற பிரச்சினைகளை தவிர்க்கும் முகமாகவே சீசீரிவி கமராக்கள் பேருந்துக்களில் பொருத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதன் பிரகாரம் அரசாங்கத்தினால் புதிதாக வழங்கப்பட்ட பேருந்துகளில் முல்லைத்தீவு சாலையைச் சேர்ந்த 11 பேருந்துக்களும் கிளிநொச்சி சாலையைச் சேர்ந்த 14 பேருந்துகளும் யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள பருத்தித்துறை சாலையைச் சேர்ந்த 8 பேருந்துகளும் கோண்டாவில் சாலையைச் சேர்ந்த 15 பேருந்துகளுக்கும் காரைநகர் சாலையைச் சேர்ந்த 9 பேருந்துகளுக்குமாக மொத்தம் 57 பேருந்துகளுக்கு கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதேவேளை எதிர்வரும் காலங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து தூர இடங்களுக்கு பேருந்து சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகளுக்கு ஜீ.பி.எஸ். தொழில்நுட்ப கருவிகள் பொருத்தப்படவுள்ளன.

இதனூடாக அதிவேகமாக பயணிக்கும் பேருந்துக்கள், வழித்தடதிசை மாறிச் செல்லும் பேருந்துக்கள் ஆகியவற்றை கண்காணித்து உடனுக்குடன் இ.போ.ச. தலைமைக் காரியாலய கட்டுப்பாட்டு அறையிலிருந்து மாவட்ட போக்குவரத்து சாலைகளின் முகாமையாளர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு சாரதிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளதாக அத்தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியர்களின் விசேட வணக்கமான நோன்பு இன்று ஆரம்பமாகின்றது



இஸ்லாமிய மாதமான ரமழான் மாதம் பிறைதென்பட்டது முதல், பத்தாவது மாதம் ஷவ்வால் முதல் பிறைகாணும் வரையான ஒருமாத காலநோன்பே இன்று 2015.06.19 ஆரம்பமாகின்றது. அடுத்தமாதம் 2015. 07.17 ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்படும். முஸ்லிம்கள் பிறையைக் கணக்கிட்டு இந்த வணக்க வழிபாட்டைமேற்கொள்வதனால் பிறைதென்படுவதில் மாற்றங்கள் ஏற்படும் போது ஆரம்பத்திலும் முடிவிலும் சிலமாற்றங்கள் ஏற்படலாம்.

இது முஸ்லிம்களின் கட்டாய வணக்க வழிபாடாக இருக்கின்றது. இதனை பொதுவாக 10 வயது சிறுவர்களிலிருந்து பெரியோர்கள் வரை மேற்கொள்கின்றனர்.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் மிக முக்கியமான ஒன்றாக இது காணப்படுகின்றது. நோன்பின் பிரதான நோக்கம் நாம் இறைஅச்சம் - இறைபக்தியை எம்மில் வளர்த்துக் கொள்வதற்கேயாகும். இறைபக்தி மனிதனில் ஏற்படும் போது ஏனைய செயல்கள் மிகவும் நல்ல முறையில் அமையும்.

வாழ்க்கை எனும் பாதையில் பயணிக்கும் மனிதனின் முன்னிலையில் உலக கவர்ச்சிகள், விருப்பு, வெறுப்புக்கள், பாவங்கள், அநியாயங்கள் போன்றன முட்களாகவும், கற்களாகவும் காணப்படும். அவற்றை கடந்து செல்லும் அவன் மிகக் கவனமாக அவற்றை விட்டும் விலகி நன்மைகளை வாரிக கொண்டு தனது இலட்சியப் பயணத்தை தொடர வேண்டும். இந்த மனோபக்குவத்தை நோன்பு ஏற்படுத்துகின்றது.

மேலும் இவ் ரமழான் மாதத்தல் தான் இஸ்லாமியர்களின் புனித வேதமான மனிதர்களுக்கான நேர்வழியும், வழிகாட்டல்களும், சத்தியத்தையும்,-அசத்தியத்தையும் பிரித்தறியக் கூடிய தன்மை கொண்ட **அல்குர்ஆன்"** அருளப்பட்டது. இதனால் இம்மாதம் மிகவும் சிறப்பு பொருந்தியதாகும். நோன்பு என்பதை விளக்கிக் கூறுவதாயின் அதிகாலை முதல் 4.30-மாலை 6.30 வரை எவ்வித உணவுகளையும், பானங்களையும் (தண்ணீரும்) உட்கொள்ளாமல் அல்லாஹ்வுக்காக மேற்கொள்ளும் ஒரு வணக்க வழிபாடாகும்.

மேலும் நோன்பின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக **"ஏழைகளின் பசி" தாக உணர்வுகளை"** எல்லோரும் உணர்ந்து கொள்வதற்கு இது வாய்ப்பாக அமைகின்றது. இன்னும் இஸ்லாம் வன்முறையாக இதனை செய்யுமாறு ஏவவில்லை. **"கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், வயோதிபர்கள்,நோயாளிகள் பிரயாணிகள"**போன்றோர்களுக்கு சலுகைகள் வழங்கி தவிர்க்க சந்தர்ப்பம் வழங்கியதுடன்,அவர்கள் பின்னர் அதனை முடியுமான போது நோற்க அனுமதி வழங்கியுள்ளமையும் இஸ்லாத்தின் மென்மை போக்கை காட்டுகின்றது.

இவ்வாறாக இஸ்லாத்தில் வருடா வருடம் இஸ்லாமியர்களால் அனுஷடிக்கப்பட்டுவரும் ரமழான் மாத நோன்பு வழிபாட்டின் மூலம் நாம் பெறும் இறையச்சத்தைக் கொண்டு அதில் பெற்றபயிற்சி மூலம் ஏனைய 11 மாதங்களும் அவ்வாறே நல்ல முறையில் எமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதனையே இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.

அவ்வாறு **"எவர் ரமழான் மாதத்தில் ஈமானோடு நன்மையை எதிர்பார்த்துநோன்பு நோற்கின்றாரோ அவரது முன்னைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும"** (ஹதீஸ்) மேலும **"ரய்யான்"** எனப்படும் சுவனமும் அவருக்கு மறுமையில் காத்திருக்கும்.

இவ்வாறான பல சிறப்பம்சங்களைக் கொண்ட ரமழான் **"நோன்பே"** இன்று ஆரம்பமாகின்றது. இதனை உலக முஸ்லிம்கள் மிகவும் ஆரவாரமாக வரவேற்பதுடன் அனைவரும் தயாராகவும் உள்ளனர்.

மேலும் ரமழானை முன்னிட்டு முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் யாழ்/கிளிநொச்சியில் வடக்கு மாகாண உறுப்பினர் அ.அஸ்மினின் ஊடாக முழுமையாக வழங்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**நைனா முஹமட் அப்துல்லாஹ**
**யாழ். மாவட்ட சிறுவர் சபை செயலாளர்**
**(யாழ்/வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவன்)**

# வரவேற்போம் ரமழானை

*மாதங்களில் மிகச் சிறந்த மாதமாம் ரமழான் மாதம் இன்று ஆரம்பித்துவிட்டது. கண்ணியம் காத்து புண்ணியம் பூத்து இப்பூவுலகை பூரிப்படைய வைக்க வந்து விட்ட இந்த ரமழானை நாம் ஆவலுடனும் ஆசையுடனும் வரவேற்போம் என்பதில் ஐயமில்லை.*

*உழைத்து களைத்துப் போன உடலுக்கு உறக்கம் எவ்வாறு ஓய்வை தருகின்றதோ அதேபோல உடலுக்கு நோன்பானது ஓய்வளிக்கின்றது என்பதே உண்மை. இதனால்தான் எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்,*

*நோன்பு வையுங்கள். உடல் ஆரோக்கியம் பெறுவீர்கள் என்று எடுத்துக் கூறியுள்ளார்கள்.*

*அதனால் இந்தச் சிறப்பு மிகு ரமழான் மாதத்தை அடைந்துள்ள நாம் கால நேரங்களை வீண்விரயம் செய்யாமல் நல்ல அமல்களிலும் நற்காரியங்களிலும் செயற்படுத்திக் கொள்ள வேண்டும்.*



*ஏனைய மதத்தினருக்கு எந்தவிதமான இடையூறுகளும் இல்லாதவாறு பேணுதலான முறையில் அனைத்தையும் நிறைவேற்றிக் கொள்வதோடு வீண் பேச்சுக்களையும் கேலிப்பரிகாசங்களைத் தவிர்த்து அதிகமதிகம் தானதர்மம், குர்ஆன், திக்று ஸலவாத் ஓதுவதில் முனைப்பாக இருக்கவேண்டும். அத்தோடு முன்னெடுக்கும் காரியங்களை திட்டமிட்டுக் கொள்வதோடு யாராவது ஏசிப்பேசினால் நான் நோன்பாளி என்று சொல்லி விலகிக் கொண்டால் வம்புவாதங்கள் வளர்வதை தவிர்த்துக் கொள்ளலாம்.*

*பொய், புறம், கோள், பரிகாசம், சண்டை சச்சரவுகளைத் தவிர்த்து மனக்கட்டுப் பாட்டுடன் பேணுதலாக எமது நோன்பை நாம் நோக்க நம் அனைவருக்கும் அல்லா ஹ்த ஆலா அருள்பாலிப்பா னாக!.*

*இறையருள் ரஹ்மத் தரும் முதல் பத்தும்*
*பாவமன்னிப்பைத்தரும் நடுப்பத்தும்*
*நரகவிடுதலையைத் தரும் இறுதிப் பத்தும்*
*எம்மை அடையவும் அதற்காய் நற்கூலி பெறவும் நாமும் இறைவனிடம் பிரார்த்தித்து வந்த ரமழானை ஒன்றுகூடி மகிழ்வாக வரவேற்போம்.*

**மௌலவி ஏ.எம்.ஏ.அஸீஸ்**
**(யாழ்./கிளி./ உலமா சபைத் தலைவர்)**

# மணிலால் பெர்னாண்டோவின் தனிப்பட்ட வங்கிக்கணக்குகள் குறித்து விசாரணை

(கொழும்பு)

இலங்கை காற்பந்தாட்டச் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் மணிலால் பெர்னாண்டோவின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகள் நான்கை புலன்விசாரணை செய்வதற்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம், நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு அனுமதியளித்துள்ளது.

அத்துடன் இலங்கை காற்பந்தாட்டச் சம்மேளனத்தின் முன்னாள் நிறைவேற்றதிகாரி கிருஷாந்த பெரேராவின் கணக்குகளையும் புலன் விசாரணை செய்வதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

அவ்விருவர் மீதும் சுமத்தப்பட்டிருந்த நிதி மோசடிக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பான மனுவை பரிசீலனைக்கு உட்படுத்திய போதே, கொழும்பு நீதிமன்ற நீதவான் கிஹான் பிலபிட்ட மேற்கண்ட அனுமதியை வழங்கியுள்ளார்.

குறித்த சம்மேளனத்தில், 2006 ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுவரை இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பான விசாரணையே இடம்பெறவுள்ளது.

கொமர்ஷல் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, ஸ்டான்டர்ட் சார்ட்டட் வங்கி, இந்திய ஸ்டேட் வங்கி ஆகிய வங்கிகளின் கொழும்புக் கிளைகளில் காணப்படும் வங்கிக் கணக்குகள் தொடர்பாக புலன் விசாரணை செய்வதற்கே நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.



யாழ்ப்பாணம் தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியின் ஆரம்ப பிரிவின் தரம் 01 முதல் தரம் 04 வரையிலான மாணவர்களுக்கான ஆளுமையையும் சேமிப்புத்திறனையும் ஊக்குவிக்கும் முகமாக சிறுவர் சந்தை ஒன்று சம்பத் வங்கி சுன்னாகக் கிளையினரால் **சிறுவயது முதலே ஆளுமை** என்ற தொனிப் பொருளில் கடந்த 11ஆம் திகதி சிறப்பாக நடத்தப்பட்டிருந்தது

பாடசாலையின் பிரதான மண்டபத்தில் சுமார் 120 மாணவர்கள் மாதிரிச் சந்தையினை ஏற்படுத்தி தாமும் வியாபாரிகள் போன்று வேடம் புனைந்து முற்பகல் 10மணியிலிருந்து பிற்பகல் ஒருமணிவரை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இவர்களுடன் இம் மாணவர்களின் பெற்றோர்களும் வியாபார நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டனர். கல்லூரி அதிபர் காராளசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சுகிர்தன், சிறப்பு விருந்தினராக வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் ஹரிகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். வங்கி உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் தெல்லிப்பழை வாழ் மக்கள் எனப் பலரினதும் ஒத்துழைப்புடன் இச் சிறுவர் சந்தை மிகச் சிறப்பாக முன்னெடுக்கப் பட்டிருந்தது. சிறுவர்கள் சந்தையில் மரக்கறி வகைகள், உணவுப்பண்டங்கள்,-பணம் பொருள் உற்பத்திகள், ஐஸ் பழ வகைகள், கைவினைப் பொருட்கள் போன்றவை காட்சிப்படுத்தப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெண்டக்காய் வைத்தியம்



…அவருடன் பேசி விட்டு அப்பாவிடம் திரும்பி அப்பா கார்ல ஃபேன் பெல்ட் அறுந்து போச்சாம். அதை மாத்திட்டு வர்றதுக்குப் போய் இருக்காராம் என்றாள்.

காரை எடுத்து வரும்போதே இதை எல்லாம் செக் பண்ணிக் கொண்டாரனும்.

என்னா டிரைவர் இவரு?

காரு இப்போ நடுவுல வந்து கழுத்தறுக்குது என்று முணு முணுத்தார் அப்பா.

அவர்கள் சாப்பிட்டு முடித்தபோது டிரைவர் வந்து சேர்ந்தார்.

என்னப்பா கார் ரெடி ஆயிடிச்சா? என்றார் அப்பா.

ஆயிடிச்சு சார்.

இங்கே யாரும் சரியான மெக்கானிக் கிடைக்கலை.

வேறு ஒருத்தர் அவருக்குத் தெரிஞ்ச வரைக்கும் சரிபண்ணிக் கொடுத்தாரு என்றார் டிரைவர்.

மேலும் சில இடங்களைச் சுற்றிப்பார்த்துவிட்டு, அவர்கள் கிளம்பினார்கள்.

லேசாக மழைத்தூறல் விழ ஆரம்பித்தது.

எல்லோரும் ஓடிவந்து காருக்குள் உட்கார்ந்து கொள்ள, டிரைவர் வண்டியை எடுத்தார்.

அவர்கள் அடர்ந்த காட்டுப் பகுதியைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது.

இரண்டு புறங்களிலும் ராட்சத மரங்கள், அடர்த்தியான புதர்கள், ஆள் நடமாட்டமே இல்லாத சாலை. மழை சற்று வலுத்த அந்த நேரத்தில் கார் மெதுவாக சாலையில் ஓடியது.

அடிக்கடி குலுங்கி சத்தம் எழுப்பியது. என்னப்பா? என்றாள் அம்மா.

தெரியலம்மா என்றார் டிரைவர்.

காரை விட்டு இறங்கிய டிரைவர் மழையில் நனைந்து கொண்டே சோதனை செய்த பிறகு ஃபேன் பெல்ட் திரும்பவும் கட் ஆயிடிச்சு என்றார்.

மாத்தியாச்சுனு சொன்னியே என்றார் அப்பா எரிச்சலோடு. கார் மெக்கானிக் யாரும் கிடைக்கலே. அதனால் சைக்கிள் ரிப்பேர் செய்றவருக்கிட்டதான் சொன்னேன். அவரு மாத்தினதா சொன்னாரு என்று இழுத்தார் டிரைவர். என்னப்பா இது…. பொறுப்பு இல்லாம இருக்கே. சைக்கிள் ரிப்பேர் செய்யறவர்கிட்ட காரை ரிப்பேர் செய்யக் கொடுக்கலாமா?

காரும் கெட்டுப் போயிடுமே. இப்படி குழந்தைகளை வைச்சுக்கிட்டு ராத்திரியிலே, கொட்டற மழையில, காட்டுல நிக்கற மாதிரி ஆயிருச்சே? என்று சீறினார் அப்பா.

எல்லோரும் காருக்குள்ளேயே உட்கார்ந்து இருந்தனர்.

இருட்ட ஆரம்பித்தது. ஏதாவது கார் வருகிறதா? என்று டென்ஷனோடு பார்த்துக்கொண்டு இருந்தனர்.

யாராவது வந்து அடித்துப்போட்டால் கூடக் கேட்பதற்கு ஆள் இல்லாத காட்டுப் பிரதேசம் அது. அம்மாவுக்குப் பயமாக இருந்தது.

அப்பா பரபரப்போடு காணப்பட்டார். சிங்கமோ, புலியோ அங்கே இல்லை. ஆனாலும், அந்தச் சூழல் எல்லோருக்கும் சற்று அச்சத்தைத் தந்தது. அரைமணி நேரத்துக்குப் பிறகு மழை விட்டது.

காருக்குள்ளே இருந்து வெளியே வந்தாள் தேனுகா.

மரங்களின் மேலே பசுமையும் மஞ்சளும் கலந்த வெளிச்ச புள்ளிகள் ஏராளமாகப் பறந்தன.

சுரேந்தர் அங்கே பார் மின்மினிப் பூச்சிகள் என்று அவனுக்குக் காட்டினாள்.

அவன் ஆர்வமாகப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

அப்போது எதிரே காரின் ஹெட் லைட் வெளிச்சம் தெரிந்தது.

கையை அசைத்து அந்தக் காரை நிறுத்தினாள் தேனுகா.

உள்ளே இருந்தவர்கள் நிலைமையைப் புரிந்துகொண்டு உதவினர்.

அரைமணி நேரத்திற்குப் பிறகு அவர்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டு காரிலிருந்து இறங்கி வீடு வந்து சேர்ந்தனர்.

இரவு சாப்பாட்டுக்குப் பிறகு அம்மா சமையதீறையில் வேலையாக இருந்தாள்.

தேனுகா அங்கே சென்றாள்.

அம்மா மிக்ஸியை ரிப்பேர் பண்ண மெக்கானிக் வேணும்.

அப்பதான் ஷாக் அடிக்காது.

காரை சரியா ரிப்பேர் செய்ய கார் மெக்கானிக் வேணும்.

அதைப்போல உன்னோட உடம்புக்கு வைத்தியம் பார்க்க ஒரு தரமான மருத்துவர் வேணும். இல்லேன்ன பிரச்சினை தீராது.

புரிஞ்சிக்கிட்டியா? மத்தவங்க சொல்ற வைத்தியத்தை எல்லாம் கேட்கக் கூடாது.

பணம் முக்கியம் இல்லே…

உன்னோட ஆரோக்கியம் தான் முக்கியம் என்றாள்.

மெக்கானிக் செஞ்ச தப்பால நாம காட்டுக்குள்ளே மாட்டிக்கிட்டு அவஸ்தைப்பட்டோம். அதே தப்பை என் உடம்புக்கு இனிமே செய்ய மாட்டேன்.

கொட்டற மழையில் நடுக்காட்டுல இருந்த போதே என்னோட தப்பைப் புரிஞ்சுக்கிட்டேன். இனிமே வெண்டைக்காய் வைத்தியம் தேவை இல்லை, நாளைக்கே டயாபடிஸ் சென்டருக்குப் போறேன் என்றார் அம்மா.

முற்றும்…………




- 1269 - பிரான்சில் மஞ்சள் அடையாளம் இல்லாமல் பொதுவில் திரியும் அனைத்து யூதர்களும் தண்டம் செலுத்த வேண்டும் என ஒன்பதாம் லூயி மன்னன் கட்டளையிட்டான்.
- 1867 - மெக்சிகோவின் மன்னன் முதலாம் மாக்சிமிலியன் மரணதண்டனை விதிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டான்.
- 1870 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அனைத்து தெற்கு மாநிலங்களும் ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்ட பின்னர், அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.
- 1910-அமெரிக்காவில் வோஷிங்டனில் முதல் தடவையாக தந்தையர் நாள் கொண்டாடப்பட்டது.
- 1912 - ஐக்கிய அமெரிக்காவில் 8 மணி நேர வேலைத்திட்டம் அமுலாகியது.
- 1943 - டெக்சாசில் இனமோதல் இடம்பெற்றது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்குமிடையில் பிலிப்பைன்ஸ் கடல் சமர் இடம்பெற்றது.
- 1953 - அமெரிக்காவின் அணுவாயுத இரகசியங்களை சோவியத் ஒன்றியத்துக்கு வழங்கிய தாகக் குற்றம் சாட்டப்பட்டு ஜூலியஸ் மற்றும் எத்தல் ரோசன்பேர்க் என்ற யூதத் தம்பதிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.
- 1961 - குவைத் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

**பிறப்புகள்**

- 1623 - இலாய்சி பாஸ்கல், பிரெஞ்சு அறிவியலாளர் (இ. 1662)
- 1903 - வால்ரர் ஹமொண்ட், இங்கிலாந்துத் துடுப்பாட்டக்காரர் (இ. 1965)
- 1947 - சல்மான் ருஷ்டி, இந்திய எழுத்தாளர்
- 1970 - ராகுல் காந்தி, இந்திய அரசியல்வாதி
- 1978 - டெர்க் நொவிட்ச்கி, ஜேர்மன் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புகள்**

- 1867 - முதலாம் மாக்சிமிலியன், மெக்சிக்கோ மன்னன் (பி. 1832)
- 1993 - வில்லியம் கோல்டிங், நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய எழுத்தாளர் (பி. 1911)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

...இன்னும் கொஞ்சம் அதிகமா தப்பு பண்ணினவங்களுக்கு, பணம், புகழ் இரண்டையும் கொடுத்திடறான். அதைவிட அதிகமாக தப்பு பண்ணினவங்களைத் தூக்கி அரசியலில் போட்டுடறான்! நான் இரண்டாவது ரகம் போல இருக்கு.

உழைப்பு

எல்லோரும் உழைக்கிறாங்க. நானும்தான் உழைக்கிறேன். மற்றபடி நான் ஒருத்தன் மட்டும்ஸ்பெஷலா உழைக்கலையே! ஒருவேளை, மத்தவங்களைவிட, எனக்கு ஆண்டவனோட ஆசீர்வாதம் கூடுதலா இருக்கலாம்.

**"ரஜினிகாந்த் சிறந்த நடிகர் மாமனிதர்"**

நட்சத்திரங்கள் மனம் நெகிழ்ந்த பேட்டி

ரஜினிகாந்தின் நடிப்புத் திறமையையும், மனிதநேயப் பண்புகளையும் நடிகர் - நடிகைகள் பாராட்டிப் புகழாரம் சூட்டினார்கள்.

பிரபு

ரஜினியுடன் "தர்மத்தின் தலைவன்", "குருசிஷ்யன்", "சந்திரமுகி" இணைந்து நடித்த நடிகர் பிரபு கூறியதாவது:-

"அன்புக்குரிய அண்ணன் ரஜினி பற்றி சொல்வதானால், அது ஒரு நாளில் முடிந்து விடக்கூடியதல்ல. எத்தனை நாட்கள் வேண்டுமானாலும், அவரைப்பற்றி பேசிக் கொண்டே இருக்கலாம்.

எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. நான் நடித்த "ராகங்கள் மாறுவதில்லை" வெளிவந்த சமயம். ரஜினி, அந்தப் படத்தை மிகவும் ரசித்துப் பார்த்திருக்க வேண்டும். "பிரபு, நீங்கள் நல்லா 'ஃபைட்' பண்றீங்க. உங்க டான்ஸ் மூவ்மெண்ட் கூட அழகா இருக்கிறது" என்று சொல்லி என்னை உற்சாகப்படுத்தினார்.



159

எத்தனை நடிகர்களிடம் இந்த விரிந்த மனப்பான்மை - சக நடிகர்களை தட்டிக்கொடுக்கும் தாராள மனம் இருக்கிறது?

"தர்மத்தின் தலைவன்" படத்தில முதன் முதலாக நாங்கள் சேர்ந்து நடித்தோம்.

அப்பாவுடன் முதன் முதலாக "சங்கிலி" படத்தில் நடித்தபோது மிகவும் பயமாக இருந்தது. ஆனால் ரஜினியுடன் நடிக்கும்போது ரொம்ப ஆர்வமாக இருந்தது.

"நம்ம நடிப்பை ரஜினி எப்படி ரெஸ்பான்ஸ் பண்ணப் போகிறார்? அவர்கூட நடிக்கும்போது, நம் அசைவுகள் எப்படி இருக்கும்?" என்றெல்லாம் முதல் நாளில் இருந்தே முடுக்கிவிட்டேன், கற்பனைக் குதிரையை. அவ்வளவு ஆர்வம்!

ஏராளமான படங்களில் நடித்து முடித்த பிறகும், ஷாட் முடிந்ததும் "நல்லா பண்ணினேனா?" என்று மற்றவர்களிடம் அப்பா கேட்டுத் தெரிந்து கொள்வார். இதே பழக்கம் ரஜினிக்கும்! அவரது அமோக வெற்றிக்கு இதுவும் ஒரு காரணம். அப்பாவைப் பற்றி அவர் சொல்லும் ஒரே வார்த்தை "அடேங்கப்பா!" இந்த "அடேங்கப்பா" வில் தான் எத்தனை ஆழமான விமர்சனம் அடங்கியிருக்கிறது! அடேங்கப்பா!

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து-167

"யக்கா! ஒன்னிய இத்தன வருசம் கழிச்சு இங்கயா பாப்பேன்? வீடாள வேண்டிய ராசா மகள வெறகு சொமக்க வச்சிருச்சே விதி. ஆன மாதிரி ஒரு புருசன் இருந்தும் புலிமாதிரி ஒருபிள்ள இருந்தும் வேகாதகாட்ல வெந்த சாகிறதே ஓம் பொழப்பாச்சே. நாங்குடிக்கிறது ஓங் கஞ்சி; உடுத்துறது ஒஞ் சேல; படுக்கறது ஓம் பாயி. சக்களத்தி ஆனாலும் நீதான்டி ஏந்தாயி."

வாரவ கடந்துபோக வசதியும் பண்ணிக்கொடுத்தா. தலச்சொம வெறக நடுக்குத்தலா எறக்கி அதை கருவேர மரத்துல சாச்சி வச்சிட்டு. போற பிடாரி போகட்டுமின்னு மூஞ்சி திருப்பி வழிவிட்டா.

அவளா போவா? தவ்வி ஓடி வந்து வெறகுக்கட்டத் தாங்கிப்புடிச்சுக்கிட்ட.

வாழாவெட்டயாப் போன வளும் வாழவந்தவளும் இப்ப மூஞ்சிக்கு மூஞ்சி கண்ணுக்கு கண்ணு பாத்து நிக்கிறாக.

கையில இருந்த பையைக் கரையில போட்டுட்டு,வாயில இருந்த வெத்தலையத் 'த்து' ன்னு துப்பிட்டு, "யக்கா" ன்னு கட்டிப்புடிச்சுக் சத்தம் போட்டு அழுக ஆரம்பிச்சா திம்சு.

கருவேல மரத்துல காரியம் பாத்துக்கிட்டிருந்த ரெண்டு கரிச்சான்குருவிக என்னமோ ஒரு அசம்பாவிதம் ஆகப் போகுதுன்னு விசுக்குன்னு பறந்து வெளியேறிச்சுக.

ஒப்பாரிக்கு உண்டான ராகத்த வசனத்துக்கு எசகூட்டி வாங்கு வாங்குன்னு வாங்குறா திம்சு.

வாயத் தொறந்தா அவளுக்கு பாட்டு வந்திருது. ஆனா வரச்சொன்னா கண்ணீரும் வந்திருதே... இவ நீலிக்கு அக்காதான்னு நெஞ்சுக்குள்ள சொல்லிக்கிட்டா கருவாச்சி. அவள லெசா வெலக்கி வெலக்கித் தன்னவிடுவிச்சுக்கிட்டா.

தன்னப்பத்தி எனக்கு ஒண்ணுந் தெரியாதுன்னு இவ இந்த வேசங்காட்டி ஆடுறா. 'எனக்கு ஒன் சரித்திரமே தெரியுமடி சக்களத்தி[illegible] இவளுக்கு நான் எப்படி சொல்றது?'

பட்டுன்னு ஒரு மின்னலு அவ பொட்டுல அடிச்சு ஓடிச்சு; பளிச்சின்னு கேட்டுப்புட்டா கருவாச்சி.



'நெறஞ்ச வீட்டுக்காரி அழுகலாமா? கண்ணத் தொடச்சுக் பேயம்மா'

காதுக்குள்ள பாம்பு கொத் [illegible] போச்சு [illegible] கண்ணீரு ஒழுக இன்னும் காயாத கண்ணுல இப்பத் தீ எரியுது. ஒரு எட்டு பின்னுக்கு வைச்சு சடார்னு சாயப்போனவ தைரியத்தைக் கூப்பிட்டுத் தன்னத் தாங்கி புடிக்கச் சொன்னா. ஓம் மொத்த பொழப்பும் தொரியும்டீ ஆத்தான்னு ஒரே வார்த்தைல [illegible]டிச்செறிஞ்சுட்டாளே; இவ கெட்ட சாதிச் சிறுக்கின்னு முடிவுக்கு வந்துட்டா. வெத்தல போட்ட வாயி இப்ப வெழுத்துப்போச்சு; வெத்தல போடாத கண்ணு செவந்து போச்சு.

"ஏம் பேரு..."

"ஓம்பேரு மட்டும் இல்லடியம்மா... ஒன் வம்சமும் தெரியும்; ஒன் வகிசியும் தெரியும்...."


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# ஆழ்கடல் மீன்களின் அற்புத இயல்புகள்

பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களும் தாம் வாழும் சூழலுக்கேற்ப தம்மை இசைவுபடுத்திக் கொண்டு வாழுகின்றன. ஆழ்கடலில் வாழும் உயிரினங்களும் அவ்வாறே வாழுகின்றன. சமுத்திரமானது பல பகுதிகளைக் கொண்டுள்ள போதிலும் பெரும்பாலான மக்கள் சமுத்திரத்தின் ஒரு சில பகுதிகளையே அறிந்துள்ளனர். உதாரணமாக நீரும் நிலமும் சந்திக்கும் பகுதி (intertidal zone), திறந்த கடல் மற்றும் ஒளி ஊடுபுகும் ஆழம் (pelagic zone). உண்மையிலே கடலில் குளிரானதும இருண்டதும் ஆழமானதுமான இடங்களும் உள்ளன (Mesopelagic, Bethypelagic, Abyssalpelagic and Hadalpelagic). ஆழ்கடலானது 200 m ஆழத்திலிருந்து சுமார் 8000 m ஆழம் வரை பரந்து காணப்படுகி



(படம் 1).


ன்றது (படம் 1).

ஆழ்கடலின் பௌதீக, இரசாயன மற்றும் உயிரின இயல்புகளாவன ஒளி, அழுத்தம், நீரோட்டம், வெப்பநிலை, ஒட் சிசன், உணவு என்பனவாகும். ஆழ்கடல் உயிரினங்களின் வாழ்க்கைக்கு இக்காரணிகளானது செல்வாக்கு செலுத்துகின்றது.

ஒளியானது (Light) ஆழ்கடலில் முதன்மைக் காரணியாக காணப்படுகின்றது. ஆழ்


(படம் 2)

கடலானது சமுத்திரத்தின் மேற பகுதியிலிருந்து சுமார் 200 m ஆழத்தின் பின்னரே தொடங்குகின்றது. இவ்வாழத்திலிருந்து ஒளியின் ஊடுருவலானது குறைந்து சென்று 6000 m ஆழத்தின்பின் ஒளியே இல்லாமல் இருண்ட பிரதேசமாகவே உள்ளது. இப்பகுதி யில் வாழும் மீன்களானது தம்மை அப்பகுதிக்கு தக்கனவாக மாற்றிக் கொண்டன. அதாவது தாமாகவே ஒளியினை பிறப்பிக்கும் ஆற்றலினை கொண்டுள்ளது. இவ்வாற்றலானது ஒளிபிறப்பிக்கும் தன்மை 'Biolumninescence' என அழைக்கப்படும். இது ஒரு வகை நுண்ணங்கியின் இரசாயன தாக்கத்தினாலோ அல்லது உயிரியின் உடலின் ஒரு பகுதியினால் பிறப்பிக்கப்படும் ஒளியாகும் (படம் 2). ஆழ்கடலில் ஒளியானது இம்மீனினங்களிற்கு மிகவும் அவசியமாகின்றது எவ்வாறெனின் இரையினை தேடிக் கொள்ள, இரையினை தான் பிறப்பிக்கும் ஒளியினால் கவருவதற்கும் மற்றும் இனப்பெருக்கத்திற்கு தன் இனத்தினை தேடிக் கொள்வதற்காகவும் ஒளியானது ஆழ்கடலில் அவசியமாகின்றது. இவ்வொளியின் பிரகாசமானது சூரிய ஒளியின் பிரகாசத்திலும் குறைவானதாகும். இவை பொதுவாக நீலம் அல்லது நீலப்பச்சை எனும் நிறமுடைய ஒளியினை உருவாக்கும். எனினும் ஆழ்கடல் மீனினங்களில் விசேடித்த உறுத்துணர்ச்சி அங்கங்கள் மேலதி கமாக காணப்படுகின்றது. உதார ணமாக சில மீன்களில்


(படம் 3)

(stout blacksmelt – North Pacific Ocean- படம் 3) மிகவும் பெரிய கண்கள் காணப்படுதல். இவற்றின் மூலம் மிகச்சிறிய ஒளியினையும் உணரக்கூடியதாக இருக்கும். இன்னும் சில மீன்களில் (tripodfish) கண்கள்குருடாகவும்மணம் தொடுகை மற்றும் அதிர்வுகளை உணருவதற்கும் உணர்ச்சி அங்கங்கள் விசேடமாகக் காணப்படுகின்றது.


ஆழ்கடலில் அடுத்ததாக செல்வாக்குச் செலுத்தும் காரணியாக காணப்படுத்துவது அழுத்தமாகும் (Pressure). "ஆழம் கூடக்கூட அழுத்தம் கூடும்". மிகவும் கூடுதலான அழுத்தமானது மீன்களிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. உயர் அழுத்தமானது மீன்களின் காற்றுப்பையில் பாதிப்பை ஏற்படுத்தும் குறிப்பாக மென்சவ்விலும் மற்றும் சிக்கலான உயிரியல் மூலக்கூற்றையும் பாதிகும். இவ்வுயரமுத்தத்தை ஆழ்கடல் மீன்களானது எவ்வாறு எதிர்கொள் கினறது என நோக்கும் போது அவை சில மேலதிக இயல்புகளைக் கொண்டுள்ளன. சில மீன்களில் அமுக்கத்தில் ஏற்படும் பாதிப்பினை தடைசெய்யும் கட்டமைப்பானது அவற்றின் உடலில் காணப்படுகின்றது. இன்னும் சில மீன்களில் சேதன மூலக்கூறானது உதாரணமான ரைமெதையில் அமைன் ஒட்சைட் (trimethylamine oxide) காணப்படுகின்றது, இது உயரமுத்தத்தினால் பெரிய சேதனமூலக்கூறில் ஏற்படும் உருக்குலைவினைத் தடைசெய்கின்றது. சில மீன்களில் வாயுவினால் நிரம்பிய காற்றுப்பைகளும் மற்றும் சில மீன்களில் கொழுப்பினால் நிரம்பிய காற்றுப்பைகளும் காணப்படும் அதேவேளை காற்றுப்பையே இல்லாமலும் சில மீன்கள் வாழுகின்றது. கொழுப்பானது கடல் நீரிலும் பார்க்க அடர்த்தி குறைந்ததால் இம்மீன்களினால் ஆழ்கடலில் மேல்மட்டங்களிற்கு மிதந்து வரக்கூடியதாக உள்ளது. சில மீன்களில் உதாரணமாக சுறாக்களில் காணப்படும் ஈரலில் மிக அதிகளவில் அடர்த்தி குறைந்த கொழுப்பானது (squalene) காணப்படுகின்றது. இது கடலின் வேறு மட்டங்களில் மிதக்க உதவுகின்றது.

அடுத்ததாக வெப்பநிலைக் காரணியானது ஆழ்கடல் மீன்களின் வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. கடலின் மேற்பரப்பில் வெப்பநிலையானது அதிகளவில் தொடர்ச்சியற்று மாறிக் கொண்டிருக்கும். மேற்பரப்பு நீரின் வெப்பநிலையானது ஆழ் கடலின் வெப்பநிலையிலும் பார்க்க அதிகளவில் காணப்படும். நீரின் வெப்பநிலையானது ஆழத்துடன்குறைந்துகொண்டு சென்று 2-5°C ஆக காணப்படுகின்றது. ஆழ்கடல் மீனினங்கள் தமது உடலில் தளர்வான நெகிழ்வான புரதத்தினையும் மற்றும் நிரம்பலடையாத கொழுப்பினைக் (unsaturated fat) கொண்ட மென்சவ்வுகளையும் கொண்டுள்ளது. இதனால் இம்மென்சவ்வானது வெப்பநிலை குறையும்போது விறைப்படையாமல் இருக்கும். இன்னும் சில மீன்களில் நிலைக்குத்து மட்டத்தில் மேல் கீழாக செல்லும் போது வெப்பநிலை மாற்றத்தினை எதிர் நோக்குகின்றது. இம்மீன்களில் ஒரு கலத்தில் அதிகளவில் டீஒட்சி றைபோ நியுக்கிளிக் கமிலத்தினைக் (DNA) கொண்டுள்ளது. இந்த DNA பலதரப்பட்ட நொதியத் தொகுதி யின் செயற்பாட்டினை வேறுபட்ட வெப்பநிலையில் அனுமதிக்கும். இதனால் ஆழ்கடல் மீன்களானது வெற்றிகரமாக ஆழ்கடலில் வாழுகின்றது.

## ஓர் கண்ணோட்டம்

அடுத்த முக்கிய காரணியாக உணவானது காணப்படுகின்றது. ஆழ்கடலில் ஒளியில்லாத காரணத்தினால் அங்கு ஒளித்தொகுப்பு நடைபெறாது. எனினும் உக்கல்கள் மிகவும் அதிகமாக காணப்படுகின்றது. அதிகளவான உயிரங்கிகள் உக்கல் உண்ணிகளாகவே காணப்படும். பொதுவாக மீன்களை நோக்கும் போது அவை இரைகௌவிகளாகவே காணப்படுகின்றது. இவை மிகவும் பெரிய வாயினையும் அகலமாக விரியக் கூடிய தாடையினையும் மற்றும் பெரிதாக விரிவடையக்கூடிய இரைப்பையினையும் கொண்டுள்ளது இவற்றின் மூலமாக அதிகளவான உணவினை உள்ளெடுக்க கூடியதாக இருக் கும். இம்மீன்களின் பற்களானது மிகவும் நீண்ட கூரியதாக உள்ளது (படம் 4). இதன் மூலம் இரையினை கெட்டியாக பிடிக்க உதவும். மேலும் சில இனங்கள் இரையினைக் கவருவதற்காக ஒளியினை அதன் உடலின் சில பாக்ங்களிலிருந்து பிறப்பிக்கும். இதன் மூலம் இரையினை கலைத்துப்பிடிக்காமல் ஓரிடத்தில் பதுங்கியிருந்து பிடிக் கும் உக்தியினைக் கொண்டுள்ளது.

மேலும் சில ஆழ்கடல் மீனினங்கள் பல்வேறு பட்ட இசைவாக்கங் களை காட்டுகின் றன.


(படம் 4)

பெரும்பாலான மீனினங்கள் எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக பொய்க்கோலம் பூணுதல். இவ்வாழ கடலில் பரந்த இரு ண்ட ஆழமான இடங்களில் மீன்களா னது தனது துணையைக் கண் டுபிடிக்க மிகவும்கடினமாககருதுகின்றது. இதனால் இம்மீனினங்கள் ஒளியினையும் ஒரு வகையான மணத்தையும் பிறப்பித்து தமது துணையைக்கவரு கின்றன.

இவ்வாறாக பல மீனினங்கள் பல இசைவாக்கங்களைக் கொண்டு ஆழ்கடலில் வெற்றிகரமாக வாழ்ந்து கொண் டிருக்கின்றன.

**திருமதி.சுதர்சினி சத்தியரூபன்**
விரிவுரையாளர்
மீன்பிடி விஞ்ஞானத்துறை
விஞ்ஞான பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

**கடந்த 05.06.2015 அன்று நீரும் நானும் என்ற தலைப்பில் வெளியான கட்டுரையின் ஆசிரியர் பெயர் தவறாக பிரசுரமாகியுள்ளது. அக்கட்டுரையை ஆஷா என்பவர் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.**

## வாரத்திற்கு ஒரு புதிர்! 137

உலக சமுத்திர தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

புதிர் 137 இற்கான விடைகளை 29.06.2015 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**கு.குணாளன்**
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண
விஞ்ஞானசங்கம்,
விரிவுரையாளர் (குருதிகாண்)
மீன்பிடி விஞ்ஞானத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கப் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**புதிர் 136 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கே. இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை

**புதிர் 136 க்கான கேள்வியும் விடையும்:**

டெங்கு நோயை கட்டுப்படுத்த இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட நுண்ணங்கியின் பெயர் என்ன?

BTI பக்றீரியா (Bacillus thuringiensis israelensis)

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 137**

சரியான விடை:-................................................

முழுப்பெயர்:-................................................

முகவரி:-................................................

தொலைபேசி இல:-................................................

கையொப்பம்:-................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவம் தப்பிய மழையால் 614.6 மில்லியன் நட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த மேமாதம் பெய்த பருவம் தப்பிய மழை காரணமாக மரக்கறி செய்கையில் 614.6 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக யாழ். மாவட்டம், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் கீ.சிறி பாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் கடந்த மேமாதம் ஏற்பட்ட சீரற்ற கால நிலையால் மரக்கறி செய்கையில் பாரிய அழிவு ஏற்பட்டிரு ந்தது.

மொத்தமாக 3 ஆயிரத்து 986 ஹெக்டெயர் நிலப்பரப்பில் மரக்கறிச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அந்த வகையில் மிளகாய், வெங்காயம், பெரிய வெங்காயம், கத்தரிக்காய், கோவா, பூசணிக்காய், பீற்றூட், கரட், தக்காளி, லீக்ஸ், பாகற்காய், புடோல், மரவள்ளிக் கிழங்கு, மிளகு, கௌப்பி, பயறு, உழுந்து, இஞ்சி, நிலக் கடலை, வாழை மற்றும் பப்பாசி ஆகிய மரக்கறிகள் பயிரிடப் பட்டிருந்தன.

மொத்தமாக மரக்கறிச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பில் ஆயிரத்து 254 ஹெக்டெயர் நிலப்பரப்பில் மரக்கறிச் செய்கை அழிவடைந்துள்ளது.

இதில் 119 ஹெக்டெயர் நிலப்பரப்பில் 75 வீதமாக அழிவும் ஆயிரத்து 135 ஹெக் டெயர் நிலப்பரப்பு 100 வீத மாக அழிவடைந்துள்ளது.

குறிப்பாக சிறுப்பிட்டி, நீர்வேலி, மானிப்பாய், சண்டிலிப்பாய், கெருடாவில், சங்கானை, சுழிபுரம், பண்டத்தரிப்பு, மட்டுவில், வட்டுக்கோட்டை, உடுவில் , மாதகல், கோப்பாய், தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் மரக்கறிப் பயிர்கள் அழிவடைந்துள்ள என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 60 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 80 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 160 | 120 | 140 |
| தக்காளி | 100 | 100 | 100 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 120 | 110 | 100 | 100 | 100 |
| கரட் | 250 | 200 | 280 | 160-300 | 150 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 | 30 |
| புடோல் | 120 | 60 | 80 | 60 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 160 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 250 | 160 | 120 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 150 | 150 | 120 | 100-200 | 120 |
| கருணைக் கிழங்கு | 150 | 80 | 160 | 100 | 100 |
| பயற்றங்காய் | 150 | 180 | 100 | 140 | 160 |
| லீக்ஸ் | 200 | 140 | 200 | 160 | 180 |
| பீற்றூட் | 150 | 120 | 160 | 60 | 80 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 400 | 500 | 450 |
| போஞ்சி | 300 | 240 | 280 | 240 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | 40 | — | 60 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 20 | 40 | 15 |
| தேசிக்காய் | 150 | 140 | 120 | 160 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40-50 | 60 | 50 |
| இராசவள்ளி | 200 | 120 | 160 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 320 | 200 | 200 |
| முள்ளங்கி | 120 | 80 | 120 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 20 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 10 | 20 |

# மகிந்தவின் கடந்த பத்தாண்டுகால ஆட்சியில் ஊழல்வாதிகளும் திருடர்களுமே உருவாகினர்

## முதலமைச்சர் ஹரீன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த பத்து ஆண்டுகளில் ஊழல்காரர்களும் திருடர்களுமே உருவாகினர் என ஊவா மாகாண முதலமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

திருடர்களையும், மோசடிகாரர்களையும் உருவாக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மேலும் எதற்காக ஆட்சி அதிகாரத்தை கோருகின்றது.

கடந்த அரசாங்கம் இன்னும் மூன்று மாதங்கள் ஆட்சி செய்திருந்தால் நாட்டு மக்கள் வீதிக்கு தள்ளப்பட்டிருப்பார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான அரசாங்கம் நாட்டு மக்களை கடன் சுமையிலிருந்து மீட்டுள்ளது.

இலங்கையின் சகல விடயங்களையும் கடந்த காலங்களில் கண்டித்து வந்த அமெரிக்காவின் ஜனாதிபதி கூட இலங்கைக்கு விஜயம் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளார்.

முதலீட்டாளர்கள் பலர் இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டுகின்றனர.

புதிய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகவே இவ் வாறு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் கடந்த கால அரசாங்கத்தில்கொள்ளைகளில், மோசடிகளில் ஈடுபட்டமையினால் தற்போதைய பொருளாதார நிலைமை சீரழிந்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கத்தின் வளர்ச்சியை கடந்த ஆட்சியாளர்களினால் தாங்கிக்கொள்ள முடிய வில்லை என ஹரீன் பெர்னாண்டோ கொழும்பு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார். (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 406

சாகி சாகித்தியா




மோகன் ராஜ்




பவானி சங்கர்





ரகு ரகுராம்




தனு தனுசன்




மாது மாதுசன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

noolaham.org | aavanaham.org

# லண்டன் (ப)ரகசிய சந்திப்பு







தோல்வி மனநிலையிலிருந்து விடுபட்டு இராஜதந்திரக் களங்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டிய கட்டத்தில் ஈழத் தமிழர்கள் இருக்கின்றார்கள். ஆயுதப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க வெற்றிகளை பெற்றிருந்தாலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இராஜதந்திர களமாடுதலில் ஈழத்தமிழர்கள் வெற்றி பெற்றவர்களாக இருந்தது இல்லை. அதுதான், ஆயுதப் போராட்டத்தை (யும்) அடியோடு அழித்தது.

ஜனாதிபதித் தேர்தலின் பின் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களின் போக்கில் தற்போது விரிந்துள்ள புதிய இராஜதந்திரக்களம், ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதுதான். மஹிந்த ராஜபக்ஷவின் அகற்றத்தோடு அது, விரைவாக எம்மை நோக்கி நகர்த்தப்பட்டிருக்கின்றது.

இல்லாவிட்டாலும், சில காலத்துக்குப் பின்னர் நாம் அந்தக் களத்தை எதிர்கொளள வேண்டி வந்திருக்கும். ஆக, அந்த ராஜதந்திரக் களத்தை நாம் விரும்பியோ, விரும்பாமலோ எதிர்கொள்ள வேண்டியது அவசியமானது.

தென்னாபிரிக்க அரச சார்பற்ற நிறுவனமொன்றின் ஏற்பாட்டிலும் சுவிட்ஸர்லாந்து மற்றும் நோர்வே ஆகிய நாடுகளின் பங்களிப்போடும், புலம்பெயர் தமிழ்ப் பிரதிநிதிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் லண்டனில் அண்மையில் சந்திப்பொன்றை நடத்தியிருந்தனர். இந்தச் சந்திப்பை புதிய ராஜதந்திரக் களத்தின் முக்கிய புள்ளியாகக் கொள்ள முடியும்.

இரகசியச் சந்திப்பாக திட்டமிடப்பட்டிருந்த லண்டன் சந்திப்பு, தமிழ்த் தரப்புக்குள்ளிருந்து வெளிப்பட்ட சந்தேகங்களின் போக்கில் பரகசியமாக்கப்பட்டது. இந்தச் சந்திப்பு, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னும்- பின்னும் சிங்கப்பூரிலும் பிற இடங்களிலும் இடம்பெற்ற இரகசியச் சந்திப்புக்களின் தொடர்ச்சியே.

அதுபோல, இது இறுதியான சந்திப்பும் அல்ல. அந்த நிலையில், குறித்த சந்திப்புக்களின மீதான சந்தேகங்கள் இயல்பானவை. (இந்தச் சந்திப்புக்களில் இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பங்குபற்றியிருந்தது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.)

ஈழத்தமிழர்கள் என்கிற பெரும் கருவியை இரண்டு தளங்களில் கூர்மையாக்கி மேற்குலகம் கையாளுகின்றது. புலத்திலுள்ளவர்களை, இலங்கையின் அரசாங்கங்களை மாற்றுவதற்கான அல்லது அரசியல் நெருக்கடிகளை வழங்குவதற்கான தரப்பாகவும் புலம்பெயர்ந்துள்ளவர்களை சர்வதேச ரீதியில் இலங்கைக்கு இராஜதந்திர நெருக்கடிகளை வழங்கும் தரப்பாகவும் கையாண்டு வந்திருக்கின்றது.

ஆய்த போராட்டத்தின் புள்ளியில் ஈழத் தமிழர்கள் ஒருமுகப்படுத்தப்பட்டிருந்தாலும், 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான கடந்த ஆறுவருட காலம், புலம்- புலம்பெயர் தளங்களுக்கிடையில் குறிப்பிட்டளவு இடைவெளியையும் ஏற்படுத்தியிருந்தது.

ஒருமுகப்படுத்தப்படும் புள்ளி அகற்றப் படும்போது இடைவெளி சாத்தியமானதுதான். ஆனால், அந்த இடைவெளியின் அளவு நாளுக்கு நாள் அதிகரிக்கும் வேகம் அச்சமூட்டுவதாக இருக்கின்றது. அது, இயல்பாகவே பெரும் பதற்றமான நிலையை ஈழத் தமிழர்களின் இரண்டு தரப்புக்குள்ளும் (புலம்- புலம்பெயர்) ஏற்படுத்தியிருக்கின்றது.

இலங்கையை தமது தாயகமாக கொண்டிருந்தாலும், மேற்குலகில் பரந்துள்ள ஈழத் தமிழர்களின் அடுத்த தலைமுறை, தவிர்கக முடியாமல் எமது அரசியல் நெருக்கடிகளையும் போராட்டத்தையும் உணர்ந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் அற்றுப்போவதற்கான சாத்தியங்கள் அதிகரித்துள்ளன.

ஏனெனில், அந்தத் தலைமுறை தன்னை அகதியாகவோ, புலம்பெயர்ந்தவனாவோ காட்டிக்கொள்வதிலுள்ள அடையாளச் சிக்கல் அந்த நிலையை ஏற்படுத்தியுள்ளது. அது, இயல்பானது. அதனால், அந்த நாட்டுப் பிரஜைகளாக மட்டுமே அவர்கள் தங்களை அடையாளப்படுத்தும் சூழலும் உருவாகிவிட்டது.

இதற்கு, கனடாவில் பரந்துள்ள எமது அடுத்த தலைமுறையை பெரும் உதாரணமாகக் கொள்ள முடியும். (இந்த விடயம் பற்றி பிறிதொரு தருணத்தில் பேசலாம்) ஆனால், இந்த நிலையை நாம் அவ்வளவு ரசிக்க முடியாவிட்டாலும் அதுதான் யதார்த்தம். இப்படியான நிலையிலும், எம்மை நோக்கி நகர்த்தப்பட்டிருக்கின்ற புதிய இராஜதந்திரக் களம் முக்கியத்துவம் பெறுகின்றது.

தமக்கு உவப்பில்லாத மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியை மாற்றுவதற்கான கருவியாக ஈழத் தமிழர்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மேற்கு நாடுகள் பலமாகக் கையாண்டன. புலம்பெயர் தமிழ்ச் சமூகத்துக்கு மேற்குலகம் கொடுத்த அங்கிகாரம் என்பது பலமுறை அளவுக்கு அதிகமாக இருந்திருக்கின்றது.

அது, உசுப்பேத்திவிட்டு உலையில் வீழ்த்தும் உத்திபோலவும் தெரிந்தது. மற்றொரு கோணத்தில், அது தமிழ் மக்களின் தார்மீகக் கோபத்தின் பெருமெழுச்சியை தமக்குச் சார்பாக மேற்குலகம் கையாண்டிருக்கின்றது என்றும் கொள்ளமுடியும்.

ஆயுதப் போராட்டத்துக்குப் பின்னராக தமிழ்த் தேசிய அரசியல் என்பது மிகவும் பலவீனமான நிலையிலேயே இருக்கின்றது. வெளித்தோற்றத்தில் தமிழ்த் தேசிய அரசியல் உறுதிப்பாட்டோடு இருப்பது போல காட்டப்பட்டாலும் அதன் அடிப்படை என்பது செல்லரிப்புக்களினால் ஆனது. ஏனெனில், தேசியமொன்றை தக்கவை ப்பதற்கு தேவையான பொருளாதாரம், கல்வி, பண்பாடு, மொழி உள்ளிட்ட அடிப்படைகளின் மீது பாரிய ஈட்டிகள் பாய்ச்சப்பட்டுவிட்டன.

ஆக, மீளெழுச்சி என்பது அடிப்படைகளை சீராக தக்கவைப்பதிலும், ஒழுங்கமைப்பதிலும் தங்கியிருக்கின்றது. அந்த வகையில், தாயகத்திலுள்ள தேவைகள் சிலவற்றை புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தைக் கொண்டு சீரமைக்க முடியும். அந்தப் புள்ளியின் போக்கில் தற்போதுள்ள புதிய இர்ராஜதந்திரக் களத்தினை வெற்றிகரமான புள்ளியில் கையாள முடியும். மாறாக, எதிர்ப்பு நிலையில் இருப்பது என்பது வெற்றியடையக் கூடிய சில புள்ளிகளையும் புறந்தள்ளும் சூழலை உருவாக்கும்.

மேற்குலகின் சதிராட்டத்துக்குள் நாம் சிக்கியிருந்தாலும் எமது அடிப்படைப் பிரச்சினைகளை சிங்கள பௌத்த தேசியவாத அரசாங்கங்களோடு பேசியாக வேண்டியது அவசியம். அதனைத் தவிர்ப்பது என்பது என்றைக்குமே பலன்களைத் தராது. பேச்சுக்களில் நம்பிக்கையில்லாவிட்டாலும் பேச்சுக்கள் எத்தனை தடவை தோல்வியடைந்தாலும், நாம் மீண்டும் மீண்டும் நேரடிப் பிணக்காளர்களோடு பேச வேண்டியிருக்கின்றது. அவர்களோடு பேசுவதைத் தவிர்ப்பது இராஜதந்திர ரீதியிலும் வெற்றிகளைப் பெறுவதற்கான வழிகளை அடைத்துவிடும்.

லண்டன் சந்திப்புக்களின் பின்னரான பிரதிபலிப்புக்கள் சில தளங்களின் முன்னேற்றமான புள்ளிகளைக் காட்டி யிருக்கின்றன. அல்லது, அதற்கான கட்டாயங்களை உருவாக்கியிருக்கின்றது.

ஆனால், இந்தச் சந்திப்புக் குறித்து சிங்கள பௌத்த தேசியத் தரப்புக்குள் மாத்திரமின்றி, தமிழ்த் தரப்புக்குள்ளும் பலமான சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன. அதனை, சந்திப்புக்களின் பங்காளிகள் தீர்த்து வைக்க முயன்றாலும், சந்தேகம் கொள்ளும் தரப்புக்களோ, படுகுழியின் வாசலில் நிறுத்தி வைத்து போதிக்கும் நிலையோடு ஒப்பிடுகின்றார்கள்.

"புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் அனைவரும் பயங்கரவாதிகளோ, பிரிவினைவாதிகளோ அலல. அவர்கள் கொம்பு வைத்த பேய்களும் அல்ல. அவர்களையும் இணைத்துக் கொண்டு நாட்டினை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

அதனால், எதிர்க்கடசிகள் தேவையற்ற சந்தேகங்களைக் கொள்ள வேண்டியதில்லை.' என்று லண்டன் சந்திப்புக்கள் தொடர்பில் மங்கள சமரவீர அண்மையில் நாடாளுமன்றத்தில் விளக்கமளித்தார். அதுபோல, புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தடை மீதான மீளாய்வு மற்றும் புலம்பெயர் சமூகங்களை வரவேற்கும் நிகழ்வுகளை நடத்துவது தொடர்பிலும் அவர் அறிவித்திரு க்கின்றார்.

இந்தச் சந்திப்புக்களின் இன்னொரு பங்காளியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், 'புலம்பெயர் தமிழர்கள் தொடர்பிலான இலங்கை அரசாங்கத்தின் அணுகுமுறை ஆரோக்கியமானது' என்றிருக்கின்றார்.

முக்கிய தரப்பான, புலம்பெயர் தமிழ்ப் பிரதிநிதிகளோ, 'தமிழர் பிரச்சினைகளுக்கான இறுதித் தீர்வு தொடர்பிலோ, ஐக்கிய நாடுகள் விசாரணை நிறுத்தம் பற்றியே குறித்த சந்திப்புக்களில் பேசப்படவில்லை. மாறாக, வடக்கு- கிழக்கின் அபிவிருத்தி தொடர்பிலேயே பேசப்பட்டது' என்றிருக்கின்றார்கள்.

லண்டன் சந்திப்புக்களின் பங்காளிகள் அனைவரும் 'வடக்கு- கிழக்கின் உள்ளக அபிவிருத்தி, மீள்கட்டுமானம்' என்கிற விடயங்களையே ஒருங்கிணையும் புள்ளியாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். ஆனால், உள்ளக அபிவிருத்தி அல்லது மீள் கட்டுமானம் தொடர்பில் பேசப்பட வேண்டுமாக இருந்தால் ஏன், இந்தச் சந்திப்புக்கள் ரகசியமான முறையில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன என்பது தொடர்பில் எதிர்க்கேள்வி எழுவது இயல்பானது. அதற்கு, தோல்வியடைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ தரப்பு அதனை தம்முடைய இனவாத அரசியலுக்காக கையாளும் என்று வைத்துக் கொண்டாலும், இந்த மூன்று தரப்புக்களின் சந்திப்புக்களை எவ்வளவு காலத்துக்கு இரகசியமாக வைத்துக்கொள்ள முடியும் என்கிற அடிப்படைக் கேள்வியும் எழும்.

ராஜதந்திரப் பேச்சுக்கள் என்பதே ரகசியங்களினாலும். மறைமுக இணக்கப்பாடுகளினாலும் ஆனதுதான். வெளியில் சொல்லப்படுவதும், உண்மையாக பேசப்படுவதும் பல நேரங்களில் வேறு வேறாகவே இருக்கின்றன. இதுதான், உலக வழக்கம். இந்த யதார்த்தத்தின் போக்கில் லண்டன் சந்திப்புக்களில் அதிர்வு நிலை காணப்படுவது சாத்தியமானதுதான்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டவர்களுடன் மிக நெருக்கமான தொடர்புகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பேணுகின்றார் என்கிற கருத்தியலும், இந்த லண்டன் சந்திப்பு தொடர்பில் நம்பிக்கை கொள்ளவதற்கான சாத்தியங்களை தமிழ்த் தளத்தில் இல்லாமற் செய்திருக்கின்றன.

தமிழ்த் தேசிய அரசியல் என்பது தேசிய ரீதியில் பேச்சுக்கள், தொடர்பாடல்களை மேற கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றது. அந்த இடத்தில் எம்.ஏ.சுமந்திரன் முக்கியமான கருவியாக கருதப்பட வேண்டியவர். ஆனால், அவர் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சக நாடாளுமன்ற உறுப்பினர்களே சந்தேகம் வெளியிடுவது மக்களை குழப்பமான கட்டத்துக்குள் கொண்டு சேர்த்துள்ளது. அல்லது, இரா.சம்பந்தனோ, எம்.ஏ.சுமந்திரனோ தங்களை நோக்கிய குற்றச்சாட்டுக்கள், ஐயப்பாடுகள் தொடர்பில் அவ்வளவு தெளிவுபடுத்தல்களைச் செய்வதில்லை. அது, முக்கியமான தருணங்களில் வேறு மாதிரியான விளைவுகளையும் ஏற்படுத்தி விடுகின்றது.

லண்டன் சந்திப்பில் உண்மையிலேயே வடக்கு- கிழக்கின் அபிவிருத்தி, மீள் கட்டுமானம் தொடர்பிலேயே பேசப்பட்டது என்றால், அதை வரவேற்கலாம். ஏனென்றால் அது, காலத்தின் தேவை. ஆனால், இந்த காரணங்களை முன்னிறுத்திவிட்டு, வேறு விடயங்களில் தமிழ் மக்கள் மீண்டும் அடகு வைக்கப்பட்டிருந்தால், சந்திப்புக்களில் பங்கெடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், புலம்பெயர் தமிழ்ப் பிரதிநிதிகளும் பெரும் பொறுப்புக் கூறலுக்கு உள்ளாக வேண்டிவரும். ஆகவே, தமிழ் மக்களுக்கு இந்த இரு தரப்பும் உண்மையாக இருக்க வேண்டியது அவசியம்.

-மிரர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலப்பு தேர்தல் முறைமையானது சிறுபான்மையைப் பாதிக்காது

(கொழும்பு) 

**கலப்பு தேர்தல் முறையினால் சிறுபான் .மைச் சமூகங்களின் பிரதிநிதித்துவம் குறை யாது என்பதற்கு அரசியலமைப்பின் 99 ஏ ஆவது ஷரத்து போதிய உத்தரவாதம் வழங்கியுள்ளது என தேசிய ஐக்கிய அமைப்பின் தலைவரும் ஜனாதிபதியின் சட்டத்தரணியுமான எம். எம். சுஹைர் தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்றத்தில் சிறுபான் மையினரின் பிரதிநிதித்துவம் குறையும் என்று சில சிறுபான் மைக் கட்சிகள் தெரிவிக்கும் குற் றச்சாட்டு அடிப்படையற்றது.

தேர்தல் மறுசீரமைப்புக்காக முன்வைக்கப்பட்டிருக்கும் உத்தேச தேர்தல் முறைமை மூலம் பாராளு மன்றத்தில் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் குறைவடையும் என்று சில சிறுபான்மைக் கட்சிகள் கூறுவது அடிப்படையற்றது.

பொதுத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர், தேசியப் பட்டியல் உறுப்பினர்களை நியமிக் கும் போது அதனை, இன விகிதா சாரத்திற்கு ஏற்ப சகல இனத்தவரு க்கும் பகிர்ந்தளிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நிபந் தனை தற்போது நடைமுறை யிலுள்ள அரசியல் யாப்பின் 99 தி ஷரத்தின் 4ஆவது உப பிரிவில் தெளிவாக உள்ளடக்கப்பட்டுள்ளது என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள ளது. இது அரசியல் யாப்பு உள்ள டக்கியுள்ள உத்தரவாதமும் சட்ட ரீதியான பாதுகாப்புமாகும்.

அதேவேளை வரலாற்று ரீதி யாகப் பார்க்கும் போது 1947 ஆம் ஆண்டு முதல் தொகுதிவாரி முறை மையின் கீழ் நடைபெற்ற ஒவ் வொரு தேர்தல்களிலும் சிறுபான் மையினரின் பிரதிநிதித்துவம் இன விகிதாசாரத்திற்கு ஏற்ப சரிநிகராகக் கிடைக்கப் பெற்றுள்ளது.

தற்போதைய விகிதாசாரத் தேர் தல் முறைமைக்குப் பதிலாக தொகு திவாரி மற்றும் விகிதாசாரப் பிரதி நிதித்துவமும் கலந்த கலப்பு தேர் தல் முறைமையை அறிமுகப்ப டுத்துவது எனக் கொள்கைப் பிரகட னததிலும் 100 நாள் வேலைத் திட்டத் திலும் வழங்கிய வாக்குறு தியை நிறை வேற்றுமாறு ஜனாதிப தியிடமும் பிரதமரிடமும் தேசிய ஐக்கிய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போதுள்ள 160 தொகுதி களின் கீழ் பல்தொகுதி அங்கத்தவ ர்கள் அடங்கலாக 168 பாராளும ன்ற உறுப்பினர்களையோ அல்லது அதற்கு மேலோ நியமிப்பதற்கு அரசியலமைப்பில் திருத்தம் செய்ய முடியுமாயின் தற்போதுள்ள தேர் தல் முறைமையில் சமச்சீரற்ற நிலைமையின் ஊடாக எல்லை நிர்ணய ஆணைக்குழுவைத் தற் காலிகமாகத் தவிர்த்துக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரி வித்தார். (இ-5)

# மகிந்தவை தோற்கடித்தது ஓர் வரலாற்றுத் தவறாகும்

## உதய கம்மன்பில தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போன்ற ஓர் யுகப் புரு ஷரை தோற்கடித்தமை ஓர் வரலா ற்றுத் தவறாகும் என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அண்மையில் திவுலபிட்டியவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மகிந்த அரசாங்கத்தை ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது மைத் திரிபால சிறிசேனவோ தோற்கடிக்க வில்லை. பராக் ஒபாமா, நரேந்திர மோடி போன்றவர்கள் கூட்டாக இணை ந்து மகிந்தவை தோற்கடித்தனர்.

ஜோன் கெரி, நரேந்திர மோடி போன்றவர்கள் இலங்கை விஜயம் செய்தமை தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தவேயாகும்.

இலங்கைக்கு விஜயம் செய்த நரேந்திர மோடி மற்றும் ஜோன் கெரி இலங்கைக்கு உதவியாக ஒரு சதமேனும் நிதி உதவி வழங்க வில்லை. மகிந்த ராஜபக்ஷ ஓர் யுகப்புருஷர்.

அவ்வாறான ஓர் அரச தலை வரை தோற்கடித்தமை வரலாற்றில் நாம் செய்த மாபெரும் தவறா கவும், முட்டாள்தனமாகவும் கரு தப்பட வேண்டும்.இன்னும் 40 ஆண்டுகளில் நாட்டின் எரிபொருள் வளம் இல்லாமல் போய்விடும்.

மன்னாரில் காணப்படும் எரி பொருள் வளங்களை சூறையா டவே வெளிநாட்டு சக்திகள் இந்த முயற்சியை மேற்கொள்கின்றன.

இலங்கையை இந்தியாவி னதோ அல்லது அமெரிக்காவி னதோ காலனியாக மாற்ற இடமளி க்கப்பட முடியாது என உதய கம்ம ன்பில தெரிவித்துள்ளார். (இ-5)

# சு.கவை பிளவடையச் செய்வதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கே நன்மை!

## எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவ்டையச் செய்வதனால் ஐக்கிய தேசிய் கட்சிக்கே நன்மை ஏற்படும் என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்து ள்ளார்.

கட்சி பிளவடைந்தால் அதன் முழு சாதகத் தன்மையும் ஐக்கிய தேசியக் கட்சியை சென்றடையும் என சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

எமக்கு உண்டாகும் பிளவு ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழியை ஏற்படுத்திக் கொடுக்கும்.

மிக நீண்ட காலமாக கட்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரு



கின்றோம்.

இறுதியில் எங்களை புறந்தள்ளி எவனோ ஒருவன் பதவிகளை அபகரித்துச் செல்கின்றான்.

இலங்கையின் மிகவும் வலு வான முற்போக்குக் கட்சிக்கு இவ் வாறான ஓர் நிலைமை ஏற்பட வேண்டுமா? என்பதனை நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும்.

எனவே, நாட்டின் அனைத்து முற்போக்குக் கட்சிகளும் ஒன்றி ணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளிக்க வேண்டும்.

கட்சியின் வெற்றிக்காக அனை வரும் பங்களிப்பு வழங்குவார்கள் என எதிர்பார்ப்பதாக நிமால் சிறி பால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து சிங்கள ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## ஒற்றுமை

ஒரு ஊரில் அண்ணன், தம்பி இரண்டு பேர் இருந்தார்கள். அவர்களுடைய தந்தை கடைசியாக அவர்களுக்கென்று விட்டி ட்டுப் போன சொத்து.

ஒரு மாமரம், ஒரு பசுமாடு, ஒரு போர்வை இவ்வளவு தான். இந்த மூன்றையும் அவர்கள் இருவரும் ஆளுக்கு பாதியாக பிரித்துக் கொள்ள வேண்டும்.

எப்படிப் பாகம் பிரிப்பது? எப்படி பங்கு போட்டுக் கொள்வது? எல்லாவற்றையும் சரிபாதியாக வெட்டி ஆளுக்கு அரைவாசி யாகவா எடுத்துக் கொள்ள முடியும்? அண்ணன்காரன் ஒரு மக்கு. என்ன சொன்னாலும் தலையாட்டிக் கொண்டு போவான். தம்பிக்காரன் புத்திசாலி. இருந்தாலும் அந்தப் புத்தி சாலித்த னத்தை தவறாக உபயோகப்படுத்தக் கூடியவன்.

அந்தத் தம்பி அண்ணனிடம் சொன்னாள்.

"அண்ணா நம்முடைய அப்பா நமக்காக விட்டுட்டுப் போன சொத்தை நாமிருவரும் ஒற்றுமையாக இருந்து பிரித்துக் கொள்ள லாம். ஊரைக் கூட்டி பஞ்சாயத்து பண்ண வேண்டிய அவசிய மில்லை" என்றான்.

"அப்படியானால் சரி, தம்பி நீயே அதைப் பங்கு போடு" என்றான் அண்ணன்.

தம்பி யோசித்தான் அதற்குப் பின் சொன்னான்.

"அண்ணா, நீங்கள் வயதில் மூத்தவர். அதனால் மூன்று விடயத்திலும் உங்களுக்குத் தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதுதான் நியாயம். முதலில் அந்த மாமரத்தை எடுத்துக் கொள்வோம். அதில் அடிப்பாகம் தான் வலுவானது. அதனால் அந்த மரத்தின் அரைவாசிக்குக் கீழ் உள்ளதெல்லாம் அதாவது வேர் உட்பட அடிப்பாகம் முழுவதும் உங்களுக்கு. மேல்பாகம் வெறும் கிளையும் இலையுமாக இருப்பது எனக்கு இருக்கட்டும். அடுத்ததாக அந்தப் பசுமாடு.

எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். அதனால் அந்த மாட்டின் தலைப்பாகம் உங்களுக்கு. பின்பக்கம் எனக்கு இருந்து விட்டுப் போகட்டும். அடுத்தது அந்தப் போர்வை. "அதைப் பகல் முழுவதும் நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். இரவு முழுவதும் நான் வைத்துக் கொள்கிறேன்" என்றான் தம்பி.

விபரம் புரியாத அண்ணன் சரியென்று ஒத்துக் கொண்டான். அதற்குப் பின் என்ன ஆயிற்று தெரியுமா? அண்ணன் அந்த மரத்துக்கு உரமிட்டான். நீர் பாய்ச்சினான். தம்பி ஜாலியாக மரத்தின் மேல் உட்கார்ந்து பழத்தையெல்லாம் பறித்துக் கொண் டிருந்தான். அண்ணன் பசுமாட்டுக்குத் தீனி வைத்தான். புல்லை அள்ளி வந்து போட்டான். தண்ணீர் வைத்தான். தம்பி தன்பாட்டுக்கு பால் கறந்து கோப்பி போட்டு குடித்துக் கொண்டி ருந்தான்.

அண்ணன் பகல் முழுவதும் அந்தப் போர்வையை சும்மா மடித்து வைத்திருந்தான். தம்பி ஜாலியாக இராத்திரியில் அதை வாங்கிப் போர்த்திக் கொண்டு தூங்கினான். இப்படியே நடந்து கொண்டிருந்தது. இதை பக்கத்து வீட்டுக்காரன் ஒருநாள் கவனித்தான் நடப்பது நியாயமில்லை என்பதைப் புரிந்து கொண் டான் உடனே அந்த அண்ணனை இரகசியமாக ஒருநாள் தன் வீட்டு க்கு அழைத்துக் கொண்டு வந்து சில யோசனைகளை சொல்லி, இனிமேல் இப்படி நடந்து கொள் என்று சொன்னான். அவனும் சரியென்று சொல்லி தலையாட்டி விட்டுப்போனான். அதன் பின் என்ன ஆயிற்று தெரியுமா? அண்ணன் மரத்துக்கு உரம் வைப்பது தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்தினான். மரம் காய்க்கவில்லை. தம்பி முழிக்க ஆரம்பித்தான். பின் ஒரு கோடரியை எடுத்து வந்து அடிமரத்தை வெட்ட ஆரம்பித்தான். தம்பி பதறிப்போய்" என் னண்ணே இப்படிசெய்கிறீர்கள்?"என்றான்.

"என்னுடைய பங்கில் நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். உன்னுடைய பங்கிலேயா நான் வெட்டுகிறேன்?" என்று கேட்டான்.மாட்டுக்குத் தீனி வைப்பதையும் தண்ணீர் வைப்பதையும் நிறுத்தினான். தம்பியால் பால்கறக்க முடிய வில்லை. தவித்துப் போய் விட்டான்.

அந்தப் போர்வையை பகல் முழுவதும் அண்ணன் வைத்தி ருந்து இரவு நேரம் வருவதற்குள் அதை தண்ணீரில் நனைத்து தம்பியிடம் கொடுத்தான். அவனால் போர்த்திக் கொள்ள முடிய வில்லை. அதன் பின் அண்ணனிடம் சமரசம் செய்து கொண்டு நியாயமாக நடக்க ஆரம்பித்தானாம் அந்தத் தம்பி. ஒற்றுமை யாக வாழ்வதிலும் ஒழுங்கு முறை வேண்டுமென்பது இதிலிரு ந்து புரிகிறதல்லவா! ஒருத்தன் சொன்னான்.

"என்னுடைய எதிர் வீட்டுக்காரனிடம் நான் மிகவும் பிரியமாக நடந்து கொண்டேன். அவனை என்னுடன் கூடப்பிறந்த தம்பி யாக நினைத்துப் பழகினேன். தம்பியென்று தான் கூப்பிடுவேன். அதுதான் இப்பொழுது வில்லங்கமாகி விட்டது"என்றான்.

"ஏன்?" என்று கேட்டேன்."அவனும் அதை நிஜமென்று நினைத் துக் கொண்டு இப்பொழுது என்னுடைய சொத்தில் பங்கு கேட்கி றான் சேர்" என்றான் மிகவும் வேதனையோடு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள்

## 16.06.2015~16.07.2015



செல்வ நிலை உயரும் நேரம்!

**வெளிவட்டாரப் பழக்க வழக்கத்தை விரிவு செய்து கொள்ள விரும்பும் மிதுன இராசி அன்பர்களே!**

ஆனிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசி நாதன் புதன் தனாதிபதியோடு விரய ஸ்தானத்தில் இணைந்திருக்கிறார். தனவரவு வந்தாலும் மறு நிமிடமே செலவாகிவிடலாம். இருப்பினும் ஜூன் 28 முதல் உங்கள் ராசியிலேயே ராசிநாதன் புதன்சஞ்சரிக்கப்போகிறார். எனவே, மாதத்தின் மையப் பகுதிக்கு மேல் மகிழ்ச்சி அதிகரிக்கும். மன அமைதி கூடும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். கூட்டாளிகளால் ஏற்பட்ட குழப்பங்கள் தீரும்.

இதுவரை 6இல் சஞ்சரித்து வந்த சனி, இப்பொழுது 5இல் உச்சம் பெற்றும், வக்ரம் பெற்றும் சஞ்சரிக்கிறார். எனவே, பிள்ளைகளால் பெருமை வந்து சேரும். அவர்களுக்கான வேலை வாய்ப்புகள் கிடைத்து, உதிரி வருமானங்கள் உங்கள் கரங்களில் புரளும். பூர்வீக சொத்து சம்பந்தமான பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு, இந்த வக்ரச் சனியின் ஆதிக்கத்தால் சிக்கல்கள் அகலும். செயல்பாடுகளில் வெற்றி கிடைக்கும்.

தக்க விதத்தில் நண்பர்கள் கைகொடுத்து உதவும் விதத்தில் கிரக நிலைகள் உலாவருகின்றன. இதற்கிடையில் குருப்பெயர்ச்சியும் இம்மாதம் நிகழவிருக்கிறது. பொதுவாக ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் குருப்பெயர்ச்சி இம்மாதம் உங்கள் ராசிக்கு மூன்றாம் இடமான சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறது. 7,10 இற்கு அதிபதி 3 இல் சஞ்சரிக்கும் பொழுது, வாழ்வில் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர். வழக்குகளில் வெற்றி கிட்டும். சகோதர வர்க்கத்தாரோடு இணைந்து செய்த தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படலாம். குருப் பெயர்ச்சியாகும் நேரத்தில் கவசம் பாடி வழிபட்டால், காரியங்களில் வெற்றி கிடைக்கும். பதிகம் பாடி வழிபட்டால் பணவரவில் திருப்தி ஏற்படும். துதிப் பாடல் பாடினால் தொல்லைகள் அகலும்.

**மிதுன, கடக புதனின் சஞ்சாரம்!**

ஜூன் 28 ஆம தகதி மிதுன ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். ராசிநாதன் ராசியில் சஞ்சரிக்கும் பொழுது, யோசிக்காது செய்த காரியங்களில்கூட வெற்றி கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லை அகலும். மாமன், மைத்துனர் வழி ஆதரவோடு தொழில் முன்னேற்றம் காண்பீர்கள். தொலைதூரப் பயணங்களால் ஒரு சிலருக்கு நன்மை கிட்டும். ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர் கள். ஜூலை 15 ஆம தகதி கடக ராசியில் புதன் சஞ்சரி க்கப் போகிறார். இது மேலும உங்களுக்கு நன்மையை வழங்கும். பணவரவு திருப்தி தரும். பாக்கிகளும் வசூலாகிப் பரவசப்படுத்தும். இனத்தார் பகை மாறும். ஏற்றுக் கொண்ட பணியைச் செவ்வனே செய்து முடிப் பீர்கள்.




**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு, 5,12 இறகு அதிபதியானவர் சுக்ரன். விரயாதிபதி சுக்ரன் 3 இல் சஞ்சரிக்கும் நேரம ஜூலை 2 ஆம தகதி ஆகும். எனவே சகோதரர்களால் விரயமுண்டு. சொததுக்கள் வாங்கியதில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படலாம். பத்திரப்பதிவில் கவனம் செலுத்துவது நல்லது. நீண்ட தூர மாறுதல்கள் ஒரு சிலருக்கு கிடைக்கும். வி.ஆர்.எஸ் பெற்றுக் கொண்டு விரும்பிய தொழிலைச் செய்ய ஒரு சிலர் முன்வருவர். கூட்டாளிகளின் ஜாதகம் பலம் பெற்றிருப்பதைப் பார்த்து, தொழிலுக்கு பங்குதாரராக சேர்த்துக் கொள்வது நல்லது.

**சிம்ம குருவின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 7,10இறகு அதிபதியானவர் குருபகவான். அவர் இந்த குருப் பெயர்ச்சியில் 3 இல் சஞ்சரிக்கப் போகிறார். அதன் பார்வை 7,9,11 ஆகிய இடங்களில் பதிவாகிறது. விட்டுப் போன வரன்கள் மீண்டும் வரலாம். கல்யாணக் கனவுகள் நனவாகும். தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தந்தை வழி ஒத்துழைப்பு கிடைக்கும். அன்னிய தேச வாய்ப்பு எண்ணியபடியே வந்து சேரும். தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும். மாற்று இனத்தாருடன் செய்த கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இம்மாதம் விஷ்ணுவையும், லட்சுமியையும் வழிபட்டால் விருப்பங்கள் நிறைவேறும்.


**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இந்த மாதம் வரவும், செலவும் சமமாக அமையப் போகின்றது. வாய்ப்புகள் வாயிற்கதவைத் தட்டும். வருங்கால நல்ன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் அன்னியோன்யம் அதிகரிக்கும். புத்திரப் பேறுக்காக காத்திருப்பவர்களுக்கு நல்ல தகவல் வந்து சேரும.

விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர். குருப் பெயர்ச்சிக்குப் பின்னால், குருபார்வையால் குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடி வரும். கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள் கிடைக்கலாம். நடராஜர் வழிபாடு நன்மையை வழங்கும்.

# செல்வ நிலை உயரும் நேரம்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



குரு சுக்ர சேர்க்கை கொடுக்கும் யோகம்!

**நட்பை நாடெங்கும் பெற்று ஒப்பற்ற வாழ்க்கை நடத்தும் கடக இராசி அன்பர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிற பொழுது, மாதத்தொடக்கத்தில் உங்கள் ராசி நாதன் சந்திரன் உச்சம் பெற்று விரயாதிபதி புதனுடன் இணைந்திருக்கிறார். அதே நேரத்தில் உங்கள் ராசியில் குரு உச்சம் பெற்று சுக்ரனோடு சேர்ந்திருக்கிறார். இந்த தேவ குரு, அசுர குருவின் சேர்க்கையால் பிரச்சினைகள் ஏற்பட்டாலும்கூட, நாரதர் கலகம் நன்மைக்கே என்பது போல பிரச்சினைகளுக்கு நல்ல முடிவு உருவாகிவிடும்.

6 இறகு அதிபதியான குரு பகவான் ஒன்பதாமிடத்திற்கும் அதிபதியாக விளங்குகிறார். 4இறகு அதிபதியான சுக்ரன் 11 ஆம் இடத்திற்கும் அதிபதியாக விளங்குகிறார். அந்த முரண்பாடான கிரகங்களின் சேர்க்கையின் மூலம், பொருளாதார நிலையில் இருந்த நெருக்கடிகள் அகலும். புதிய வேலை வாய்ப்புகள் ஒரு சிலருக்கு கிடைக்கும். அன்னிய தேசத்திலருந்து வரும் தகவல் ஆச்சரியப்பட வைக்கும். உறவினர்களிடம் ஏற்பட்ட உரசல் மாறி உண்மையான அன்பு வெளிப்படும்.

அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு மறைமுகப் பகையால் மனக்கலக்கம் ஏற்பட்டாலும், மாதத்தின் பிற்பகுதியில் அதாவது குருப்பெயர்ச்சிக்குப் பிறகு சோதனைகள் மாறும். சுகங்கள் கூடும். துணிவும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொழில் மாற்றச் சிந்தனைகள் ஒரு சிலருக்கு உருவாகலாம்.

குரு ஜூலை 5 ஆம தகதி சிம்மத்திற்கு செல்கிறார். இதுவரை ஜென்மத்தில் சஞ்சரித்து வந்த குரு, கடந்த ஓராண்டாக அதிக அலைச்சலையும், ஆதாயக் குறைவையும் தந்திருக்கலாம். இனி 2 இல் சஞ்சரிக்கும் குரு திரண்ட செல்வம் தரும் என்பதற்கேற்ப, பணவரவு திருப்திகரமாக இருக்கும். எனவே பெயர்ச்சியாகும் குருவை, ஆலயத்திற்கு சென்று வழிபட்டு வாருங்கள். வானவர்க்கு அரசனான குருவை வழிபட்டால், தேனான வாழ்க்கை அமையும். யோகபலம் பெற்ற நாளில வழிபட்டால் யோகங்கள் அதிகரிக்கும்.

**மிதுன, கடக புதனின் சஞ்சாரம்!**

மிதுன ராசியில் ஜூன் 28ஆம தகதி புதன் சஞ்சரிக்கப் போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. விரயாதிபதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது விரயங்கள் அதிகரிக்கும். குடும்பச்சுமை கூடும். சம்பளம் போதவில்லையே என்று சங்கடப் படுவீர்கள். கைமாற்று வாங்கி காலம் தள்ளுபவர்களுக்குகூட கவலை அதிகரிக்கும். சொத்து விற்பனையால் பணத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். விலையுயர்ந்த பொருட்களை விற்று, வாங்கல்-கொடுக்கல்களை ஒழுங்கு செய்ய நேரிடும். அதே நேரத்தில் ஜூலை 15 ஆம தகதி கடகத்தில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். 3,12 இறகு அதிபதி, ராசியில சஞ்சரிக்கும் பொழுது சகோதரர்களால் விரயங்கள் உருவாகலாம். மக்கள் செல்வங்களின் கல்யாண வாய்ப்புகளுக்காக ஒரு தொகையைச் செலவிட்டு மகிழ்வீர்கள். வீடுமாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் நிகழக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நேரமிது.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜூலை 2 ஆம தகதி சிம்ம ராசிககு சுக்ரன் செல்கிறார். இதன் விளைவாக பொருளாதார நிலை உயரும். புதிய பாதை புலப்படும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். வாங்கல்-கொடுக்கல்கள் ஒழுங்காகும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.




**குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி!**

ஜூலை 5ஆம தகதி தன ஸ்தானத்தில் குரு சஞ்சரிக்கப் போகிறார். எனவே, தனவரவு தாராளமாக வந்துசேரும். இனத்தார் பகை மாறும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். மனதளவில் செய்த காரியங்களை மறுநிமிடமே செய்து முடிப்பீர்கள். புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சிகளில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் வாய்ப்பு உண்டு. நீண்ட நாள் ஆசை நிறைவேறும். இம்மாதம் தட்சிணாமூர்த்தி வழிபாட்டை வியாழக்கிழமை தோறும் மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இந்த மாதம் குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் கூடுதல் நன்மை உங்களுக்கு கிடைக்கும். அதுவரை பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மாதத் தொடக்கத்தில் வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதன் மூலம் விரயங்களில் இருந்து வடுபட இயலும். கணவன்-மனைவிக்குள் வேறுபாடு ஏற்படாமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. குழந்தைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகும். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். தட்சிணாமூர்த்தி வழிபாடு சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

# குரு சுக்ர சேர்க்கை கொடுக்கும் யோகம்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மெர்ஸ்' வைரஸால் 23 பேர் உயிரிழப்பு

தென்கொரியாவில் புதிய வகை 'மெர்ஸ்' என்ற மூச்சுத் திணறல் நோய் பரவி வருகிறது. அதனால் அங்கு பலர் உயிரிழந்து வருகின்றனர்.

நேற்று இந்நோய்க்கு சிகிச்சை பெற்று வந்த மூன்று பேர் இறந்ததால் ஒட்டு மொத்த பலி எண்ணிக்கை 23 ஆக உயர்ந்துள்ளது. மேலும் அந்நாட்டில் 160 பேர் 'மெர்ஸ்' நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சகம் உறுதி செய்துள்ளது. நோய் ஏற்பட வாய்ப்புள்ளதாக கருதப்படும் 6.700 பேர் அவர்களின் வீடுகளிலும், வைத்தியசாலைகளிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் ஒரு வைத்தியசாலையை சேர்ந்த 25இற்கும் மேற்பட்ட நோயாளிகள், ஊழியர்கள் மற்றும் வைத்திய சாலைக்கு வந்த வர்களுக்கும் மெர்ஸ் நோய் தொற்று ஏற்பட்டிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இவர்களின் நிலை கண்டறியப்படுவதற்கு முன் நூற்றுக்கணக்கான மக்களுடன் நெருங்கி பழகியது உறுதி செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# குண்டு வெடித்ததில் 63 பேர் உயிரிழப்பு

(அபுஜா)

**நைஜீரியாவில் போகோஹராம் பயங்கரவாதிகளின் முகாமில் நடந்த குண்டு வெடிப்பில் பொதுமக்கள் 63 பேர் உயிரிழந்துள்ளனர்.**

வடகிழக்கு நைஜீரியாவிலுள்ள மான்குனோ நகரில், போகோஹராம் பயங்கரவாதிகள் முகாமை கண்டுபிடித்த அந்நாட்டு இராணுவத்தினர், முகாம் வாசலில் கிடந்த சாக்கு மூட்டையை அப்புறப்படுத்த முயன்றபோது, அதிலிருந்த நாட்டு வெடிகுண்டுகள் வெடித்தன. இதில் அப்பகுதிகளில் நின்று கொண்டிருந்த 63 பேர் உடல் சிதறி பலியாகினர்.

அரசுக்கு எதிராக நைஜீரியாவில் பாடசாலைகள், சந்தைகள், இராணுவ மையங்கள், சோதனைச் சாவடிகள் ஆகிய இடங்களைக் குறிவைத்து போகோஹராம் அமைப்பினர் தாக்குதல் நடத்துதல் அதிகரித்து வருவதை அடுத்து, அந்நாட்டு புதிய ஜனாதிபதியாக முகமது புஹாரி பொறுப்பேற்றபின், தீவிரவாத இயக்கங்களை ஒடுக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை வெட்டுக்குளம் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தின் திவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை 20 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு தேர்த்திரு விழாவும் மறுநாள் 29 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (இ-3-7)

# ஐ.எஸ்.தீவிரவாதிகளின் தாக்குதலால் ஏமனில் 31 பேர் உயிரிழந்துள்ளனர்

(சனா)

ஏமனில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டு தாக்குதல்களில் நேற்று முன்தினம் 31 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஏமன் தலைநகர் சனாவில் சித்திக் பிரிவு இஸ்லாமியர்களின் மசூதி மற்றும் அரசு அலுவலங்கள் மீது ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் வெடிகுண்டு தாக்குதல் நடத்தி யுள்ளனர்.

இந்த குண்டு வெடிப்புகளில் 31 பேர் பலியாகினர். 12 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர் என்று வைத்திய சாலை மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹவுதிகளுக்கு எதிராக பழிவாங்கும் நடவடிக்கையாக இந்த வெடிகுண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது. ஏமனில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னதாக ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் சரமாரியாக வெடிகுண்டு தாக்குதல்களை நடத்தினர். இதில் சுமார் 142 பேர் பலியாகினர்.

இதனையடுத்து தற்போதும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தரப்பில் மசூதி மற்றும் முக்கிய தலைவர் கள் வீடுகளை குறிவைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)



உயர்தர மாணவர்களுக்கான செயலமர்வும் வினாவிடைத் தொகுப்பு வழங்கல் நிகழ்வும் அண்மையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. மாங்குளம் உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆ.சக்திதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.




பிராந்திய முகாமையாளரின் ஆசிச் செய்தி

எனது அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய வாடிக்கையாளர் பெருமக்களுக்கு! இந் நிறுவனம் தனது எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுவதில் பெருமை பெறுவதில் நானும் ஒருவன். இந்த நாட்டின் வங்கி அல்லாத நிதித் துறையின் முதல் நிறுவனமானது The Finance 06.02.1976 இல் நிர்வாக இயக்குநரும் முகாமைத்துவ பணிப்பாளருமான திரு. லலித் கொத்தலாவல அவர்களால் யாழ்ப்பாணத்தில் முதலாவது கிளையாக ஆரம்பிக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 32 ஊழியர்களைக் கொண்ட ஒரு பிரபல்யமான நிதி நிறுவனமாக யாழ்ப்பாணத்தில் மிளிர்ந்தது.

பின்னர் யாழ்ப்பாணத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலை மற்றும் போர்ச்சூழல் காரணமாக வியாபார நடவடிக்கைகளை மட்டுப்படுத்தி மீண்டும் 2002 ஆம் ஆண்டு வியாபார நடவடிக்கைகளை விரிவுபடுத்தி 2005 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24 ஆம் திகதி நெல்லியடி, சாவகச்சேரி போன்ற பகுதிகளில் உதவிக் காரியாலயங்களை நிறுவி யாழ்ப்பாணத்தில் தனக்கென உரிமையான சொந்தக் கட்டடத்தில் தனது சேவைகளை தொடர்ந்தும் வழங்கி வருகின்றது.

இது ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் வீட்டுப்பாவனைப் பொருட்களுக்கும் கடன் வசதி வழங்கி வந்துள்ளது.

இதன் முக்கிய கொள்கையாக நிலையான வைப்பு; சேமிப்பு போன்றவற்றால் எமது மக்களிடம் இருந்து பெறப்படும் பணம் மீண்டும் எமது மக்களுக்கே கடன் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்பதனை உறுதியாக கொண்டது. அத்துடன் சமூகப் பணியில் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

இந்நிறுவனத்தில் 01.04.1980 ஆம் ஆண்டில் ஊழியராக இணைந்து கொண்ட நான் இன்று பிராந்திய முகாமையாளராக இருந்து இச்சிறப்பிதழுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். அத்துடன் இந் நிறுவனம் தொடர்ந்தும் இலங்கையில் சிறந்து விளங்கி நூற்றாண்டு விழா கொண்டாட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து ஆசிச் செய்தியை நிறைவுபடுத்திக் கொள்கின்றேன்.

மு.இரகுநாதன், பிராந்திய முகாமையாளர்.

# 75 வருட உண்மையான நம்பிக்கை

1940ஆம் ஆண்டுஸ் தாபிக்கப்பட்ட த பினான்ஸ் நிதி நிறுவனம் யாழ் மக்களின் மீது கொண்டுள்ள மதிப்பினையும் மரியாதையினையும் உறுதி செய்வதற்காக தமது முதலாவது கிளையினை யாழ் மண்ணிலேயே திறந்தது. காலம் காலமாக செம்மண் பூமியின் நம்பிக்கையினை வென்று இம் மக்களின் வாழ்வு மேம்பட சேவையாற்றிய நாம் மேலும் பல்லாண்டுகள் உங்களுக்கு சேவையாற்றி உங்கள் வாழ்வினை மேலும் மெருகூட்டுவோம் என நாம் உறுதி மொழி வழங்குகின்றோம்.

லீசிங் / குத்தகை | நிலையான வைப்புகள் | வியாபாரக் கடன்கள்

சேமிப்பு வைப்புகள் | தனிப்பட்ட கடன்கள | தங்கக் கடன் சேவை

(C-1319)



எழுபத்தைந்து வருடங்களாக என்றும் நம்பிக்கையுடன் சௌபாக்கியத்திற்கு வழிகோலும்

த பினான்ஸ் கம்பனி பீ.எல்.சீ.

இலங்கையில் சிறப்புமிக்க நிதிச்சேவைத் துறையின் பங்காளி

Jaffna 0212 222 310 | Chavakachcheri 0212 270 035 | Nelliady 0212 264 170


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரத்தை மாற்றுவதற்கு சிலதரப்பினர் நடவடிக்கையாம்


## மகிந்த குற்றச்சாட்டு

சில தரப்பினர் இலங்கையின் கலாசாரத்தை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற பூஜை வழிபாடொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடு சென்ற பாதையை வேறு பக்கம் திசை திருப்பும் முயற்சிகளிலேயே இவர்கள் ஈடுபடுகின்றனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். எதிர்காலத்தில் பூஜை வழிபாடுகளை மேற்கொள்ளும் மேடைகள் அல்லமாறாக அரசியல் மேடைகளே உருவாக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குழுவொன்று இந்த நாட்டின் கலாசாரத்தை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. சிங்கள கலாசாரத்தை நம் மத்தியிலிருந்து தகர்த்தி தூரமாக்குவதற்கே இத்தரப்பினர் முனைந்து வருகின்றனர் என அவர் தெரிவித்தார்.

மனித உரிமைகள், சமத்துவம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கதைத்துக் கொண்டு தேசியத்தை நாசகரமாக்கும் சூழ்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். வீடுகளில், மாளிகைகளில் திருட்டுத்தனமாக செய்தவற்றை தற்போது பொது இடங்களில் செய்து அதை சட்டமாக்க முனைகின்றார்கள். நாம் சென்ற பாதையை வேறுபக்கமாக மாற்ற முனையும் போது பழிவாங்கல்கள், பகைமை, குரோதங்கள் இவர்களின் முக்கிய பங்காக காணப்படும் வேளையில் நாம் செய்யும் பூஜை வழிபாடுகளின் காரணமாக அந்த தலைவர்களின் மனங்களில் பகைமை உணர்வுகள் இல்லாமல் போகட்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-5)




# ஜெனீவாவுக்கான இலங். முன்னாள் பிரதிநிதி சேனுக்கா மீதான குற்றச்சாட்டுக்கள் நீக்கம்

(கொழும்பு)

**ஜெனீவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியின் உத்தியோகபூர்வ அலுவலகத்தை புனரமைப்புச் செய்வது தொடர்பாக, அப்போதைய நிரந்தரப் வதிவிடப் பிரதிநிதியும், வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளரும், தாய்லாந்துக்கான தற்போதைய இலங்கைத் துதுவருமான சேனுக்கா செனவிரத்ன மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தவறானவை எனக் கண்டறியப்பட்டுள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.**

வெளிவிவகார அமைச்சின் கேட்போர்கூடத்தில் நேற்று முன்தினம புதன்கிழமை இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அமைச்சின் பேச்சாளர் திருமதி மஹிஷினி கொலன்னே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜெனீவாவுக்கான இலங்கையின் நிரத்தர வதிவிடப் பிரதிநிதியின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் 2009 ஆண்டு இடம்பெற்ற இந்தப் புனரமைப்பு வேலைகள் தொடர்பான ஒப்பந்தம் விடுதலைப் புலிகள் அமைப்போடு சம்பந்தப்பட்ட பி.ரி. துரைராஜா என்பவருக்கு வழங்கப்பட்டதாகவும், அத்தோடு குறித்த புனரமைப்புப் பணிகள் சரிவர இடம்பெற்றிருக்கவில்லை எனவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

சேனுக்கா செனவிரத்னவைத் தொடர்ந்து ஜெனீவாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பதவியை வகித்த தமரா குணநாயகம் முன்வைத்த குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து, கணக்கறிக்கை மேற்கொள்ளப்பட்டதோடு, அதில் சேனுக்கா மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

தற்போது புதிய அரசாங்கத்தின் கீழ், தாய்லாந்துக்கான இலங்கைத் தூதுவராக சேனுக்கா நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, எழுப்பப்பட்ட எதிர்ப்புக்குரல்களைத் தொடர்ந்து, இது தொடர்பான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டது.

இந்த விசாரணைகளின் முடிவில், குறித்த ஒப்பந்தமானது சேனுக்கா பதவியேற்பதற்கு முன்னதாகவே வழங்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, வேறு அவசரப் பணிகள் காரணமாகவும் விடுப்பில் காணப்பட்ட காரணத்தாலும், குறித்த புனரமைப்புப் பணிகள் தொடர்பான மீளாய்வுகளையோ அல்லது அந்த ஒப்பந்தப் பணிக்கான முதலிரண்டு கொடுப்பனவுகளையோ சேனுக்காவால் மேற்பார்வை செய்ய முடியவில்லை என்பதற்கான ஆதாரங்கள் காணப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

ஆனால், மூன்றாவது கொடுப்பனவை மேற்கொள்வதற்கு முன்னதாக, குறித்த புனரமைப்புப் பணிகளை சேனுக்கா நேரடியாக மீள்பார்வை செய்தார் எனவும், அதில் திருப்தியடைந்த பின்னரே அந்தக் கொடுப்பனவை மேற் கொண்டார் எனவும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இந்தப் புனரமைப்புத் தொடர்பான நடவடிக்கையில் கணிசமானளவு, சேனுக்கா பதவியேற்பதற்கு முன்னதாகவும் அவர் ஜெனீவாவில் இல்லாத காலங்களில் இடம்பெற்றுள்ளதால், குறித்த பணிகளில் காணப்பட்ட ஏதாவது குறைபாடுகள் தொடர்பாக அவர் பொறுப்புக் கூறுவதிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என விசாரணை முடிவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சஜித்துக்கு எதிரான வழக்கு ஆதாரம் வழங்க திகதி குறிப்பு

(கொழும்பு)

வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குக்கு ஆதாரங்களை வழங்குவதற்காக உயர்நீதிமன்றம், திகதி குறித்துள்ளது.

இந்த வழக்கு, நீதியரசர்களான சந்திரா ஏக்கநாயக்க, சரத் டி அபுரூ மற்றும் உபாலி அபேரத்ன ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை பரிசீலனைக்கு எடுத்துகொள்ளப்பட்ட போதே நீதியரசர்கள் குழு மேற்கண்டவாறு பணித்துள்ளது.

இந்த வழக்குக்கு மேலும் ஆதாரங்களை வழங்குவதற்கான தினமாக ஜூன் 29 ஐ உயர்நீதிமன்றம் குறித்துள்ளது.

திவிநெகும சமுதாய அடிப்படை வங்கிகளின் நிதியை, அமைச்சர் சஜித் பிரேமதாச, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களுக்கு கடன் வழங்குவதற்கு பயன்படுத்துவதாக குற்றஞ்சாட்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டரீதியற்ற திவிநெகும கடன் சிபாரிசுகள் தொடர்பில் நிதிக்குற்ற புலனாய்வு பிரிவு, பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவு பணிப்பாளர் ஆகியோரை விசாரணை செய்யுமாறு கட்டளை பிறப்பிக்க வேண்டும் என்று கோரி, மனுதாரர்கள் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கின் பிரதிவாதிகளாக வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாச, சட்டமா அதிபர் உட்பட 10 பேர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கில் மனுதாரர்கள் சார்பில் மனோகர டி சில்வா ஆஜராகியிருந்தார்.

பிரதிவாதிகளில் ஒருவரான அமைச்சர் சஜித் பிரேமதாச சார்பில் றொமேஷ் டி சில்வா ஆஜராகியிருந்தார்.

25.03.2015 திகதியிட்ட சுற்று நிருபத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய கடன் திட்டம் எதேச்சதிகாரமானது எனவும் திவிநெகும சமுதாய வங்கியில் கடன் பெறும் முறைமையை குழப்பி விட்டுள்ளதாவும் மனுதாரர் கூறியுள்ளார்.

புதிய முறையூடாக திவிநெகும வங்கிகளை அரசியல் சலுகைகளை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தமது முறைப்பாட்டை நிதிமோசடி விசாரணைப் பிரிவு ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டதாகவும் பிரதமரினால் அனுப்பப்படும் முறைப்பாடுகளை மட்டுமே தாம் ஏற்றுக்கொள்வதாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு அறிவித்துள்ளதாக மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி துசாகரன் சித்ரா

கொக்குவில் மேற்கு நாகலிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட துசாகரன் சித்ரா கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று கொக்குவிலில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கொம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



### திருமதி மனோகரன் ஞானேஸ்வரி

குமரகோட்டம் கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் லோட்டன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மனோகரன் ஞானேஸ்வரி நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



### இராசையா இரத்தினேஸ்வரன்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Albi ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா இரத்தினேஸ்வரன் கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் III Avenue,De Lattre De Tassigny,81000 Albi,France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### இராசு ரட்ணம்

77/56 இராமநாதன் றோட் கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசு ரட்ணம் கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### தம்பிப்பிள்ளை விஸ்வலிங்கம்

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)


சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் லண்டன் Hounslow ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை விஸ்வலிங்கம் கடந்த 13ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் Hendon Cemetery & Crematorium,Holders Hill Road,London NW7 1NB,United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மாணவி கொலை

# நடந்தது என்ன?





23

மாணவி வித்தியா

01.06.2015 ஜூன் மாதத்தின் முதல் நாள். காலைப் பொழுது யாழ்ப்பாணம் பண்ணை வீதி தொடக்கம் ஊர்காவற்றுறை நீதிமன்றம் வரை பொலிஸார் சந்திகள் தோறும் காவலில் ஈடுபட்டிருந்தனர். விசேட அதிரடிப்பொலிஸாரும் தாராளமாகக் குவிக்கப்பட்டனர்.

இதுபோன்ற நிலைமைகள் முன்பும் இருந்ததாயினும் அந்தச்சூழ்நிலையும் இந்தச் சூழ்நிலையும் வேறுபாடானது என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

மாணவி வித்தியாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒன்பது பேரும் சிறைச்சாலை வாகனத்தில் ஊர்காவற்றுறை நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

காலை 9 மணி. நீதிமன்ற அமர்வு ஆரம்பமாகின்ற வேளை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தைச் சுற்றி பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் தீவிரமாக இருந்தனர்.

கைதிகள் ஒன்பது பேரையும் பொலிஸார் கூட்டி வருகின்றனர். பலத்த பாதுகாப்புக்களின் மத்தியில் இவை நடக்க, நீதிமன்றத்திற்கு வித்தியாவின் தாயும் சகோதரனும் வந்திருந்தனர்.



வித்தியாவின் குடும்பம் சார்பில் பிரபல சட்டத்தரணி கே.வி.தவராசா ஆஜராகியிருந்தார். இவரின் முகதாவில் சட்டத்தரணிகளான எஸ். விஜயராணி, கே.சுகாஸ், ரி.அம்பிகா ஆகியோரும் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர்.

ஊர்காவற்றுறை நீதிபதி செல்வநாயகம் லெனின்குமார் அவர்கள் முன்னிலையில் குறித்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இரண்டு பொலிஸாரின் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

இதன்போது வித்தியாவின் சடலம் கிடந்த இடம், இடத்தின் அமைப்பு சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸாரின் விபரம் ஆகியன வாக்குமூலத்தில் பதிவு செய்யப்பட்டன.

வித்தியாவின் குடும்பம் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தமது தரப்பு வாதங்களை மன்றில் முன்வைத்தனர். இதன்போது சந்தேக நபர்களின் இரத்த மாதிரிகளைப் பரிசோதிப்பதற்கு சிறிதுகால அவகாசம் எடுக்கும் என மன்றில் பிரசன்னமாகியிருந்த குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரி கூற, அதற்குச் சட்டத்தரணி தவராசா ஆட்சேபம் தெரிவித்தார். மாணவி வித்தியாவின் படுகொலையால் நாடுமுழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடந்த வண்ணமுள்ளன. எனவே வழக்கு விசாரணைகளை விரைவுபடுத்த வேண்டும் எனக் கூறினர்.

இந்நிலையில் மன்றில் ஆஜராகியிருந்த சந்தேகநபர்களான,


பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் உதயகுமார், பூபாலசிங்கம் சசிகுமார், தில்லைநாதன் சந்திரகாந்தன், சிவதேவன் பிரசாந்தன், பரநிருபசிங்கம் குகநாதன், ஜெயரட்ணம் கோகுலன், மகாலிங்கம் சசிகுமார், மகாலிங்கம் சசிந்தன் ஆகியோரிடம் நீங்கள் ஏதேனும் மன்றில் கூற விரும்புகிறீர்களா என நீதிபதி கேட்டார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் பிரசன்னமாகாத நிலையில் நான்கு சந்தேக நபர்கள் வித்தியாவின் கொலையில் தமக்கு எந்தத் தொடர்பும் இல்லை எனத் தெரிவித்தனர்.



இதில் சந்தேகநபர் ஒருவர் வித்தியாவின் கொலைச்சம்பவத்துடன் தனக்கு எந்தத் தொடர்பும் இல்லையென்றும் சம்பவம் நடந்த மே 13ஆம் திகதி தான் கொழும்பில் தங்கியிருந்ததாகவும் அன்றையதினம் வெள்ளவத்தையிலுள்ள ஹற்றன் நஷனல் வங்கியில் (HNB) ஏ.ரி.எம். அட்டை மூலம் பணம் எடுத்ததாகவும் மன்றில் தெரிவித்தார்.

இதனையடுத்து ஊர்காவற்றுறை நீதிபதி செல்வநாயகம் லெனின்குமார் அவர்கள் விடுத்த கட்டளையில், சந்தேக நபர்களை 15.06.2015 வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், சந்தேக நபர்களின் இரத்த மாதிரிகளை யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் ஊடாக யாழ். போதனா வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரி' முன்னிலையில் பெற்று அதனை மரபணு பரிசோதனைக்கு அனுப்பி அதன் முடிவுகளை பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடுவதாக அறிவித்தார்.



அதேநேரம் சம்பவம் நடந்த அன்று தான் கொழும்பில் நின்றதாக சந்தேக நபர் ஒருவர் மன்றுக்குத் தெரிவித்திருப்பதனால் ஹற்றன் நஷனல் வங்கியின் வெள்ளவத்தைப் பிரிவில் ஏ.ரி.எம்.இயந்திரம் இயங்கும் இடத்தில் உள்ள கண்காணிப்பு கமராவின் (CCIV) 13.05.2015-14.05.2015 வரையான வீடியோப் பதிவை முழுமையாக பெற்றுக்கொள்ளுமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

(திங்கள் தொடரும்)

புருசோத்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்ஃபி



க.மதீசன் - யாழ்ப்பாணம்



கிருஷாந் - நல்லூர்



கஜி - மூளாய்



ஆர்.கரன் - சுழிபுரம்



திலேஷ்

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாயோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர்,
முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

# புகைப்படப் பொக்கிஷம்



ச.சிறிதரன் - நாவற்குழி

குருநகர் மீன்பிடித் துறைமுகம்



எ.ஆர்.ஜுட் டனிஸ்டன்

பொலிகண்டி, வல்வெட்டித்துறை கடற்கரை



கலைச்செல்வன் - பருத்தித்துறை

காரைநகர் கலங்கரை விளக்கு




ஆர்.என்.ஆர்.இராஜேஷ் - கிளிநொச்சி

போரீகடவை அம்மன்



ஹஜந்தன் - மட்டுவில்

சவுண்டுக்கிளி




கே.ரமேஸ்

யாழ்.பொக்கிஷம்



கஜமுகன் - யாழ்ப்பாணம்

மரங்கொத்தியே மரங்கொத்தியே...



தனு

இது என்ன பழம்?

அன்பு வாசகர்களே நீங்களும் புகைப்படப் பொக்கிஷத்துக்கு photosofvalampurii@gmail.com எனும் முகவரிக்கு உங்கள் பெயர் முகவரியுடன் புகைப்படம் எடுத்த இடத்தையும் குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபோதும் தோல்வியைப் பற்றி சிந்திக்க வேண்டாம். ஏனெனில் எதை நினைக்கிறோமோ அது நிச்சயம் நடக்கும். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழர்களின் எதிர்காலம் வடபுலத்து நீதிபதிகளிடம்

பண்பாட்டின் விளைநிலம் என்றிருந்த யாழ்ப்பாணத்தின்–வடபுலத்தின் சமகால நிலைமையை நினைக்கும் போது இதயம் கருகிப் போகிறது. அந்தளவிற்கு எங்கள் தமிழ் இனம் தாங்கொணாத சமூக விரோத செயல்களைச் சந்தித்து வருகிறது. அதிலும் மிகப் பெரும் வேதனை, சமூக விரோதிகள் எங்கள் மாணவச் செல்வங்களை தங்கள் அநியாயச் செயல்களுக்கு பயன்படுத்துவதாகும்.

தமிழ் இனத்தின் ஒரே மூலதனம் கல்வி. 30 ஆண்டு கால யுத்தத்தின் போதும் நாம் கட்டிக்காத்த பெரும் செல்வம் அது.

மின்சாரம் இல்லாத காலத்திலும் குப்பி விளக்கில் குந்தியிருந்து படித்து உயர்தரத்தில் சாதனை படைத்த எங்கள் மாணவர்களின் வரலாற்றை நினைக்கும் போது இன்று... இப்போது மின்சாரம், தொலைக்காட்சி, தொலைபேசி, இணையம் என எல்லா வசதிகளும் வாய்த்த போது, எதை இழக்கக் கூடாதோ அதை இழந்து போகிறோம் என்பதுதான் துயரம்.

கல்வியில், பண்பாட்டில், விருந்தோம்பலில், ஆத்மிக செழுமையில் உயர்ந்து நின்ற ஒரு இனம் யுத்தத்திற்குப் பின்னர் பான்பராக் பாக்கு, பாபுள் என்று எங்கள் இளைஞர்கள்... ஓ! கடவுளே எங்கள் பிள்ளைகளை காப்பாற்றுவது–கட்டுப்படுத்துவது யார்?

ஏன்? இப்படி ஒரு நிலைமை. பெற்றதாய் தந்தை, கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், அயல் அட்டம், உறவுகள், நட்புகள், பெரியவர்களின் போதனைகள், ஆலயங்களில் நடக்கும் தெய்வீக உரைகள் எல்லாம் தோற்றுப் போனது எப்படி?

பெற்றவர்கள் தங்கள் கடமைகளை சரிவரச் செய்யவில்லையா? மாணவர்களைக் கண்டிக்காதே என்ற சட்டம் ஆசிரியர்களின் ஆளுமையை அடியோடு அறுத்து விட்டதா? அயல், சமூகம் என்ற உறவுப் பாண்பாடுகள் வேரறுந்து; அடுத்தவீட்டான் என்ன செய்தாலும் நமக்கென்ன என்ற சுயநலம் மேலெழுந்து போயுள்ளதா? எதுவும் புரியவில்லை. ஆனாலும் எங்கள் பிள்ளைகளை, இளைஞர்களை நாம்தான் காப்பாற்ற வேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒன்று திரள்வது அவசியம்.

போதையிலும் பண்பற்ற வாழ்க்கையிலும் தொலைந்து போன இனங்கள் மீண்டதாக–எழுச்சி பெற்றதாக வரலாறு இல்லை. ஆகையால் முளையில் கிள்ளி எறிந்து எங்கள் சமூகத்தை, இளைஞர்களை, மாணவச் செல்வங்களை ஒழுக்கமான வாழ்வுக்கு தயார்படுத்துவோம்.

வெறும் கையராக, மௌனிகளாக, அடுத்த வீட்டில் கூக்குரல் கேட்க எம் வீட்டுக் கதவை இறுக்கச் சாத்துகின்ற கோழைகள் ஆகிவிட்டோம். இல்லை இல்லை ஆக்கி விட்டார்கள். இதில் இருந்து தப்பிப் பிழைக்க தமிழ் இனம் கடுமையாகப் பாடுபடவேண்டும்.

இன்று எங்கள் மண்ணில் நடக்கின்ற சமூக விரோத செயல்களை அடியோடு வேரறுக்கக் கூடியவர்கள் வடபுலத்தின் நீதிபதி என்ற ஒரே ஒரு நம்பிக்கை மட்டுமே தமிழ் மக்களிடம் உள்ளது. இந்த நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துவதாக வடபுலத்து நீதிபதிகளின் செயற்பாடுகளும் மக்களுக்காக அவர்கள் தெரிவிக்கும் அறிவுறுத்தல்களும் அமைந்துள்ளமை கண்டு ஆறுதல் அடைய முடிகிறது.

அரசியலால், அதிகாரத்தால், தலைமைத்துவத்தால், பொருளாதாரத்தால் பலவீனப்பட்டுப் போயுள்ள எங்கள் இனம் மீண்டும் மிடுக்கோடு எழுகை பெற, வடபுலத்தின் ஒரே நம்பிக்கை நீதிமன்றங்கள் என்பதை இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

# நம்பிக்கை இல்லா பிரேரணை மீது சி.சு.கவின் கண்காணிப்பு தீவிரம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விரைவில் விவாதத்துக்கு எடுத்து நிறைவேற்றும் முயற்சியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை அடுத்த மாதம் மூன்றாவது வாரத்தில் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முடியுமென சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது தெரிவித்திருந்த நிலையிலேயே, சிறிலங்கா சுதந்திரக் கட்சி இந்நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன்படி அடுத்த வாரம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது இது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே நிமல் சிறிபால டி சில்வா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்வரும் 6ஆம் திகதி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி அன்றைய தினம் காலை 9.30 மணி முதல் 6.30 மணிவரை விவாதத்தை நடத்தி அதன்பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

அதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பாகவும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது ஆராயப்பட்டது. இவ்வேளையில் ஜுலை மாதம் 3வது வாரத்தில் இதற்கு அனுமதியளிப்பதாக சபை முதல்வர் தெரிவித்திருந்தார்.

ஆயினும், இப்பிரேரணையை அதற்கு முன்னர் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவே நாம் முயற்சிக்கின்றோம். இதன்படி அடுத்த வாரம் வியாழக்கிழமை நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது குறித்து தீர்மானமெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

# நலிவுற்ற நாடுகளில் தென் சூடான் முதலிடம்

உலகின் மிக நலிந்த நாடுகளின் பட்டியலை அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட அமைதிக்கான நிதியம் (The Fund For Peace (FFP) வெளியிட்டுள்ளது.

178 நாடுகளிடையே நடத்தப்பட்ட அந்த ஆய்வில் 34ஆவது இடத்தை பிடித்துள்ள இலங்கை அவதானத்துடன் இருக்கவேண்டிய நாடுகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

உலகிலேயே மிக நலிவுற்ற நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் தென் சூடான் பட்டியலிடப்பட்டுள்ளது. இரண்டாம், மூன்றாம், நான்காம் இடங்களை முறையே சோமாலியா, மத்திய ஆபிரிக்க குடியரசு, சூடான் ஆகிய நாடுகள் பெற்றுள்ளன.

மிக உயர்ந்த நிலைபேண் தன்மை கொண்ட நாடாக பின்லாந்து தெரிவாகியுள்ளது. அடுத்து சுவீடன், நோர்வே, டென்மார்க், லக்ஸம்பேர்க், சுவிஸ்ஸர்லான்ட போன்ற 14 நாடுகள் நிலைத்திருக்கும் நாடுகளாக பட்டியலிடப்பட்டுள்ளன.

வருடம் தோறும் இந்த ஆய்வைச் செய்துவரும் இந்த அமைப்பு அந்தந்த நாடுகளில்பல்வேறுபட்ட ஆய்வறிக்கைகள், சுட்டிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த தரப்பட்டியலை வெளியிட்டுள்ளது. (எ-11)

# நட்டஈடு வழங்கும் நிகழ்வு

தேசிய இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபையின் சுரங்கங்களில் சேவையாற்றிக் கொண்டிருந்த போது உயிரிழந்த மற்றும் உடல் ஊனமுற்ற நிலைக்குள்ளானவர்களுக்கு நட்டஈடு வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம் பெற்றது.

லுனுகல பிரதேசத்தில் சுரங்கம் ஒன்று இடிந்து விழுந்ததாலும் கிலிமலே பிரதேசத்தில் சுரங்கம் ஒன்றில் ஏற்பாட்டில் விஷ வாயு கசிவின் காரணமாகவும் உயிரிழந்த மற்றும் உடல் ஊனமுற்ற நிலைக்குள்ளான ஐவருக்கு ஜனாதிபதியால் நட்டஈடு வழங்கப்பட்டது.

உயிரிழந்த நபர் ஒருவருக்காக ஐந்து இலட்சம் ரூபா நட்டஈடு வழங்கப்பட்டதுடன் உடல் ஊனமுற்றவர்களுக்கு பணம் வழங்கப்பட்டது.

அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப் பிட்டிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபையின் அதிபர் அருன குணவர்த்தன ஆகியோர் உட்பட பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-3)

# கௌரவித்தல்

பெண் தலைமைத்துவ குடும்பத் தலைவிகளை கௌரவித்தல் நிகழ்வானது கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடமாகாண சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### ஆடை விடயத்தில் கவனம்

★ விருந்தினர் வீட்டில் நுழைந்தால, மனங்கோணாமல் மகிழ்ச்சி அடையுங்கள். ஏனென்றால் அவர்களுடைய உணவை அவர்களே கொண்டு வருகிறார்கள்.

★ பெருமைக்காக ஆடை அணிகின்றவருக்கு வாழ்வில் வறுமை உண்டாகும்.

★ எல்லோரும் ஒன்று கூடி உண்ணுங்கள். பிரிந்து விடாதீர்கள். ஒன்று கூடி இருப்பதில் தான் "பரகத்" இருக்கிறது.

★ நீங்கள் இரவில் பட்டினியாக இருக்காதீர்கள். பட்டினி இருப்பதால் விரைவில் உங்களுக்கு முதுமை தட்டிவிடும்.

★ உணவுப் பண்டங்களை பதுக்காமல் மக்கள் தேவைக்கு விற்பனை செய்யும் வியாபாரி அல்லாஹ்வின் பேரருளைப் பெற்றவராவார்.

★ நாவு நேர்மையாக இருக்குமானால் ஒருவனுடைய இதயம் நேர்மையான வழியில் செல்லும்.

★ பழித்துரைத்தல், ஒழுக்கம் கெட்ட முரட்டுத்தனமான பேச்சுக்கள் ஆகிய இரண்டும் நயவஞ்சகத்தின் இரு கிளைகளாகும்.

# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## தீ



உணர்வுகள் தீ போன்றவை. உணர்வுகள் என்ற நெருப்பில் நீங்கள் எதைப் போட்டாலும் எரிகிறது.

நச்சுப்பொருட்களை நீங்கள் எரித்தால் அது தூய்மைக்கேட்டையும் துர்நாற்றத்தையும் ஏற்படுத்துகிறது. ஆனால் சந்தனமரத்தை எரித்தால் அது நல்ல நறுமணத்தைத் தருகிறது.

வாழ்க்கைக்கு ஆதாரமாக உள்ள அதே தீ அழிவுச் சக்தியாகவும் கூட மாறக்கூடும். சொக்கப் பானையைச் சுற்றிக் கொண்டாட்டம் ஏற்படுகிறது. சுடுகாட்டில் ஈமத்தீயைச் சுற்றித் துக்கம் ஏற்படுகிறது. இறப்பர் சக்கரம் எரிவதால் எழும் தீ நச்சுப் புகையை உண்டாக்குகிறது. நெய் விளக்கின் சுடர் இருள் அகற்றி ஒளி தருகிறது. சுற்றுச்சூழலைத் தூய்மைப்படுத்துகிறது.

உங்களுடைய தீப்புகை மூட்டத்தையும் தூய்மைக்கேட்டையும் ஏற்படுத்தும் தீயா? அல்லது நல்லொளியையும் நறுமணத்தையும் ஏற்படுத்தும் கற்பூரச் சுடரா? ஒரு சாது, அன்பு எனும் நல்லொளியையும் நறுமணத்தையும் தருகிறார். வாழ்க்கைக்கு வழிகாட்டும் உற்ற தோழர் அவர்.

ஒளியையும் மித வெப்பத்தையும் தந்து உபயோகமாக இருக்கும் தீ உயர்தரமானது.

ஒளியையும் சிறிது புகையையும் வெளிப்படுத்தும் தீ நடுத்தரமானது.

கரும்புகையைக் கக்கி இருளைத்தரும் தீ கீழ்த்தரமானது.

வெவ்வேறு வகையான தீச்சுடர்களை வேறுபடுத்தி அறியக் கற்றுக் கொள்ளுங்கள்.

உங்களுடைய ஐம்புல உணர்வுகளும் நல்லனவற்றில் ஈடுபடும்போது நீங்கள் ஒளியையும் நறுமணத்தையும் பரப்புகிறீர்கள்.

அசுத்தத்தில் ஈடுபடும்போது நீங்கள் கரும்புகையையும் இருளையும் பரப்புகிறீர்கள்.

உங்களுக்குள் உறையும் தீயின் தரத்தை மாற்றுவது ஸம்யமா. அடுத்தவாரம் ஸம்யமா பற்றிப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டி அருணோதயக் கல்லூரி மாணவிகள் சாதனை







வடமாகாண பாடசாலைகளுக் கிடையிலான சதுரங்கப்போட்டியில் அருணோதயக்கல்லூரி மாணவி கள் சாதனை படைத்துள்ளனர். கடந்த 13,14,15 ஆம் திகதிகளில் யாழ்.இந்துக் கல்லூரியில் நடை பெற்ற மாகாணமட்ட சதுரங்கப் போட்டியில் அருணோதயக் கல் லூரியின் 19வயதுப் பெண்கள் அணி சம்பியனாகிச் சாதனை படைத்ததுடன் 15வயதுப் பெண்கள் அணி 3ஆம் இடத்தினையும் பெற் றது. 19வயதுப் பெண்கள் அணி தொடர்ச்சியாக 6ஆவது வருடமாக வலயச் சம்பியன்களாகத் திகழ்கின் றமை குறிப்பிடத்தக்கது.

இவ்அணியின் தலைவியாக செல்வி தே.உமையாழினியும் ஏனைய வீராங்கனைகளாக ஸ்ரீ.வேதிகா, க.தனுசியா,இ.நிருசா, ச.நிருசா,ஜெ.வினுசா,நி.பிரு ந்திகா ஆகியோரும் உள்ளனர்.இவ் அணி 5ஆவது தடவையாக தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொள்கின்ற மையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இம்முறை வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் மாகாணப் போட்டியில் வெற்றி பெற்ற ஒரேயொரு பாடசாலை அணி யினராக அருணோதயக் கல்லூரி திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ் அணியினருக்கு பயிற்றுன ராக ஆசிரியர் அ.சுமந்திரனும் பொறுப்பாசிரியராக திருமதி எஸ். பங்கஜவதனியும் கடமையாற்றுகி ன்றமை குறிப்பிடத்தக்கது.

போட்டி முடிபுகள்

சம்பியன்கள்

15 வயது பெண்கள் பிரிவு- மெதடிஸ் கல்லூரி,பருத்தித்துறை

15 வயது ஆண்கள் பிரிவு- ஹாட்லிக்கல்லூரி

19 வயது பெண்கள் பிரிவு- அருணோதயக் கல்லூரி

19 வயது ஆண்கள் பிரிவு- ஹாட்லிக்கல்லூரி. (க)




வடமாகாண பாடசா லைகளுக்கிடையிலான கராத்தே போட்டியில் நல் லூர் தெற்கு விக்னேஸ் வரா வித்தியாலய மாண வன் எ.நிக்சன் 17 வயதுப் பிரிவு கராத்தே போட்டி யில் வெண்கலப் பதக்கம் பெற்றார்.

இவருடன் வடமாகாண பிரதிக்கல்விப் பணிப்பா ளர் க.சத்தியபாலன், உடற்கல்வி உதவி இயக் குநர் சன் தயாளன் மற்றும் பிரதான கராத்தே பயிற்சி ஆசிரியர் சென். கே. விஜயராஜை படத்தில் காணலாம்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வவுனியா வளாகத்தினால் அமரர்.பேராசிரியர் நா.பால கிருஸ்ணன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான வவுனியா மாவட்ட அரசு திணைக் களங்களுக்கான கிரிக்கெட் போட்டிகளில் வவுனியா தபாலக அணி வெற்றி பெற்று மாவட்ட சம்பியனாக தெரிவாகியது. அவ் அணியினரை படத்தில் காணலாம். (க-250)

# பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே சென்.ஜோன்ஸ் மாணவர்கள் சாதனை



வடமாகாண பாடசாலைகளுக் கிடையிலான கராத்தே போட்டியில் 9பதக்கங்களை பெற்று சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

வடமாகாண பாடசாலைகளு க்கிடையிலான கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் வவுனியா C.T.M.C. வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரி யின் 15,17 வயதுப் பிரிவு கராத்தே அணியினர் 5 தங்கப்பதக்கங்கள், 2 வெள்ளிப்பதக்கங்கள் உட்பட 9 பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.



இதில் A.தனுசன் 3 தங்கப்பத க்கம் பெற்று சாதனை படைத்தார். இவர்கள் காட்டா, குமுகாட்டா, குமித்தே போட்டி யில் பங்குபற்றி யமை குறிப்பிடத் தக்கது.

வடமாகாண பரதிக் கல்விப் பணி ப்பாளர் க.சத்திய பாலன், உடற்கல்வி உதவி இயக்குநர் சன் தயாளன் மற் றும் பிரதான கரா த்தே பயிற்சியா ளர் சென்.கே.விஜயராஜ் மற்றும் பயிற்றுனர் பிரதான ஆசிரியர்களை படத்தில் காணலாம். (க)

# கூடைப்பந்தாட்டத் தொடர் சென்றலைட்ஸ் அணி சம்பியன்

கே.சி.சி.சி விளையாட்டுக்கழகம் நடத்திய இருபாலருக்குமான கூடை ப்பந்தாட்டத் தொடரில் ஆண்களுக கான இறுதி ஆட்டத்தில் சென் றலை ட்ஸ் அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது. கடந்த ஞாயிற்றுக கிழமை கொக் குவில் இந்துக்கல்லூரி கூடைப் பந தாட்டத்திடலில் மின்ஒளியில் இடம பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்ட த்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணிமோதிக் கொண்டது.

ஆட்டத்தின் முதல்சுற்றின் முடிவில் சென்றலைட்ஸ் அணி 16 புள்ளிகளை யும் ஜொலிஸ்ரார் அணி 13 புள்ளிக ளையும் பெற்றது. ஆட்டத்தின் இரண் டாவது சுற்றிலும் ஆதிக்கம் செலுத் தத் தவறவில்லை சென்றலைட்ஸ். இரண் டாம் சுற்றில் முடிவில் சென்ற லைட்ஸ் 23 புள்ளிகளையும் ஜொலிஸ்ரார் அணி 8 புள்ளிக ளையும் பெற்றிருந்தது.

ஆட்டம் இடைவேளைக்காக நிறுத் தப்பட்ட போது சென்றலைட்ஸ் அணி 39:21 என்ற புள்ளிகளின் அடி ப்படை யில்முன்னிலையில் இருந்தது. மூன் றாம் சுற்றின் முடிவில் சென்றலை ட்ஸ் அணி 19புள்ளி களையும் ஜொலிஸ்ரா அணி 13புள்ளிகளையும் பெற்றனர்.

முதல் மூன்று சுற்றுக்களிலும் கணிசமான ஆதிக்கம் செலுத்தி சென்றலைட்ஸ் 73:57 என்ற புள்ளி களின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது. ஆட்ட நாயக னாக சென்றலைட்ஸ் அணி வீரன் கர்சன் தெரிவானார். தொடராட்ட நாயகனாக ஜொலிஸ்ரார் அணி வீரன் சிவதாஸ் தெரிவானார். (க)

# மாவட்டமட்ட பளுதூக்கல் போட்டி யாழ்.இந்துக்கல்லூரி வெற்றி

யாழ்.மாவட்ட பளுதூக்கும் சங்க த்தினால் நடத்தப்பட்ட மாவட்ட ரீதியிலான பளுதூக்கும் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி 4 தங்கம், 3 வெள்ளி, 5 வெண்கலப்பதக்க ங்களை பெற்றுள்ளது.

இப் போட்டிகள் கடந்த சனிக்கி ழமை சென். ஜோன்ஸ் கல்லூரி யில் நடைபெற்றது.

இதில் எஸ்.நிதுல் .(85 கிலோ கிராம்), எஸ்.அபிஷேக் (94 கிலோ கிராம்) , பி.துவாரகன் (69 கிலோ கிராம்) , நித்திய பிரகாஷ் (105 கிலோகிராம்) ஆகியோர் முதலி டத்தையும் ரி.சிறிசன்(94 கிலோ கிராம்), ஆர்.பிரகலாதன் (85 கிலோகிராம்),எஸ்.மைத்ரேயன் சர்மா (105 கிலோகிராம்) ஆகி யோர் இரண்டாம் இடத் தையும் அ.அபினயன் (56 கிலோ கிராம்), அ.ஜெடிஸ் பூட் (69 கிலோகிராம்), கே. திசாந்த் (94 கிலோகிராம்) , எஸ்.இன்பராஜ் (105 கிலோகிராம்) , எஸ்.கிரிஷன் (105 கிலோகிராம்) ஆகியோர் முன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டனார்.

இவ் வீரர்களுக்கான பயிற்றுவிப் பாளராகவும் பொறுப்பாசிரியரா கவும் எஸ்.திருமாறன் செயற்பட் டமை குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கத்துப் புலியிடம் சரணடைந்தது இந்தியா

இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் பங்களாதேஷ் அணி 79 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இந்தியா-வங்காள தேசம் அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி மிர்புரில் பகல்- இரவு ஆட்டமான நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பாட்த்தை தேர்வு செய்த வங்கள தேச அணியினர் தொடக்கம் முதலே அதிரடியாக ஆடினர்.

வங்கள தேசம் அணி 15.4 ஓவரில் 119 ரன்கள் எடுத்திருக்கும்போது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. தமீம் இக்பால் 57 ரன்னுடனும், தாஸ் 3 ரன்னுடனும் களத்தில் இருந்தனர். பின்னர் மழை விட்டதும் மீண்டும் ஆட்டம் தொடங்கியது. மழையினால் பந்துவீச்சுக்கு சாதகமாக பிட்ச் மாறிய நிலையில் 49.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த வங்கதேசம் 307 ரன்கள் குவித்தது.

இதையடுத்து 308 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய இந்தியாவின் தொடக்க வீரர்களாக ரோகித் சர்மா, தவான் ஆகியோர் களமிறங்கினர். நிதானமாக ஆடிய தவான் 16-வது ஓவரில் 30 ரன்களுடன் அவுட்டானார். பின்னர் களமிறங்கிய கோலி 4 பந்துகளிலேயே 1 ரன்னுடன் வெளியேற அடுத்து வந்த ரகானே 25 பந்துகளில் 9 ரன்னுடனும் வெளியேற அணியின் சரிவு தொடங்கியது.

இறுதியில் 46 ஓவர்கள் முடிவில் 228 ஓட்டங்களில் இந்தியா அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து ஆட்டம் இழந்தது:

உலகக்கோப்பை காலிறுதியில் பெற்ற தோல்விக்காக இந்தியாவை பழி வாங்க நினைத்திருந்த வங்கதேசம் அதை சிறப்பாக செய்து முடித்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக பங்களா தேஷ் அணியின் ரகுமான் தெரிவானார்.(க)



## கேள்வி அறிவித்தல்
## கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை, முல்லைத்தீவு

01.செம்மலை பாடசாலைக்கருகாமையில் நீர்வினியோகம் செய்தல் NP/14/44(1)/3/6/PSDG/2/2015

ஒப்பந்த இல:-NP/14/44(1)/3/6/PSDG/2/2015

01. கரைதுறைப்பற்று பிரதேச சபை மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்ட நிதியினை கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், பெறுகைக்குழு, கரைதுறைப்பற்று பிரதே சபை, முல்லைத்தீவு, வட மாகாணம். தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
03. கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டிட அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு (தொலைபேசி:-024 324 3542, தொலைநகல்:-0212290001 Email:-pskpattu@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 10.07.2015 வரை காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான வேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு எனும் இடத்திலிருந்து 19.06.2015ஆம் திகதியிலிருந்து 10.07.2015 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 02.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 1500.00 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு எனும் முகவரிக்கு 10.07.2015ஆம் திகதி மாலை 02.30 மணிக்கு முன்பதாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்விகளான்து கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து வேலை 63 (அறுபத்திமூன்று-11.09.2015) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்தக் காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01. | NP/14/44 (1)/3/6/PSDG/2/2015 | செம்மலை பாடசாலைக் கருகாமையில் நீர்விநியோகம் செய்தல் | 2.0 | 2 மாதம் | C9 அல்லது அதற்கு மேற்பட்டது | 20000.00 | 09.10.2015 |

11. கேள்விகோரல் பற்றியமுன் கூட்டிய கூட்டம் 02.07.2015ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு. அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

தலைவர்
உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,
கரைதுறைப்பற்று, பிரதேச சபை,
முல்லைத்தீவு, வட மாகாணம்.
18.06.2015

(சி-1322)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை-பளை புலோப்பளை உப அலுவலக பொதுச் சந்தை, ஆட்டிறைச்சிக்கடை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல்-2015

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் அதிகாரத்திற்குட்பட்ட கீழ்க்காணும், இறைச்சிக் கடைகள், பொதுச் சந்தைகள் 01.07.2015 தொடக்கம் 31.12.2015 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 19.06.2015 முதல் 26.06.2015 பிற்பகல் 4.00 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி:- 29.06.2015 காலை 10.00 மணி வரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:- 29.06.2015 பி.பகல் 1.30 மணி

### நிபந்தனைகள்

1. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசபை, பளை என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு 2015.06.29 ஆம் திகதி மு.பகல் 10.00மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் தமது தே.அ.அட்டை/ செல்லுபடியான கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதி , கோரிக்கைக் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்பட மாட்டாது.
4. கேள்வி நிபந்தனை அறிவுறுத்தலுக்கமையாத கேள்விக் கோரிக்கையை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரமுண்டு.
5. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
6. கேள்விப்பத்திரங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணமும் செலுத்தி பிரதேசசபையின் தலைமைக் காரியாலயத்தில் மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
7. தெரிவுசெய்யப்படும் கேள்விகாரர் கேள்வித்தொகை 300,000.00 ரூபாவுக்குட்பட்ட தொகையாயின் கேள்வித் தொகையின் 1/2 பகுதியையும் 300,000.00 இற்கு மேற்பட்ட தொகையாயின் 1/3 பகுதியையும் கேள்வி திறக்கப்படும் திகதியில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.
8. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | குத்தகை விபரம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புத் தொகை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| | புலோப்பளை உபஅலுவலகம் | | | |
| 01 | ஆட்டிறைச்சிக்கடை (ஆறுமாத காலம்) | 15000.00 | 1500.00 | 1000.00 |
| 02 | பொதுச்சந்தை (ஆறு மாத காலம்) மீன்சந்தை,சைக்கிள் பாதுகாப்பு நிலையம் உட்பட | 430,000.00 | 20,000.00 | 1000.00 |

ப. ரிஷிதாசன்
உப,தவிசாளர்
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை

திகதி:-2015.06.19

(சி-1323)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலம்புரி ஆசிரியர்...

பகலுக்குப்பின் பத்திரிகையாளர்கள் வரப்போவதாகச் சொன்னார்கள். பத்திரிகையாளர்கள் கூட்ட செய்தி பற்றிக் கேட்டதற்குப் பதிலளித்தது நானேதான்.

"அந்தப் பதிலில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனிடம் விளக்கம் கேட்கப்பட வேண்டுமென்று தீர்மானமெதுவும் எடுக்கப்படவில்லை. நான், ஒழுங்கு நடவடிக்கை எடுத்து விளக்கம் கேட்கப்படும் என்று பத்திரிகைகளுக்குச் சொல்லவுமில்லை.

உண்மையென்னவெனின் 09.06.2015 வெளிவந்த பத்திரிகைச் செய்திகள் "தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சிலர் தெற்கிற்கு அழைக்கப்பட்டு பெருமளவு நிதி வழங்கப்பட்டுள்ளதென்று வடக்கு மாகாண முதலமைச்சர் ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளார்" எனக் கூறின.

பத்திரிகையாளர் பலர் என்னிடம் கருத்துக் கேட்டபொழுது "நான் நீதியரசர் பெயரில் அப்பத்திரிகை செய்திகள் வந்திருக்கின்றன. நான் அவரிடம் அச் செய்தி பற்றிய கருத்தை அறிந்த பின்தான் பத்திரிகைகளுக்குப் பதிலளிப்பேன்" என்று கூறியுள்ளேன்.

நீதியரசர் விக்னேஸ்வரன் சொன்னதான செய்திகளை வைத்துக் கொண்டு இணையத்தளங்களில் சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு 126 மில்லியன், மாவை சேனாதிராசாவுக்கு 26 மில்லியன், சுமந்திரனுக்கு ஆடம்பரக் கார் என்று வந்ததையெல்லாம் நீங்கள் சரியென்று சொல்கிறீர்களா? "வடக்கு மாகாணத்திற்கான நிதியென்றால் அதனை த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரிடம் கையளிக்கலாம், அது தவறு என்று தொடர்ந்து சொல்கிறீர்கள். அப்படி அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் கையிலும் அரச நிதி கையளிக்கப்படுவதில்லை. திரு. சுரேஸ் பிரேமச்சந்திரன் அதற்குப் பத்திரிகையாளர் மாநாட்டிலே விளக்கமளித்துள்ளார்.

அடுத்து எனது பெயரில் "26 மில்லியன் கொடுக்கப்பட்டது" என்றிருக்கிறது. இது முழுக்க முழுக்க அப்பட்டமான பொய்ச்செய்தி. நான் அச் செய்திக்கு உடன் பதிலளிப்பதற்காக நீதியரசரின் பதிலுக்காகக் காத்திருந்தேன்.

நீங்கள் உண்மைகளையும், தார்ப்பரியத்தையும் அறியாமல் எழுதியிருப்பதையிட்டு மனம் வருந்துகிறேன். "இணையத்தளங்களில் மட்டுமல்ல அச் செய்தியை வைத்துக்கொண்டு நாங்கள் சோரம் போய் விட்டோம்" என்று பத்திரிகையில் கட்டுரைகள் வருவதையெல்லாம் நீங்கள் ரசித்துக்கொள்வீர்களாயின் நாங்கள் பரிதாபத்துக்குரியவர்கள்தான் என்றுள்ளது. (எ-11)

# மேலும் 30 பேருக்கு...

நீதிமன்ற வளாகத்துக்குள் கடந்த 20 ஆம் திகதி குழப்பம் விளைவித்து, நீதிமன்ற கட்டட கண்ணாடிகளை உடைத்தமை, வளாகத்தினிருந்த வாகனங்களைச் சேதப்படுத்தியமை, யாழ் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த பொலிஸ் கண்காணிப்பகத்தை உடைத்தமை மற்றும் சத்தர்ச் சந்தி வீதிச்சமிக்ஞை விளக்கை உடைத்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் 130 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, தனித்தனியாக குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதில் முதலாம் மற்றும் இரண்டாம் பிரிவுகளான யாழ். நகரத்தில் குழப்பம் விளைவித்தமை, பொலிஸ் காவலரண் மீது தாக்கியமை, சமிக்ஞை விளக்கை சேதப்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் பதிவு செய்யப்பட்ட 47 பேரில் 2 மாணவர்களுக்கு முதலாவது வழக்குத் தவணையில் பிணை வழங்கப்பட்டது.

மிகுதி 45 பேரில் 15 பேருக்கு கடந்த வழக்குத் தவணையில் பிணை வழங்கப்பட்டது. மிகுதி 30 பேர் விளக்கமறியலில் நேற்று வியாழக்கிழமை வரை வைக்கப்பட்டனர். வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதவான் பிணை வழங்கினார்.

புங்குடுதீவு மாணவியொருவர் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து யாழ்.நகரத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தே மேற்படி அசம்பாவிதங்கள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

# மாவை எம்.பியின் கடிதத்திற்கு பதில் கொடுத்தார் முதலமைச்சர்

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் தனித்தனியாக நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொண்டதாக வடமாகாண முதலமைச்சர் ஜனாதிபதியிடம் தெரிவித்த முறைப்பாடு தொடர்பில் விளக்கம் அளிக்குமாறு கேட்டு தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா அனுப்பியிருந்த கடிதத்துக்கு பதில் அனுப்பியுள்ளார் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

தனது முறைப்பாடுகள் தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஊடகங்களுக்கு வெளிப்படையாகவும் நேர்மையாகவும் தெரிவித்துள்ள தகவல்களுக்கு மேலாக ஆதாரங்கள் எதனையும் தான் வழங்க வேண்டிய தேவை இல்லை எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

செயற்திட்டங்களுக்கென்று நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமையை சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளிப்படையாக கூறியது போல, ஏனையோர் இது விடயத்தில் வெளிப்படையாக இன்னமும் கருத்துத் தெரிவிக்காது கவலையளிக்கிறது என்றும் மாவை சேனாதிராசாவுக்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்தில் தெரிவித்துள்ள முதலமைச்சர் விக்னேஸ்வரன், சுரேஸ் பிரேமச்சந்திரனைப் போல் ஏனையவர்களும் வெளிப்படையாகத் தமது நிலைப்பாட்டை மக்களுக்கு தெரிவிக்க முன்வரவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். முதலமைச்சர் விக்னேஸ்வரன் அனுப்பிய கடிதத்தின் விபரம் வருமாறு.

இணையத்தளங்களில் வெளி வந்த செய்திகளுக்கு விளக்கமெதுவும் கொடுக்க வேண்டிய பொறுப்பு எனக்கில்லை. ஆனால் ஜனாதிபதியிடம் தெரிவித்த முறைப்பாடு குறித்து பதிலளிப்பதற்குக் கடமைப்பட்டுள்ள நான் இக்கடிதத்தை எழுதுகின்றேன்.

எமது மக்களின் வாயிலாக நாம் அறிந்து கொள்ளும் விடயங்களையே நம்பிக்கையானவையாக எடுத்துக்கொண்டு நாம் மக்கள் நலம் கருதி வெளியிடுகின்றோம். அவற்றை சம்பந்தப்பட்டவர்கள் பிழையேதும் செய்யவில்லை என்று அவர்கள் நினைத்தால் அதைப் பகிரங்கமாகக் கூறலாம் என்றார். (எ-11)

# பாடசாலை இடைவேளை...

பாடசாலை ஒன்றில் தரம் 11 இல் கல்வி பயிலும் மாணவன் ஒருவரை தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவர் ஒருவர் கத்தியால் வெட்டி காயப்படுத்தியுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் பாடசாலை இடைவேளை நேரத்தின் போது நடைபெற்றுள்ளது.

கத்தி வெட்டுககு இலக்கான மாணவனின் முகத்தில் சுமார் நான்குக்கும் மேற்பட்ட பெரும் காயங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் இடம்பெற்றதையடுத்து பாடசாலை சமூகத்தினர் அதிபர் தலைமையில் விசாரணைகளை மேற்கொண்டதுடன் அவ்விடயம் தொடர்பில் பொலிஸாரின் கவனத்துக்கும் கொண்டு சென்றனர்.

இதனையடுத்து யாழ.தலைமை பொலிஸ் நிலையம் பொறுப்பதிகாரி எவ்.யு.வூட்லர் பாடசாலைகளுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். இச்சம்பவம் தொடர்பில் பிரஸ்தாப மாணவர்களின் பெற்றோர்களும் பாடசாலைக்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர். அத்துடன் வெட்டுவதற்குப் பயன்படுத்திய கத்தியையும் பொலிஸார் பெற்றுக் கொண்டனர்.

இவ் வாள் வெட்டுச் சம்பவத்துக்கு குழு மோதல் ஒன்றே பின்னணியாக உள்ளதென பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இவ் வாள்வெட்டுக்குக் காரணமான பின்னணி குறித்து பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். (எ-4)

# பிரதமர்...

மன்ற உறுப்பினராக இருந்து பின்னர் அமைச்சராகவும் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் இருந்துள்ளார். இதற்கு மேல் அவருக்கு என்ன வழங்க வேண்டும்?

இதேவேளை மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, முன்னாள் பிரதமர்கள் இருவர் ஆகியோரை ஜனாதிபதியின் ஆலோசகர்களாக நியமித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமது கட்சியை வளர்ப்பதற்கு உதவிகளையும் ஆலோசனைகளை வழங்குமாறும் அவரகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் நாட்டை சர்வாதிகாரத்தில் இட்டுச் செல்ல முடியாது எனவும் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் ஆட்சி போன்று நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டதாக அமைச்சர் ராஜித தெரிவித்தார். (எ-11)

# போதைப்...

படும் போதையை ஏற்படுத்தக் கூடிய பாக்கு வகைகள் என கூறப்பட்டது.

மேலும் குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வூட்லர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

போதைப்பாக்கை விற்பனை செய்தார்கள் வண்ணார்பண்ணை மற்றும் ஓட்டுமடம் பகுதியில் இருந்து போதைப்பொருட்களை குறித்த மாணவர்களுக்கு விநியோகித்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதன் பின்னர் குறித்த சந்தேக நபர்களிடமிருந்து போதைப் பொருள் தயாரிக்கும் உபகரணங்கள் சிலவற்றை யாழ்ப்பாண பொலிஸார் கைப்பற்றினர்.

மேலும் குறித்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-4)

# போதைப் பாக்...

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது குற்றஞ்சாட்டப்பட்டவரை எதிர்வரும் 22-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறைமாவட்ட நீதவான் மா.கணேசராஜா உத்தரவிட்டார். (எ-60)

# மோ.சைக்கிள்...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப் பரிதாபச் சம்பவம் நேற்று நள்ளிரவு ஒருமணியளவில் வடமராட்சியில் வல்லைச் சந்திப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கெருடாவில் தொண்டைமானாறைச் சேர்ந்த மூன்று இளைஞர்களில் செந்தில்வேல் துவாகர் (வயது 18) என்பவரே உயிரிழந்தவராவார். ஆனந்தராஜா அனோஜன் (வயது 18) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வேலாயுதன் சிவரூபன் (வயது 20) என்பவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலியில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றுக்காகச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே மோட்டார் சைக்கிள் சில்லு கழன்று போனதால் இந்த விபத்து இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-3.60)

# வன்செயலை...

தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. குறித்த சைக்கிள் ரோந்து சேவையை யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வூட்லர் ஆரம்பித்து வைத்தார்.

குறித்த சேவையினூடாக யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்செயல்களை கட்டுப்படுத்தும் முகமாகவும், போதைப் பொருட்களை மாண[illegible]ர்கள் மத்தியில் விநியோகிப்பவர்களை மறைமுகமாக கண்டுபிடிக்கவும், சட்டவிரோத மதுபான விற்பனை போன்றவற்றுடன் முக்கியமாக வீதிகளில் செல்லும் பெண்களுக்கு இடையூறு மற்றும் தகாத வார்த்தை பிரயோகங்களை மேற்கொள்பவர்கள் என்பவர்களை கண்காணிக்கவும் குறித்த சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறான பொலிஸாரின் சைக்கிள் ரோந்து சேவை மக்களுக்கு மட்டுமல்லாது பாடசாலை மாணவர்கள் மத்தியில் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், மாணவர்கள் தமது கல்வி[illegible] இடையூறு இல்லாமல் தொடர்வதற்கு வழிவகுக்கும் எனவும் யாழ. பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வூட்லர் தெரிவித்தார். (எ-4)


## வேலைவாய்ப்பு

பாதுகாப்பு கமரா (CCTV CAMERA) பொருத்தும் நிறுவனத்திற்கு பாதுகாப்பு கமரா பொருத்துவதற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.

உங்கள் சுயவிபரக் கோவையினை 25.06.2015 இற்கு முதல் கிடைக்க கூடியவாறு தபாலிலோ அல்லது நேரடியாகவோ கீழ் கண்ட முகவரியில் ஒப்படைக்கவும். (C-1321)

AJ SYSTEMS PVT LTD 315, 1/2 PALALY ROAD, PARAMESWARA JUNCTION, JAFFNA. 021 567 6767

## B.A பேராதனைப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)

- மேற்படி பதிவுகள் எமது நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்படுகிறது.
- தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாமுடன் விரிவுரைகள் எமது நிறுவனத்திலேயே நடைபெறும்.
- A/L 3 பாடங்களும் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க தகுதி உடையவர்.
- 20.06.2015 அன்று அனைத்து மாணவர்களும் தங்கள் பதிவை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

(791)

NJT பட்டப் படிப்பு பலாலி றோட், இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம். T.P: 0776624387

## மாபெரும் பொருளியல் கருத்தரங்கு

பொருளியல் பேராசான் உதயன்

- 8,9,10,13 யூலை, ஆகிய தினங்களில் நடைபெறும்.
- இம்முறை வெளிமாணவர்களும் பங்குபற்ற முடியும்.
- உங்கள் பதிவை முற்கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- இந் நிறுவனத்தில் மட்டுமே யாழ்.நகரில் ஆசிரியரின் கருத்தரங்கு நடைபெறும்.

(791)

ECONOMICS HALL நாவலர் றோட், யாழ்ப்பாணம். T.P : 0776624387

## வேலைவாய்ப்பு

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒனறிற்கு Customer Service Assistant (பெண் ஊழியர்) உடன்தேவை. 1 Km சுற்று வட்டாரத்துக்குள் உள்ளவர்களுக்கு முன்னுரிமை உண்டு. (C-1325)

தொடர்பு Gobi : 0775385494

யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக...



Photo Quality

- பந்தல் பிறிண்டிங்
- பனர் பிறிண்டிங்
- பெயர் பதாகைகள்
- ஸ்ரிக்கர்கள்
- லைட் பதாகைகள்

அதிரடி விலைக்கழிவில்

ஜனா டிஜிற்றல் பிறிண்டிங்

Jana Digital Printing

(C-1305)

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம். T.P. 021 221 3233, 0770731654


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org